# செம்மணி

நிலம் 2 துகள் 62 வள்ளுவர் ஆண்டு 2052, 25 புரட்டாதி - 01 ஐப்பசி 2021 வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-


## ஐப்பசி முதலாம் திகதி நாடு திறக்கப்படும்

கொழும்பு, புரட்டாதி 25

கடந்த ஐந்து வாரங்களாக தனிமைப்படுத்தல் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு மூடப்பட்டுள்ள நாடு அடுத்த மாதம் முதலாம் திகதி மீண்டும் திறக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணியின் கூட்டத்தில் ஊரடங்கு உத்தரவை மேலும் நீடிப்பது தொடர்பான எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை. பதிலாக ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டால் நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டுப்பாடுகள் மற்றும் சுகாதாரப் பரிந்துரைகள்

பக்கம் 02



## பெற்றோல் கொள்வனவுக்காக கையேந்துகின்றது கொழும்பு

கொழும்பு, புரட்டாதி 25

கொரோனா பெருந்தொற்றால் கடும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இலங்கை எரிபொருளை இறக்குமதி செய்வதற்காக 500 மில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடனாகப் பெறுவதற்கு இந்தியாவுடன் பேச்சுக்களை நடத்தி வருகின்றது.

அரச தலைவரின் செயலாளர் பி.பி.ஜெயசுந்தர இந்தத் தகவலை உறுதிப்படுத்தினார். எரிபொருள் கொள்வனவு மற்றும் தாமதமாகியுள்ள கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக இந்தக் கடன் உதவியை பெறுவதற்கு முயற்சிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

மசகு எண்ணெய்யை நீண்டகாலக் கடன் திட்டத்தின் கீழ் ஐக்கிய அரபு எமிரேட்ஸிடம் இருந்து கொள்வனவு செய்வதற்கான பேச்சுக்களை கடந்த சித்திரை மாதம் முதல் பெற்றோலியத்துறை அமைச்சர் உதய கம்பன்பில நடத்தி வந்தார்.

கடந்த 20ஆம் திகதி நடந்த பேச்சுக்களைத் தொடர்ந்து இந்த விடயத்தில் சாத்தியமான முன்னேற்றங்கள் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் இலங்கை பெற்றோலியக்

பக்கம் 02



இனி உவையள் வரமாட்டினம்

03



கொக்கிற்கு நரி கொடுக்கும் விருந்து

05

## பாடசாலைகளை திறக்கத் திட்டம்

கொரோனா ஊரடங்கு நீக்கப்பட்டதும் பாடசாலைகளைத் திறப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. முதற் கட்டமாக 1 முதல் 5 வரையான வகுப்புகளுக்கு மாணவர்களை அனுமதிப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

நான்கு கட்டங்களாக அனைத்துப் பாடசாலைகளையும் திறப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு தெரிவித்தது. இதன்படி முதல் கட்டத்தில் 3 ஆயிரத்து 884 பாடசாலைகள் திறக்கப்படவுள்ளன.

கொரோனா தடுப்பூசி போடப்படவில்லை என்றாலும் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களை மீண்டும் பாடசாலைக் கல்வி

பக்கம் 02



## சிறுவர்களுக்கான தடுப்பூசி ஏற்றல் தொடங்கியது

இலங்கையில் சிறுவர்களுக்கும் கொரோனா தடுப்பூசி ஏற்றும் பணி நேற்றுத் தொடங்கியது.

பக்கம் 02

### கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலைய விவகாரத்தில்

## கூட்டணிக் கட்சிகளை சமாளிக்கும் ராஜபக்சக்களின் முயற்சி தோல்வி

கொழும்பு, புரட்டாதி 25

கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு விற்பதற்கு ஆட்சியாளர்கள் எடுத்திருக்கும் முடிவை எதிர்க்கும் பொது ஜன பெரமுன கூட்டணிக் கட்சித் தலைவர்களைச் சமாளிக்கும் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச மற்றும் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச ஆகியோரின் முயற்சி பிசுபிசுத்துப் போயிருக்கின்றது.

கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகளை விற்பதற்கான முடிவு அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், இந்த விடயம் அமைச்சரவையில் ஆராயப்படவில்லை என்றும் அது குறித்து ஒரு சிறு தகவல் மட்டுமே அமைச்சரவைக் கூட்டம் முடியப்போகும் தறுவாயில் நிதி அமைச்சரால் முன்வைக்கப்பட்டது என்றும் தெரிவித்து பெரமுனவில் இருக்கும் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அமைச்சர்கள் விமல் வீரவன்ஸ, உதய கம்பன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் அரசின் இந்த முடிவைப் பகிரங்கமாகவே எதிர்த்தனர். கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகள் அமெரிக்காவுக்கு விற்கப்படக்கூடாது என்று பகிரங்கமாகவே தெரிவித்தனர்.

இதையடுத்து, தனது வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அலரி மாளிகையில் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பில் கூட்டணிக் கட்சித் தலைவர்களான அமைச்சர் தினேஸ் குணவர்த்தன, அமைச்சர் வாசுதேவ



நாணயக்கார, அமைச்சர் விமல் வீரவங்ச, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் லங்கா சமசமாஜக் கட்சித் தலைமைச் செயலர் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ரமேஸ்வரன், ஐக்கிய மக்கள் கட்சியின் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதித் தலை

பக்கம் 02

## சவப் பெட்டிகளை ஏற்றுகிறது இலங்கை

கொழும்பு, புரட்டாதி 25

கொவிட்-19 உயிரிழப்பு அதிகரிப்பை அடுத்து இலங்கை தயாரிக்கத் தொடங்கியிருக்கும் கார்ட் போர்ட் சவப் பெட்டிகளை வியட் நாம் நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.



முதற் கட்டமாக ஆயிரத்து 200 சவப் பெட்டிகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

கொவிட்-19 உயிரிழப்புகள் அதிகரிப்பை அடுத்து மௌண்டலவேனியா நகர சபையால் இந்த கார்ட் போர்ட் சவப் பெட்டிகள்

பக்கம் 02

செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிரீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

ஆசிரியர்: தே.பிரேமானந்த்

# அரச தலைவரின் உரை வெறும் ஏமாற்று வித்தை

ஐக்கிய நாடுகள் பேரவையின் பொதுக் கூட்டத் தொடரில் இலங்கை அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச ஆற்றிய உரை தமிழர்களால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகவும் விசனத்தையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

அவரது உரையில் நாட்டில் இனப் பிரச்சினையொன்று உள்ளது என்பதையோ தமிழ் பேசும் மக்கள் அரசியல் தீர்வு ஒன்றை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள் என்பதையோ குறிப்பிட்டுக் காட்டும் விதத்தில் எதுவும் கூறப்படவில்லை.

நீடித்த அமைதியை நாட்டுக்குள் ஏற்படுத்திக்கொள்ள தேசிய நிறுவனங்களின் ஊடான பொறுப்புக்கூறல், மறுசீரமைக்கப்பட்ட நீதி, அர்த்தமுள்ள நல்லிணக்கம் என்பவற்றை ஏற்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது என்று தனது உரையில் அவர் தெரிவித்திருந்தார்.

அரச தலைவரின் உரையில் இந்த ஒரு பந்தி மட்டுமே அவர் தமிழர் பிரச்சினை தொடர்பாகவும் பொறுப்புக்கூறல் விடயம் தொடர்பாகவும் தொட்டுச் சென்றிருக்கக்கூடிய பகுதி என்று ஊகிக்க வேண்டியுள்ளது. அந்த ஊகத்தின் அடிப்படையில் அணுகினாலும் இவை எல்லாம் ஏற்கனவே தமிழர்களால் நிராகரிக்கப்பட்ட விடயங்களாகவே இருப்பது கண்கூடு.

இலங்கையின் தேசிய நிறுவனங்களின் ஊடான பொறுப்புக்கூறலில் தமிழர்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதை அவர்கள் கடந்த 12 ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள். அதனாலேயே பன்னாட்டு விசாரணை ஒன்று சுயாதீனமாக முன்னெடுக்கப்படவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தி வருகின்றார்கள்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்திலகூட பொதுநலவாய நாடுகளின் நீதிபதிகள், சட்டவாளர்கள், வழக்குத் தொடுநர்களையும் உள்ளடக்கிய உள்நாட்டு நீதிபொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்றே பரிந்துரைக்கப்பட்டது. அத்தகைய கலப்புப் பொறிமுறையையும்கூட தமிழர்களில் கணிசமான பகுதியினர் நிராகரித்து முழுமையான சுயாதீன பன்னாட்டு விசாரணையையே வலியுறுத்தி வருகின்றனர்.

குறிப்பாக பலவந்தமாகக் காணாமற்போனவர்களின் உறவினர்கள் இந்தக் கலப்புப் பொறிமுறையை முழுமையாக நிராகரித்திருந்தார்கள். பன்னாட்டு விசாரணை ஒன்றின் மூலமே தமக்கு நீதியான தீர்வு கிடைக்கும் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

பாதிக்கப்பட்ட தரப்பான தமிழர்களால் அப்படி முழுமையாக நிராகரிக்கப்பட்ட உள்நாட்டுப் பொறுமுறைகளின் ஊடாகப் பொறுப்புக்கூறல் முன்னெடுக்கப்படும் என்று அரச தலைவர் தனது உரையில் கூறியிருக்கிறார். அத்தகைய ஒரு பொறுப்புக்கூறல் பெயருக்குக்கூட நடக்காது என்பது இலங்கையினதும் ராஜபக்சக்களினதும் வரலாற்றை அறிந்த எல்லோருக்கும் நன்கு தெரிந்த விடயம்.

இத்தகைய நிலையில் அவரது உரையில் கூறப்பட்டவற்றை நம்புவதற்கோ அதனடிப்படையில் இனப்பிரச்சினை விடயத்தில் முன்னேற்றங்கள் ஏற்படுவதற்கோ சாத்தியங்கள் எதுவும் இல்லை.

மறுசீரமைக்கப்பட்ட நீதி பற்றியும் அரச தலைவர் தனது உரையில் கூறியுள்ளார். அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று நீதிமன்றத்தால் தண்டனையும் பெற்ற படையினரை பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுவித்து தமிழர்களைக் கொல்வது அரச பணி என்பதாக அர்த்தப்படுத்திய பின்னர், மறுசீரமைக்கப்பட்ட நீதியை கோட்டாபய ராஜபக்சவிடம் இருந்து எதிர்பார்ப்பதற்கு தமிழர்கள் முட்டாள்கள் அல்லர்.

அண்மையில் அனுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் இருவர் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சரால் துப்பாக்கி முனையில் மிரட்டப்பட்டார்கள் என்கிற விடயம் வெளிவந்த பின்னரும் அவரை முழுமையாக அமைச்சுப் பதவியில் இருந்து நீக்காமல் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சலிருந்து மட்டும் ஒப்புக்குச் சப்பாணியாக விலகச் செய்து ஆடிய நாடகம் மறுசீரமைக்கப்பட்ட நீதியை ராஜபக்சக்கள் எப்படி நிறைவேற்றுவர் என்பதற்கான ஆகப் பிந்திய உதாரணமாக இருக்கும்போது அதனையும் தமிழர்கள் நம்புவதற்கு வழியில்லை.

அடுத்து அர்த்தமுள்ள நல்லிணக்கம் பற்றி அவர் பேசியிருக்கிறார். அதற்கான ஓர் அடியைத் தானும் இதுவரையில் முன்னெடுத்து வைக்காத அரச தலைவர், தன்னையொரு பௌத்த சிங்கள பேரினவாத முகமாகத் தொடர்ந்து வெளிக்காட்டிவருபவர், தமிழ் முஸிலிம் மக்களை ஒடுக்குவதன் மூலம் பேரினவாதத்தைத் திருப்திப்படுத்த முனைந்து நிற்பவர் அர்த்தமுள்ள நல்லிணக்கம் பற்றிப் பேசுவது சாத்தான் வேதம் ஓதுவதற்குச் சமமானது என்பதையும் தமிழர்கள் அறிவார்கள்.

ஆகமொத்தத்தில் அரச தலைவரின் ஐ.நா. உரை தமிழர்களால் முற்றாக நிராகரிக்கப்பட்ட ஒன்று என்பதுடன் ஏற்றுக்கொள்ளப்படவோ எதிர்காலத்தில் அரசியல் முன்னகர்வுகளுக்கான அடித்தளமாகவோ கொள்ளப்படவும் முடியாது.

## ஐப்பசி...

தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச நாட்டில் இல்லாத நிலையில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச தலைமையில் இந்தக் கூட்டம் நடந்தது. அரச தலைவர் இல்லாததால் ஊரடங்கு நீக்கப்படுவது தொடர்பான உத்தியோகபூர்வ முடிவு நேற்று எடுக்கப்படவில்லை என்றும் அவர் நாடு திரும்பிய பின்னர் அது தொடர்பான அறிவித்தல் விடுக்கப்படும் என்றும் எதிர்பார்ப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நாட்டை ஒரு மாதத்திற்கு மேலாக மூடிவைத்திருந்ததன் விளைவாக மூன்றாவது காலாண்டி பொருளாதார வளர்ச்சி ஒரு சதவீதத்திற்கு குறைந்திருப்பதாக நிதி அமைச்சர் நேற்றைய கூட்டத்தில் தெரிவித்தார். இரண்டாம் காலாண்டி இது 12.3 சதவீதமாக இருந்ததையும் சுட்டிக்காட்டிய அவர், நான்காம் காலாண்டில் வளர்ச்சியை 3 சதவீதமாகவேனும் பேணுவதற்கு ஏற்ற வகையில் செயற்படவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார். அப்படிச் செய்தால் மட்டுமே ஆண்டுப் பொருளாதார வளர்ச்சி வீதத்தை 5 சதவீதமாகவேனும் பேண முடியும் என்றும் குறிப்பிட்டார்.

இவை அனைத்தும் நாடு முதலாம் திகதிக்குப் பின்னர் தொடர்ந்து மூடப்பட்டிருப்பதற்கான வாய்ப்புக்கள் அரிது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கூட்டணிக்...

வர் நாடாளுமன்ற உறுப்பினர் வீரசுமண வீரசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர் என்று தலைமை அமைச்சர் அலுவலகம் அறிவித்தது.

இந்தச் சந்திப்பில் யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் செயற்பாட்டின் மூலம் மின்சாரப் பாவனையாளர்க ளுக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதாகவும் கட்சித் தலைவர்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் கேட்கப்பட்டதாகவும் தலைமை அமைச்சர் அலுவலக அறிக்கை கூறியது.

இந்தக் கூட்டத்தில் அமெரிக்க நிறுவனத்திற்கு பங்குகளை விற்பதன் மூலம் மின்சார விலையை குறைக்க முடியும் என்று நிதி அமைச்சர் விளக்கியிருக்கிறார். அப்படியிருந்தும் இந்த விடயத்தில் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கருத்தொற்றுமைக்கு வரவில்லை என்று தெரிகிறது.

இந்தக் கலந்துரையாடலின்போது நிதி அமைச்சருக்கும் மற்றைய கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் இருந்தன என்று தெரிவித்தார் அமைச்சர் விமல் வீரவன்ஸ.

தற்போது அமெரிக்காவில் உள்ள அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச நாடு திரும்பியதும் அவருடன் இது குறித்துப் பேச்சு நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ள இலங்கை அதிலிருந்து மீளும் வழியாகவும் கொழும்பு சீனாவை நெருங்கிச் செல்வதால் அதிருப்தியடைந்திருக்கும் மேற்குலகைச் சமாளிக்கும் வகையில் கொரவலப்பிட்டி மின் உற்பத்தி நிலைய பங்குகளை அமெரிக்காவிற்கு விற்பதற்கு நடவடிக்கைகளை எடுப்பதாக அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

## சிறுவர்களுக்கான...

நீரிழிவு மற்றும் நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட 12 வயதுக்கும் 19 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் பணியே தொடக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.

கொழும்பு லேடி றிட்ஜ்வே வைத்தியசாலை, அனுராதபுரம் மற்றும் குருநாகல வைத்தியசாலைகள் என்பவற்றில் நேற்றைய தினம் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.

12 வயதுக்கு மேற்பட்ட நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கும் 13 வயதுக்கும் 19 வயதுக்கும் இடைப்பட்ட நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கும் பிவிஸர் தடுப்பூசி ஏற்றப்படும் என்று கடந்த வாரம் ஆட்சியாளர்களால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கான முடிவு கடந்த வாரம் வெள்ளிக்கிழமை நடந்த கொரேனா கட்டுப்பாட்டுச் செயலணியின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாக ராஜாங்க அமைச்சர் சன்ன ஜெயசுமண தெரிவித்தார்.

## சவப்...

அறிமுகப்படுத்தப்பட்டன.

இதைத் தொடர்ந்து இலங்கையிலுள்ள வியட்நாம் தூதரகம் மற்றும் வியட்நாமில் உள்ள இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட பிக்குகளுக்கும் மௌண்டல வேனியா நகர சபை முதல்வருக்கும் இடையே இடம்பெற்ற கலந்துரையாடல்களின் விளைவாக இந்த ஏற்றுமதி சாத்தியமானதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தக் கார்ட்போர்ட் சவப் பெட்டிகள் தற்போது இலங்கை முழுவதும் பயன்பாட்டில் உள்ளன என்று இதனை உருவாக்கி மௌண்டலவேனியா நகர சபைக்கு அறிமுகப்படுத்திய பிரியந்த சகபந்து தெரிவித்தார்.

## பெற்றோல்...

கூட்டுத்தாபனம் எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடியை எதிர்கொள்வதற்கு வசதியாக 2.5 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியை வெளிநாடுகளில் இருந்து திரட்டுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. அதனடிப்படையிலேயே இந்தியாவிடம் இருந்து 500 மில்லியன் டொலர் நிதியைப் பெறுவதற்கான பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

## பாடசாலைகளை...

யில் இணைத்துக்கொள்வதே முதற்கட்ட நகர்வாகத் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறுவர்களுக்கு தடுப்பூசி ஏற்றிய பின்னர்தான் பாடசாலைகளைத் திறக்க வேண்டும் என்று எதிர்பார்க்காமல் விரைவில் பாடசாலைகளைத் திறந்து மாணவர்களின் கல்வி பாதிப்படையாமல் பார்த்துக்கொள்வதன் அவசியத்தை சுகாதாரத்துறை நிபுணர்கள், குழந்தை நல நிபுணர்கள் அண்மையில் வலியுறுத்தியிருந்தனர். இதனைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

# "இனி உவையள் வரமாட்டினம்..."

**வி.அருணாசலம்**

போர் முடிவுற்ற பின்னர் வடக்கிலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகிச் சென்ற உறுப்பினர் ஒருவர் தமிழ் மக்கள் விடயத்தில் நன்றாகக் கதைக்கிறார் என்று கேள்விபட்டு, அவரைக் கொண்டு சில காய் நகர்த்தல்களைச் செய்யும் நோக்குடன் ஐரோப்பிய நாடு ஒன்றில் வசிக்கும் புலிகளின் முக்கியஸ்தர் ஒருவர் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டுள்ளார். "நான் இன்னாரண்ணே! உங்களோட பேசலாமோ...?" என்று கேட்டிருக்கிறார். உடனே அந்த உறுப்பினர், "உங்கட தகட்டு நம்பரைச் சொல்லுங்கோ?" என்றிருக்கிறார். தொடர்புகொண்டவருக்கு அதிர்ச்சியாக இருந்திருக்கிறது. போராளிகளின் தகட்டு நம்பர் விவரம் இவருக்கு எப்படித் தெரியும் என்று நினைத்தவருக்குத் தான் ஒரு முழுப் பம்மாத்துக்காரனுக்குத் தொடர்பெடுத்துவிட்டேன் என்பது தெரியவந்திருக்கிறது.



தொலைபேசிக்குச் சிக்னல் (சமிக்ஞை) இல்லாமல் போனதுபோல எதுவும் பேசாமல் அந்தத் தொடர்பைத் துண்டித்துள்ளார் அந்தப் பிரதிநிதி. பின்னர் சில காலம் கழித்து ஜெனீவா மனித உரிமைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகக் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெனீவாவுக்குச் சென்றிருக்கிறார். அப்போது அவருடன் முதலில் பேசிய நபருக்கு அவருடைய நண்பர் ஒருவர் தொலைபேசி அழைப்பெடுத்து, குறித்த உறுப்பினர் தனது வீட்டில் நிற்கிறார் நீ சந்திக்கப்போகிறாயா என்று கேட்டிருக்கிறார். அவர் உடனே கைபேசியை அவரிடம் கொடு என்று நண்பருக்குக்கூற அவரும் குறிப்பிட்ட உறுப்பினரிடம் கொடுக்க, "அண்ணே எப்பிடிச் சுகமா இருக்கிறியளோ இப்ப என்ர தகட்டு நம்பரச் சொல்லட்டோ" என்று கேட்டிருக்கிறார்.

அதிர்ச்சியடைந்த நாடாளுமன்ற உறுப்பினர், "நேரா வாங்கோ கதைப்பம்" என்றிருக்கிறார். "உன்னோட என்னடா கதை எனக்கு" என்று கூறித் தொலைபேசியைத் துண்டித்திருக்கிறார் அந்த நபர்.

**அண்மையில் பிரிட்டனில் விடுதலைப் புலிகள் மீதான தடை மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ள நிலையில் ஏனைய ஐரோப்பிய, அமெரிக்க, கனடிய நாடுகளும் பிரித்தானியாவைப் பின்பற்றிப் புலிகளைத் தடைசெய்யும் வாய்ப்புகளுள்ளன**




### இறுதிப் போர்க்காலம்

புலிகளில் ஒருவரைக்கூட உயிருடன் விடக்கூடாது என்று 2008, 2009 காலப்பகுதியில் இந்திய, இலங்கை அரசுகளிடம் கேட்டுக்கொண்டவர்கள் யார் என்பதும், நேரடியாக படையினருடன் செயற்பட்டுத் தம்மை அழித்தவர்கள் பற்றியும் கடந்த 12 ஆண்டுகளில் "உவையள் எங்க இனி வரப்போகினம்" என்ற திடமான நம்பிக்கையில் அரசியல் செய்து வருபவர்கள் பலரைப் பற்றியும் புலம்பெயர் தமிழர்களுக்கு நன்கு தெரிந்திருக்கிறது.

ஆக்ரோஷமாக உரையாற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் காட்போட் புலிகளாக இருந்துகொண்டு செய்த அட்டகாசங்களை வெளிநாடுகளில் இருக்கின்ற புலம்பெயர் புலி ஆதரவாளர்கள் சரியாக அறிந்துகொண்டுதான் இருந்தார்கள். எனினும் இலங்கைக்குள் வருவதற்கான வாய்ப்புகள் கடந்த 12 வருட காலமாக அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

இந்தியப் படையினர் இலங்கையில் நிலைகொண்டிருந்தபோது நித்தகைக்குளம் காட்டுக்குள் தரையிறங்கிய இலங்கை வான்படையினரின் வானூர்திகள் அன்ரன் பாலசிங்கம் தலைமையிலான புலிகளின் அணி ஒன்றைக் கொழும்புக்குக் கொண்டுசென்றது.

தற்போது அரச தலைவர் கோட்டாபயா ஐ.நா. பொதுச்சபையில் ஆற்றிய உரையில் நாடுகடந்த புலம்பெயர் அமைப்புகளுக்கு அவர் விடுத்த அழைப்பும் அதேபோன்றதொரு அடிப்படையிலேயே காணப்படுகிறது.

2004ஆம் ஆண்டு ஒஸ்லோ உடன்படிக்கையே விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் இரண்டு தரப்புகளாக அங்கீகரிக்கப்பட்ட முதலாவது பன்னாட்டு அங்கீகாரமாகும். அது குழப்பப்பட்டதாலேயே மிகப் பெரிய பின்னடைவைத் தமிழ் மக்கள் சந்திக்கவேண்டி ஏற்பட்டது. தற்போது அரச தலைவரின் அழைப்பு என்பது மீண்டும் ஒரு தடவை தமிழருக்கான அரசியல் தீர்வைக் காண்பதற்கும் மக்கள் நிம்மதியாக வாழ்வதற்குமான வாய்ப்பை ஏற்படுத்துவதாக அமையும்.

### கே.பியின் வழியில்...

விடுதலைப் புலிகளின் பன்னாட்டுச் செயற்பாட்டாளர்களில் ஒருவராக இருந்த கே.பி. இலங்கைக்கு வந்து தற்போது கிளிநொச்சியில் வாழ்ந்து வருகிறார். தற்போது அரச தலைவர் கோட்டாபய எடுத்துள்ள தீர்மானத்திற்கமைய வெளிநாடுகளில் வாழ்கின்ற புலிகள் அமைப்பை நம்பிக்கையுடன் இலங்கைக்கு வரும் வகையில் ஏற்பாடுகளை கே.பி. செய்ய வாய்ப்புண்டு.

ஒரு சில மாதங்களுக்கு முன்னர் கனடாவின் வர்த்தக சங்கத் தமிழ்ப் பிரதிநிதிகள் சிலர் அரச தலைவர் கோட்டாபாயவைச் சந்தித்துத் தமது முதலீடுகளை இலங்கையில் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் எனத் தெரிகிறது.

### ஆர்ப்பாட்டம் நிறுத்தப்பட்டதேன்

இலங்கை அரச தலைவர் ஐ.நா. பொதுச்சபையின் 76ஆவது கூட்டத்தொடரில் கலந்துகொள்ளும்போது நியூயோர்க்கில் அவருக்கு எதிராகப் பெரியளவான ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை நாடு கடந்த தமிழீழ அமைப்பினர் மேற்கொண்டிருந்தனர். பின்னர் அந்த ஆர்ப்பாட்டம் நின்றுபோனது. அரச தலைவரின் உரையில் இடம்பெறப்போகின்ற முக்கிய விடயங்கள் அவர்களுக்கு எட்டியிருக்க வாய்ப்பிருந்திருக்கிறது. அதன் காரணமாகவே, நல்லிணக்க விடயமாகவே அந்த ஆர்ப்பாட்டம் நிறுத்தப்பட்டிருக்க வாய்ப்புண்டு.

அண்மையில் பிரிட்டனில் விடுதலைப் புலிகள் மீதான தடை மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ள நிலையில் ஏனைய ஐரோப்பிய, அமெரிக்க, கனடிய நாடுகளும் பிரித்தானியாவைப் பின்பற்றிப் புலிகளைத் தடைசெய்யும் வாய்ப்புகளுள்ளன. இவ்வாறானதொரு நிலையில் கோட்டாபய ராஜபக்ச ஐ.நா. பொதுச்சபையில் விடுத்த அழைப்பு சற்றும் எதிர்பாராத திருப்பமாகும். எனவே இந்த வாய்ப்பைப் புலம்பெயர் தமிழர் அமைப்புகள் சாதகமாகப் பரிசீலிக்க வாய்ப்புண்டு.

### போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மகிழ்ச்சியான செய்தி

கடந்த 12 ஆண்டுகளாக மாவீரர் மற்றும் பேராளிக் குடும்பங்கள் மிகத் துயரமான வாழ்வை அனுபவித்து வருகின்றன. அவர்களுக்கான நிதி உதவிகளைப் புலம்பெயர் அமைப்புகள் பலகூடி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக மேற்கொண்ட உதவித் திட்டங்களையோ, இங்கு போராளிக் குடும்பங்கள் படுகின்ற சிரமங்களையோ புலம்பெயர் அமைப்புகளால் நேரடியாகக் கண்காணிக்க முடியவில்லை. தற்போது ஏற்பட்டுள்ள இந்த வாய்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டதற்காக அவர்களை ஒரு தீண்டாச் சாதியாக ஏனையவர்கள் பார்க்கும் நிலையை மாற்றும். புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளில் பாதிக்கப்பட்ட இந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை வழங்க வாய்ப்புண்டு. அதேவேளை போர் காரணமாக உடல் அங்கங்களை

# என் கட்சி, உன் கட்சி, எங்கள் கட்சி

● ரவீந்திரன்

போர் முடிந்து 12 ஆண்டுகளாகிவிட்ட பின்பும் தமிழ்த் தலைவர்களின் நிலைப்பாடு என்பது இருவர் சேர்ந்து உன்கட்சி, என் கட்சி என இரண்டு கட்சிகளாக இயங்கிப் பின்னர் எங்கள் கட்சி என்று மாற்றிக்கொள்ளும் நிலையில் வந்து நிற்கிறது. கூட்டுச் சேர்ந்த இருவரும் அந்த இடத்தில் நிற்கின்றனரே தவிர குணாம்ச ரீதியான மாற்றங்களையோ, கால ஓட்டத்துக்கு ஏற்ப தம்மை வளர்த்துக் கொள்ளும் முயற்சியையோ அவர்களிடம் காணவில்லை.

அரசியல்வாதிகளின் புதினங்களைப் புரிந்துகொண்ட பொதுமக்கள் தம்மை மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். தற்போது இந்தக் கட்சிகளுக்கும் தலைவர்களுக்கும் பிரச்சினையாக இருக்கின்ற விடயம், மக்கள் மாறிவிட்டார்கள் என்பதே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் அண்மையில் ஆளுக்காள் தண்ணீரால் விசிறியடித்துப் பின்பு சேறடித்துப் பின்னர் அசிங்கமானவற்றால் மாறி மாறி எறிந்து கொள்வதற்கு ஒப்பான வாதப்போர்கள் தோன்றி அவை உச்சமான நிலைக்குச் சென்றன. எந்த நிலையிலும் மக்கள் இது பற்றி வாய் திறக்கவில்லை. தலைவர்கள் மாத்திரம் அடிபடுவதால் மக்களுக்குச் சேதமில்லை. 70 வருடகால தமிழர் அரசியலில் சாதியாலும், மதத்தாலும், பிரதேசத்தாலும், கட்சிகளாலும் தமக்குள் அடிபட்டனர். இழப்புகளையும் சந்தித்தனர். அதையே தொடர்ந்தும் செய்கின்றனர். இந்தக் கட்சிகளுடனும், இந்தக் கட்சிகளின் தமிழ்த் தேசியத்துடனும் மிக நீண்டகாலம் பயணித்தவர்கள் இன்று தமது முதுமையில் தாம் ஏமாற்றப்பட்டதையும் தமது பிள்ளைகளுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக்கொடுக்கவில்லை என்ற ஏக்கத்துடனும் வாழ்கிறார்கள்.

தாம் ஆதரித்த தலைவர்களின் சொத்துச் சேர்ப்புகள், அவர்களின் பிள்ளைகளுக்கு நல்ல கல்வியும் வேலைவாய்ப்பும் முதலீடுகளும் உருவாக்கப்பட்டுள்ளமை, இப்படியாகத் தாம் முன்னிலைக்கு வந்த பின்னர் இனி அரசியல் தேவையில்லை என்ற கட்டத்துக்குச் சென்றுவிட்ட நிலை என எல்லாமே ஆதரித்தவர்களை பேதலிப்புக்குள் தள்ளியிருக்கின்றன.

கைதிகள் விடுதலை விடயத்திலோ, தொழில் வாய்ப்புத் தேடியோ இந்தக் கட்சித் தொண்டர்கள் அவர்களது பிள்ளைகளுடன் தலைவர்களைத் தேடிச் செல்லும்போது தலைவர்கள் அவர்களைத் தூக்கி எறிந்து பேசுவதும் மக்களைத் தமிழ்த்தேசியக் கட்சிகளிடமிருந்து தள்ளி வைத்துள்ளது. சில கட்சிகளும் தலைவர்களும் தமக்குத் தீட்டாகி விட்டனர் என்று மக்கள் உணரும் நிலைக்கு நிலைமை மோசமாகியிருக்கின்றது.



**தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் அண்மையில் ஆளுக்காள் தண்ணீரால் விசிறியடித்துப் பின்பு சேறடித்துப் பின்னர் அசிங்கமானவற்றால் மாறி மாறி எறிந்து கொள்வதற்கு ஒப்பான வாதப்போர்கள் தோன்றி அவை உச்சமான நிலைக்குச் சென்றன.**

### அரும்பொட்டு வெற்றி வாய்ப்பு

2020பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த உறுப்பினர்கள் பலர் தோற்பதற்கும் அதன் தலைவர் இரா.சம்பந்தன் 147 வாக்குளால் அரும்பொட்டாக வெற்றி பெற்றதற்கும், மற்றொரு உறுப்பினரான சிறீதரன் வென்றாலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் தோறகடிக்கப்பட்டதற்கும் (ஊர்காவற்றுறை - 2272 வாக்குகள், வட்டுக் கோட்டை - 700, காங்கேசன்துறை- 910, மானிப்பாய்- 752, கோப்பாய்- 719, உடுப்பிட்டி- 576, பருத்தித்துறை- 1315, சாவகச்சேரி- 2299, நல்லூர்- 1409, யாழ்ப்பாணம்- 741 தபால் மூல வாக்குகள் 2276 என எல்லாமாக 13ஆயிரத்து 969 வாக்குகளையே பெற முடிந்தது. கிளிநொச்சி மாவட்டத்தில் 21ஆயிரத்து 915 வாக்குகளைப் பெற்றதால் மாத்திரமே வெற்றி பெற்றார்). தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் செல்வாக்குச் சரிவையே காட்டியது.

இந்த நிலையே யாழ்ப்பாண மாவட்டத்தில் எம்.ஏ.சுமந்திரனுக்கும் இருந்தது. சிறீதரன் கிளிநொச்சியில் பெற்ற 21 ஆயிரத்து 915 வாக்குகளில் சுமந்திரனுக்கும் கிடைத்த விருப்பு வாக்குகளே அவரை வெல்ல வைத்தன. இதனால்தான் திருமதி ரவிராஜ் வென்றதாக முதலில் தெரிந்தது. இந்தத் தோல்விகளை நன்கு அறிந்தவர்தான் சம்பந்தன்.

தற்போதுள்ள சூழலில் தமிழ்த் தேசியக்கட்சிகளின் கையில் பேசுபொருளாகக் காத்திரமாக எதுவும் இல்லாத நிலையில் கோட்டாபய அரசுடன் பேசித் தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெற முயலும் சம்பந்தனுக்குக் கூட்டமைப்புக் குள்ளேயும் எதிர்நிலைப்பாட்டிலுள்ள தமிழ்த் தலைவர்கள் மத்தியிலும் பெரும் எதிர்ப்புக் கிளம்பியிருப்பது தெரிகிறது.

நிலமை இவ்வாறிருக்கும்போது தமது கட்சிக்குள் எழுந்திருக்கும் நுள்ளுப்பிராண்டி கிள்ளுப்பிராண்டிகளால் தற்போது கையில் இருக்கும் வாக்குகளையும் இழக்க வேண்டிய நிலை வந்துவிட்டதாக உணர்ந்தே சம்பந்தன் தற்போது வாய் திறந்திருக்கிறார். தமது உறுப்பினர்களின் பொறுப்பற்ற உள்ளுரச் சண்டைகளால் தமது பக்கம் இருக்கின்ற மக்களும் தம்மை விட்டுப்போய்விடுவார்கள் என்பது அவரது நிலைப்பாடாகும்.

அவர் வெளியிட்ட அறிக்கையில், "தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுக்கும் இலக்கு நோக்கிக் கூட்டமைப்பாகப் பயணிக்கும் அனைவரும் பொதுவெளியில் கருத்துகளைப் பகிர்ந்து சாதாரண மக்களைக் குழப்பாதீர்கள் என்று எனது அனைத்து உறுப்பினர்களிடத்திலும் கேட்டுக்கொள்கிறேன்" - என்றார்.

இது அவரது கைநழுவிப்போய் விட்ட நிலமையையே காட்டுகிறது. இனித் தமிழரின் நிலை என்கட்சி, உன் கட்சி, எங்கள் கட்சி என்ற நிலையில் பெயரளவில் சொல்லலாமே தவிர அது தமிழ் மக்களுக்கான காத்திரமான செயற்பாட்டியக்கமாக இருக்கப்போவதில்லை என்பதில் தமிழ் மக்கள் தெளிவடைந்திருப்பதாகவே தெரிகிறது.

---

## "இனி உவையள்...

இழந்த நிலையில் இருப்பவர்களுக்கான மருத்துவ நிலையங்கள் வெளிநாடுகளில் வாழ்கின்ற தமிழ் விசேட மருத்துவர்களை அழைத்து வந்து சிகிச்சையளிக்கும் வாய்ப்புகள் கிட்டும்.

### அரசியல்வாதிகளுக்குப் பேரிடி

புலிச்சாயம் பூசப்பட்ட புலம்பெயர் தமிழர்கள் தமது தாய் மண்ணை நோக்கிப் படையெடுக்கும் வாய்ப்பை இலங்கை அரச தலைவரே ஏற்படுத்திக் கொடுத்திருப்பது மிக நல்ல சகுணமாகும். ஆனால், இனிமேல் இலங்கைக்குள் வரவே முடியாது என்ற எண்ணத்தில் 12 ஆண்டுகளாக அரசியல் நடத்தியவர்களுக்கு இந்தச் செய்தி பெரும் பேரிடியாக அமைந்திருக்கிறது.

புலம்பெயர் தமிழர்களின் பிரசன்னத்தால், இங்கு நடக்கின்ற மணல் அகழ்வு, காடழிப்பு, கஞ்சா கெரோய்ன் வியாபாரம், வாள்வெட்டுக் குழுக்கள் போன்ற சமூகப் பிரச்சினைகளுக்குக் கட்டுப்பாடுகளும் மட்டுப்பாடுகளுயும் ஏற்பட வாய்ப்புண்டு. அவர்கள் ஆயுதம் ஏந்திச் செயற்பாடுகளில் இறங்காவிட்டாலும் அதற்கான பொறிமுறை ஒன்றை மேம்படுத்த முடியும்.



புலம்பெயர் தமிழர்களில் புலிச்சாயம் பூசப்பட்ட ஒவ்வொருவரிடமும் தமது இயக்கத் தகட்டு நம்பர் உண்டு. அதைத் தகட்டு நம்பர் கேட்ட அரசியல்வாதிகளிடமே நேரடியாகக் காட்டுவதற்கும் வாய்ப்பு ஏற்படும். ஏற்கனவே தம்மிடம் மட்டும்தான் அரசியல் தீர்வைப் பற்றிப்பேச வேண்டும் என்று அடம்பிடித்தவர்கள் இனி மிக இலகுவாக ஓரம் கட்டப்படவும் தமிழ் மக்களுக்கான ஒரு புதிய வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் புலம்பெயர் தமிழர்கள் தமது தாய் நிலத்துக்குத் திரும்புவது கட்டாயத் தேவையாக உள்ளது. அவ்வாறு அவர்கள் வந்து சேரும் போது "இனி உவையள் வரமாட்டினம்" என்று கதை விட்டவர்கள் மெதுவாக ஒதுங்கிவிடவே வாய்ப்புண்டு. இனி இதைக் கையாளவேண்டிய பொறுப்பு புலம்பெயர் தமிழர் அமைப்புகளின் கைகளிலேயே உண்டு.

## உள்நாட்டு பொறிமுறைக்காக புலம்பெயர்ந்தோருக்கான அழைப்பு:

# கொக்கிற்கு நரி கொடுக்கும் விருந்து?

காட்டில் வாழ்ந்து வந்த நரி ஒன்று கொக்கு ஒன்றிற்கு விருந்து வைக்கத் திட்டமிட்டது. இந்த விருந்துபசாரத்திற்கான தொடக்க ஏற்பாடுகளை செய்து கொண்ட நரி, கொக்கிற்கு விருந்தோம்பலுக்கான அழைப்பையும் விடுத்தது. கொக்கும் அதற்குச் சம்மதித்தது. தந்திரத்தில் பெயர் போன நரி குறித்த விருந்துபசாரத்திற்காக சுவை மிகுந்த (சூப் போன்ற) பான வகை உணவைத் தயார் செய்தது. தயார் செய்யப்பட்ட அந்தப் பானத்தினை தட்டையான வாய் அகன்ற இரு பாத்திரங்களில் ஊற்றி ஒன்றைத் தனக்கும் மற்றையதை கொக்கிற்கும் வழங்கியது. தட்டையான பாத்திரத்தில் இருந்த பானத்தினை நரியோ இலகுவாக நக்கி நக்கி குடித்தது. ஆனால், விருந்தினராக சம பந்தி அமர வந்த கொக்கினால் அந்த பானத்தைக் குடிக்க முடியவில்லை. நீளமான அலகையுடைய கொக்கினால் தட்டையான பாத்திரத்தில் வைக்கப்பட்ட பானத்தை ருசி பார்க்கத் தன்னும் முடியவில்லை. விருந்தோம்ப வந்த கொக்கோ, நரியின் தந்திரத்தினால் வெறும் வயிறாகவே வீடு செல்ல நேர்ந்தது. நரியோ தன் தந்திரத்தை நினைத்து உவகையடைந்தது.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் அமர்வில் உரையாற்றுவதற்காக நியூயோர்க் சென்றிருந்த இலங்கையின் அரச தலைவருக்கும் ஐ.நா. பொதுச்செயலாளருக்கும் இடையில் கடந்த 19ஆம் திகதி விசேட சந்திப்பு ஒன்று இடம்பெற்றிருந்தது. ஐ.நா. தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற மேற்படி சந்திப்பில், பல்வேறு விடயங்களும் கலந்துரையாடப்பட்டிருக்கிறது. குறித்த உரையாடலில் இடம்பிடித்ததாகக் கூறப்படும் இலங்கையில் இனக்குழுக்களுக்கிடையிலான பிரச்சினை விவகாரத்தில், உள்ளகப்பொறிமுறை ஒன்றுக்கே தாம் தயாராக இருப்பது தொடர்பில் அரச தலைவரினால் மீள வலியுறுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேல், குறித்த பொறிமுறையைத் தயார்ப்படுத்த புலம்பெயர் தமிழர் தரப்புகளுடன் பேச்சு நடத்தத் தாம் தயாராக இருக்கின்றார் எனவும் அரச தலைவரினால் தெரிவிக்கப்பட்டதாக ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதிலும், தமிழ் ஊடகங்கள் இந்த விடயத்தை கவனத்தை ஈர்க்கும் வகையிலும் செய்தியாக்கியிருந்தன.

கொரோனா தொடர்பானதும் அதனோடிணைந்த நெருக்கடிகள் தொடர்பான விடயங்கள் முக்கியமான கவனவீர்ப்பிற்குரியதாக இருக்கையில், கவனக்கலைப்பானாக அமைந்த இந்த தூசு தட்டல் விவகாரம், அதற்கு பிந்திய நாட்களில் எதிரொலிகளையும் தோற்றுவித்திருக்கிறது.

**கடந்த பெப்ரவரி மாதத்தில் வெளியான வர்த்தமானி!**

ஐ.நா. செயலாளர் முன்னிலையில் அவர் தெரிவித்ததாக கூறப்பட்டிருக்கும் இந்த பேச்சுக்கான அழைப்பு தொடர்பில் கருத்துருவாக்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கையில், அரசின் முன்னுக்குப்பின் முரணான நிலை பற்றியும் விமர்சனம் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. காரணம், முன்பு அமைந்திருந்த நல்லாட்சி அரசினை விட இறுக்கமான - கிடுக்கிப்பிடியான -நடவடிக்கைகளை தமிழ், முஸ்லிம் சமூகங்களின் மீது திணிக்கவல்ல ஆட்சியாகவே மொட்டரசின் நடவடிக்கைகள் அமையும் என்பது தேர்தலுக்கு முன்பதாகவே ஆரூடம் கூறப்பட்ட ஒன்று. அதனை உறுதிப்படுத்தும் விதமான நடவடிக்கைகள் பதவியேற்பிற்குப் பின்னர் வரிசையாக இடம்பெற்று வந்தன. அதன் ஓர் அங்கமாக, புலம்பெயர் அமைப்புகளை தடை செய்யும் படிமுறை ஒன்றும் எடுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டின் பெப்ரவரி மாதத்தில் வெளியிடப்பட்ட 2216/37 இலக்க அதி விசேட வர்த்தமானி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் தடைசெய்யப்படும் 7 புலம்பெயர் தமிழ் அமைப்புக்களையும் மேலும் 389 தனிநபர்களையும் விவரமாக அறிவித்திருந்தது.

**ரெலோவின் அறிக்கை!**

புலம்பெயர் தமிழர் அமைப்புக்களை தடைசெய்துவிட்டு அவர்களை பேச்சுக்கு அழைப்பதை வேடிக்கை என விளித்திருக்கும் ரெலோ, வீட்டுக் கதவினை பூட்டி வைத்து விட்டு விருந்துக்கு அழைக்கும் செயற்பாடாக அரச தலைவரின் அழைப்பு அமைவதாக அறிக்கையிட்டிருக்கின்றது. இது தொடர்பில் ரெலோவின் பேச்சாளரினால் விடுக்கப்பட்டிருக்கும் அறிக்கையில், புலம்பெயர் அமைப்புக்கள் பலவற்றை தடைசெய்ததோடு வெளிநாட்டிலிருந்து வரக்கூடிய உறவுகள் அச்சம் அடையக்கூடிய சூழ்நிலையையும் ஏற்படுத்திவிட்டு அவர்களை பேச்சுக்கு அழைப்பது வேடிக்கையானது எனக் குறிப்பிட்டதுடன், நல்லிணக்க விவகாரத்தில் அரசு சர்வதேசத்தோடு ஒத்திசைந்து செயற்படத் தவறினால் ஒட்டுமொத்த நாட்டுமக்களையும் அது அதால பாதாளத்துக்குள் தள்ளுவதாகவே அமையும் என்றும் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

**உலகத் தமிழர் பேரவை தயாராம்!**

லண்டனைத் தளமாகக் கொண்டியங்கும் தடைசெய்யப்பட்ட புலம்பெயர் தமிழர் அமைப்பான உலகத் தமிழர் பேரவை, அரச தலைவரின் அழைப்பை வரவேற்பதாக திஐலன்ட் ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கின்றது. குறித்த பத்திரிகையால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்திருக்கும் உலக தமிழர் பேரவை, முன்னைய நல்லாட்சியில் மைத்திரிபால சிறிசேனவை இரு தடவைகள் லண்டனிலும் ஒருமுறை பேர்லின் நகரத்திலும் தாம் சந்தித்ததைச் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தரவுகள் திடீரென காணாமல்போகும் சம்பவங்களும், வாயில்களுக்கு மறைகாணியைக் (சிசிரிவி) கொண்டிராத சிறைச்சாலை கட்டமைப்பிற்குள் சிறைவாழ்க்கை மறுசீரமைப்பு அமைச்சர் நுழைந்து கைதிகளை அச்சுறுத்தும் சம்பவங்களும், கடும் முயற்சியின் பின்னர் நீதி வழங்கி உள்ளே தள்ளப்பட்டவர்கள் அரச தலைவரின் பொதுமன்னிப்பு என்னும் சிவப்பு கம்பளம் வழியாக வெளியேறும் சம்பவங்களும் மலிந்த நாட்டில், வினைத்திறனான உள்நாட்டு பொறிமுறை ஒன்றினை

■ ஸூடோ ஸ்வாமி ■

**நல்லிணக்க விவகாரத்தில் அரசு சர்வதேசத்தோடு ஒத்திசைந்து செயற்படத் தவறினால் ஒட்டுமொத்த நாட்டுமக்களையும் அது அதால பாதாளத்துக்குள் தள்ளுவதாகவே அமையும்**



## பென்குயின்களுக்கு எமனான தேனீக்கள்!

குளவிகள் கொட்டிப் பலர் காயமடைவதும் சிலர் இறந்துபோவதும் இலங்கையில் குறிப்பாக மலையகத்தில் அவ்வப்போது நிகழ்வதுதான். ஆனால், தேனீக்கள் கொட்டி பென்குயின்கள் இறந்தன என்றால் நம்ப முடிகின்றதா? தென்னாபிரிக்காவில் உண்மையில் நடந்திருக்கின்றது இந்தச் சம்பவம்.

தென்னாபிரிக்கத் தலைநகர் கேப்டவுன் அருகே தேனீக்கள்கொட்டி 63 அரியவகைப் பென்குயின்கள் இறந்துபோயிருக்கின்றன என்கிறார்கள் அதிகாரிகள். சிம்சன்ஸ்டவுன் எனும் ஊரில் உள்ள இருந்த பென்குவின் குடி ஒன்று அங்கிருந்த கடற்கரையில் உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளது. அவற்றின் உடலில் தேனீக்கள் கொட்டியதைத் தவிர வேறு எந்த காயமும் தென்படவில்லை. பென்குவின்களின் கண்களைச் சுற்றி தேனீக்கள் கொட்டியிருப்பது தெரியவந்துள்ளதாக உடற்கூறாய்வில் தெரியவந்துள்ளது.

"இது மிகவும் அரிதான ஒரு நிகழ்வு. இது அடிக்கடி நிகழும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை," என்று விலங்குகள் நல மருத்துவர் டேவிட் ராபர்ட்ஸ் ஏ.எஃப்.பி செய்தி முகமையிடம் தெரிவித்துள்ளார்.

சௌத் ஆப்பிரிக்கன் பவுண்டேஷன் பார் த கன்சர்வேஷன் ஆஃப் கோஸ்டல் பர்ட்ஸ் எனும் அமைப்பை சேர்ந்த இந்த விலங்குகள் நல நிபுணர் பென்குவின்களின் உடல்கள் கண்டறியப்பட்ட அதே இடத்தில் சில தேனீக்களும் இறந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கிறார்.

பென்குவின்களின் வழக்கமான அளவை விட சிறியதாக இருப்பது ஆப்பிரிக்கப் பென்குவின்களின் தனித்தன்மை. தென் ஆப்பிரிக்கா மற்றும் நமீபியா ஆகிய நாடுகளில் கடலோரப் பகுதிகள் மற்றும் அவற்றை ஒட்டியுள்ள தீவுகளில் இவை வாழ்கின்றன.

# ஒரு கொலையால் மாயமான "முள்ளு"

கனிமொழி



"ஒரு கிராம் முள்ளு 45 ஆயிரம் போனது" என்கிறார் குருநகரைச் சேர்ந்த அஜித். உள்ளூர்வாசிகளால் முள்ளு என்று அழைக்கப்படுவது கெரோயின் போதைப் பொருள். கடந்த சில வாரங்களாகவே முள்ளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. "முள்ளு கிடைக்காமல் நாய் மாதிரி அலைகிறார்கள்" என்கிறார் ஸ்ரெரன்ஸ். கெரோயின் போன்ற போதைப் பொருள்களுக்குப் பழக்கப்பட்டவர்கள் அது கிடைக்காத நிலையில் மதுவை அருந்தியதும் காண்பர்கவர்கள் எல்லோருடனும் வலிந்து சண்டைக்குச் செல்கிறார்கள், "முள்ளு அடிச்சடிச்சு உள்ள எல்லாம் அழிஞ்சுபோயிருக்கும் போல... அதுதான் சாராயம் குடிச்சா அவங்களால தாங்க முடியுதில்ல. எல்லாரோடயும் சண்டைக்குப் போறாக.." என்று ஊகம் தெரிவிக்கிறார் கலிஸ்ரன்.

திடீரென ஏன் போதைப் பொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது யாழ்ப்பாணத்தில்? காவல்துறையினரதோ போதைப் பொருள் தடுப்பு அதிகாரிகளினதோ நடவடிக்கைகள் அதற்குக் காரணமல்ல. ஒரு கொலைதான் அதற்கான முற்று முழுதான காரணம்.

குருநகரைச் சேர்ந்த 24 வயதான ஜெறன்ஸ் என்ற இளைஞர் பாசையூரைச் சேர்ந்த கெமி வன்முறைக் கும்பலினால் வெட்டிக் கொல்லப்பட்டதை அடுத்தே யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கெமி கும்பல் முன்பகை காராணமாக ஜெறன்ஸை திட்டமிட்டு அலைபேசி மூலம் அழைத்து வாளால் வெட்டியும் குத்தியும் காயப்படுத்தியது. பெருமளவு குருதி பெருக்கெடுத்தோட வீதியில் நீண்ட நேரம் கிடந்த ஜெறன்ஸ் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னரும் சிகிச்சை பயனின்றி இறந்தார். அதிகளவு குருதிப் பெருக்கு அவரது இறப்புக்குக் காரணமாக இருந்ததாக உடற்கூறு பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

கெமி கும்பலின் தலைவரான கெமி என்பவருக்கும் ஜெறன்ஸுக்கும் சில வருடங்களுக்கு முன்னர் யாழ். நகரில் உள்ள புடவைக் கடை ஒன்றினுள் ஏற்பட்ட முரண்பாடு அடிதடியில் முடிந்தது. ஜெறன்ஸ் கெமியை அடித்து விட்டார். இதற்குப் பழி தீர்ப்பதற்காக ஜெரன்ஸை வெட்டுவோம் என்று கெமியின் தம்பியான புக்கை எனப்படும் அஜித்தன் முகப் புத்தகத்தில் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார்.

**குடாநாட்டுக்குள் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களைக் கடத்தி வருவதில் மிக முக்கிய புள்ளியாக விளங்கியவர் சுலக்ஸன். கெமி குழு அவருக்குப் பக்கபலமாகச் செயற்பட்டு வந்தது என்கிறார்கள் குருநகர் மற்றும் பாசையூர் மக்கள்**



ஜெறன்ஸ் கொலை வழக்கில் முக்கிய சந்தேகநபர்களான - ஜெறன்ஸை வாளால் வெட்டியவர்களான - விஸ்வா மற்றும் மீன் குஞ்சு எனப்படும் மிதுசன் ஆகிய இருவரும் புக்கை சொல்லியே தாம் அதனைச் செய்தோம் என்று காவல்துறையினருக்கு வாக்குமூலமளித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இந்தப் படுகொலை வழக்கில் புக்கை, விஸ்வா, மீன்குஞ்சு உட்பட 13 பேர் தற்போது நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 7 பேரைக் காவல்துறையினர் கைது செய்தனர். முக்கிய குற்றவாளிகளில் 6 பேர் சட்டத்தரணி ரெமீடியஸ் ஊடாகச் சரணடைந்தனர். எனினும் இந்த வழக்கில் தேடப்பட்டுவரும் கெமி மற்றும் முக்கிய குற்றவாளிகளான சந்திரன், டார்வின், சுலக்ஸன், ராஜா குட்டி ஆகியோர் இன்னும் தலைமறைவாகவே உள்ளனர். இவர்களில் டார்வின் மற்றும் சுலக்ஸன் ஆகியோர் குழுவின் தலைவரான கெமியின் சகோதரர்கள். கொலையின் முக்கிய சூத்திரதாரியான புக்கை எனப்படும் அஜித்தனும் கெமியின் சகோதரனே.

ஜெறன்ஸின் கொலையைத் தொடர்ந்து கெமி கும்பலில் பலர் சிறைகளில் அடைக்கப்பட்டிருப்பதும் ஏனையவர்கள் தலைமறைவாகி இருப்பதுமே யாழ். நகரப் பகுதியில் போதைப் பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டதற்கான முக்கிய காரணம். "ஜெறன்ஸை கொன்ற பிறகு முள்ளு விக்கிற எல்லாரும் ஓடிட்டாங்கள். அதாலதான் இவங்கள் எல்லாரும் சாமான் கிடைக்காம தவிக்கிறாக..." என்கிறார் கலிஸ்ரன்.

யாழ்ப்பாணத்தின் போதைப் பொருள் கடத்தல் மற்றும் விநியோகத்தின் மையப் புள்ளியாகத் திகழ்ந்த குருநகரைச் சேர்ந்த சுலக்ஸன் என்பவரை சில மாதங்களுக்கு முன்னர் காவல்துறையினர் கெரோயின் மற்றும் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்தனர். அவர் தற்போது விளக்கமறியலில் அடைக்கப்பட்டுள்ளார். அவர் மீது இலகுவில் பிணையில் வெளிவர முடியாத வகையில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குடாநாட்டுக்குள் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களைக் கடத்தி வருவதில் மிக முக்கிய புள்ளியாக விளங்கியவர் சுலக்ஸன். கெமி குழு அவருக்குப் பக்கபலமாகச் செயற்பட்டு வந்தது என்கிறார்கள் குருநகர் மற்றும் பாசையூர் மக்கள். சுலக்ஸனால் கடத்தப்படும் போதைப் பொருள்களை உள்ளூர் விற்பனை செய்வதில் கெமி குழுவிற்குப் பெரும் பங்கிருந்திருக்கிறது.

அதனாலேயே சுலக்ஸன் கைது செய்யப்பட்ட பின்னரும் பாதிக்கப்படாதிருந்த போதைப் பொருள் விநியோகம் கெமி குழுவில் சிலர் கைது செய்யப்பட்டும் பலர் தலைமறைவாகியும் போனதை அடுத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த வெற்றிடத்தைக் கைப்பற்றவும் இந்தச் சாட்டோடு தமது தொழில் பகையாளிகளான கெமி கும்பலின் கதையை முடித்துவிடவும் வேறு பல நபர்கள் முயன்று கொண்டிருக்கிறார்கள். அத்தகைய நபர்களை உருவாக்கி வளர்த்துவிட போதைப் பெரும் வியாபாரிகளும் துடித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இறுக்கமான சட்டநவடிக்கைகள் இல்லாத நிலையில் அத்தகைய நபர்கள் விரைவிலேயே மீண்டும் எழுச்சி பெற்று போதை வியாபாரத்தை இயல்புக்குக் கொண்டு வருவார்கள். நீதித் துறையின் இறுக்கமான செயற்பாடே இதனை ஓரளவிற்காவது கட்டுப்படுத்தும்.

அதுவரைக்கும் போதை அடிமைகள் என்ன செய்வார்கள்? "இப்ப எல்லாம் குளிசைதான்" என்கிறார்கள். இதய நோய் மற்றும் கடுமையான நோய்களுக்கான வலி நிவாரணிகளாகப் பயன்படுத்தப்படும் குளிசைகளை போதைப் பொருளுக்கான மாற்றாகப் பயன்படுத்தி அழிந்துகொண்டிருக்கின்றது தமிழ் இளம் சமூகம்.

## உள்நாட்டு...

நிறுவ முடியும் என நம்புவதே பெரும் அபத்தம்.அதிலும் இன்னும் ஆறிப்போகாத ரணத்தைக் கொண்டிருக்கும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலே முடிந்த முடிவை எட்டுவதற்கு அரசினால் முடியாமையை இட்டு தனது விசனத்தை வெளிப்படுத்தி வருகிறார் கொழும்புப் பேராயர். அவருக்குக் கூட - தனது விடயம், அதாவது உயிர்த்த ஞாயிறு தின தீவிரவாத தாக்குதல்கள் தொடர்பிலான விசாரணைகளுக்கான உள்நாட்டு பொறிமுறை - 'வேலைக்காவாது' என்பது உறைத்துவிட்டதாகவே தோன்றுகிறது. அதனாலேயே அவரும் சர்வதேசத்தின் கதவுகளை தட்டப்போவதாக அடிக்கடி வெருட்டி வருகிறார்.

இந்தப் பின்னணியில் இனப்பிணக்கு தீர்விற்கான உள்ளகப் பொறிமுறையும் அதற்காக புலம்பெயர் தமிழர்களுக்கான அழைப்பும், பத்தியின் ஆரம்பத்தில் சொன்ன நரி கொக்கினை விருந்துக்கு அழைக்கும் சாயல் தென்படவே செய்கிறது. அதிலும் நல்லாட்சி அரசின் காலத்தில் மங்கள சமரவீர வழியாக புலம்பெயர் தமிழ் தரப்பினருடன் இருந்த ஊடாட்டமும் இல்லாமல் செய்யப்பட்ட பின் - தற்போது அவரும் இல்லாத நிலையில் - இப்போது கிளம்பியிருக்கும் இந்த அழைப்பு, அவதானத்துடன் அணுகப்படவேண்டிய ஒன்றாகும்.

# தமிழேண்டா... சமூக விரோதச் செயற்பாட்டின் அடையாளமா...?



நியூட்டன்

தமிழ்நாட்டில் ஏறு தழுவுதலுக்குத் தடைவிதித்தபோது மெரினாக் கடற்கரைப் பகுதியில் இளைஞர்களும், யுவதிகளும் கொதித்தெழுந்து எழுச்சிப் பேரணியை நடத்தினர். அந்த எழுச்சியால் வென்ற போது "தமிழேண்டா" என்ற சொற்பதம் மக்கள் மத்தியிலும் சமூக வலைத்தளங்களிலும் பிரபல்யம் பெற்றது. இந்தத் தமிழேண்டா விடயம் வடக்குக் கிழக்குத் தமிழ் இளைஞர்களிடமும் தொற்றிக்கொண்டது. பலர் தமது மோட்டார் சைக்கிளின் பின்புற சேறு தாங்கிகளிலும் வாகனங்களின் பல உதிரிகளிலும் தமிழேண்டா என்கிற வாசகம் பொறித்த ஸ்ரிக்கர்களை ஒட்டித் திரிகிறார்கள்.

வீதிச் சமிக்ஞை விளக்குகள் சிவப்பாக இருந்து வீதியைக் கடக்க வேண்டாம் என்று அபாய அறிவிப்பைச் செய்யும்போதும் தமிழேண்டா மோட்டார் சைக்கிள்கள் திமிறிக்கொண்டு போகின்றன. இவ்வாறாகத் தமிழேண்டாவின் உள்ளார்ந்த அர்த்தம் புரியாத இவர்கள், கொரோனா முடக்கத்துக்குள் சாராயக் கடைகள் திறந்தபோதும் தமிழேண்டா வீரர்களாகத் தம்மை மெய்ப்பித்துக் காட்டியுள்ளார்கள்.

**எப்படியிருந்த நாங்கள் இப்படி ஆகிவிட்டோம்**

2002 - 2006 வரையான காலப்பகுதியில், ஏ-9 வீதியில் இரணைமடுச் சந்தியருகில் நின்று வீதிக் கடமையில் ஈடுபட்டிருந்த தமிழீழக் காவல்துறையினர் தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த வான் ஒன்றை மறித்தனர். அதற்குள் சிங்கள இளைஞர்கள் 10 பேர் மதுபோதையில் இருந்தார்கள். கையில்லாத பெனியன்கள், சிலர் வெறும் தேகம், காற்சட்டை, சாரம் என அணிந்திருந்தார்கள். அவர்கள் அனைவரும் தமிழீழக் காவல்துறையினரால் வானை விட்டு இறக்கப்பட்டார்கள்.

இது புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்பதால் நீங்கள் இவ்வாறு பயணிக்க முடியாது. சேர்ட் போட்டு ஒழுங்காக உடையணிந்துதான் செல்ல முடியும். முகமாலைக்கு வடக்காகவும் வவுனியாவுக்குத் தெற்காகவும் நீங்கள் நினைத்தபடி போகலாம் - என்று கூறி அவர்களைச் சேர்ட் போடவைத்து அவர்களின் பயணத்தைத் தொடர அனுமதித்தார்கள் காவல்துறையினர்.

**மதுவும் கட்டுக்குள்**

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் மதுபானப் பாவனை இருக்கவில்லை, மது அருந்துவதற்குப் புலிகள் தடை விதித்தார்கள் எனத் தென்னிந்தியத் திரைப்பட இயக்குநர் பாரதிராஜா ஒரு தொலைக்காட்சிச் செவ்வியில் குறிப்பிட்டிருந்தார். அது முற்றிலும் தவறு என்பது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வசித்த மக்களுக்கு நன்கு தெரியும்.

> **மதுபான சாலைகளைத் திறந்த விடயத்தில் நிதி அமைச்சர் பசில் ராஜபக்சவையே எதிர்க்கட்சிகள் சாடுகின்றன. தமிழ்த்தேசிய, சிங்களத் தேசிய அரசியலில் வாக்கெடுப்பு நடக்கும் நாள்களில் மதுபானம் முதன்மை இடத்தை வகிக்கிறது**

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் மதுபானப் பாவனை இருந்தது. புலிகளின் வடிசாலைகள் மற்றும் மதுபான விற்பனைக்குப் பொறுப்பாக நிசாம் என்கிற ஒருவர் இருந்தார். இதைவிடத் தென்பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்ட



ஸ்பிறிட்டில் கலந்து தயாரித்த சாராயமும் (அது தென் பகுதியிலிருந்து பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றுக் கொண்டு வரப்பட்டதால் அதற்குக் கோட்டாபய சாராயம் என்று குடிப்பவர்கள் செல்லப் பெயரும் வைத்திருந்தார்கள்) புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் விற்பனையாகியது (2002இல் ஏ9 பாதை திறக்கப்பட்டபோது வடக்கு நோக்கி வந்த வாகனங்களில் முதலில் வந்தவை மதுபான லொறிகளும் எரிபொருள் தாங்கிகளுமே). அதைவிட ஸ்ரஸ்கர் என்ற பியர் தொழிற்சாலை ஒன்றை கிளிநொச்சி - சாந்தபுரம் பகுதியில் புலிகள் இயக்கினார்கள். ஆனாலும் மதுபானங்களின் விற்பனை, குடித்தபின்பான அடாவடித்தனங்கள் என்பவற்றில் புலிகள் அதிக கட்டுப்பாடுகளையும் கண்காணிப்பையும் வைத்திருந்தார்கள்.

போர் முடிவுற்ற பின்னர் இந்தச் சாராய விவகாரம் தமிழ் மக்கள் மத்தியில் வகைதொகையின்றி அதிகரித்திருக்கிறது. மேலதிகமாகக் கேரளக் கஞ்சா, கெரோய்ன், ஐஸ் போதைப் பொருள் எனப் பல்வேறு வகையான போதை வகையறாக்களும் புழக்கத்தில் உள்ளன.

**மது விற்பனை நிலையப் படையெடுப்பு**

கொரோனாத் தொற்று நெருக்கடியால் நாளாந்தம் பல மக்கள் இறந்துகொண்டிருக்கிறார்கள். பால்மா, சீனி போன்றவற்றுக்கு அதிக தட்டுப்பாடு நிலவுகிறது. திலீபனின் நினைவு வாரம் தொடங்கப்பட்டிருக்கிறது. இவ்வாறதொரு சூழலிலேயே மதுபான சாலைகள் திடீரெனத் திறக்கப்பட்டன.

மண் பற்றும், இனப் பற்றும், போராட்டத்தில் இறந்தவர்கள் பற்றிய எண்ணமும், கொரோனாத் தொற்றால் தமிழினமே மீண்டும் பெருமளவில் அழியும் சூழலும் இருக்கும்போதும் எந்த வகையிலும் அத்தியாவசியப் பொருளுக்குள் அடங்காத சாராயத்தை வாங்குவதற்குத் தமிழர்களில் ஒரு பகுதியினர் முண்டியடித்தது என்பது போர் முடிந்த பத்து ஆண்டுகளில் தமிழினம் எங்கு போய் விழுந்திருக்கிறது என்பதையே காட்டுகிறது.

**பசிலே காரணம்...?**

மதுபான சாலைகளைத் திறந்த விடயத்தில் நிதி அமைச்சர் பசில் ராஜபக்சவையே எதிர்க்கட்சிகள் சாடுகின்றன. தமிழ்த்தேசிய, சிங்களத் தேசிய அரசியலில் வாக்கெடுப்பு நடக்கும் நாள்களில் மதுபானம் முதன்மை இடத்தை வகிக்கிறது. மதுபான சாலை உரிமையாளர்களின் ஆதரவு, குடிகாரர்களின் ஆதரவு என இரு சாராரின் ஆதரவை பசில் ராஜபக்ச பெற்றதுடன் நாட்டில் இன்றுள்ள பொருளாதார முடக்கத்துக்கும் ஓர் இடைக்காலத் தீர்வாக மதுபான சாலைகளின் திறப்பு அமைந்திருக்கிறது.

இதைவிடப் பல தமிழ் அரசியல்வாதிகளின் பிணாமி மதுபானச் சாலைகளும் இதற்குள் அடங்குவதாகவும் தெரிகிறது. "யார் மதுபான சாலையைத் திறக்கச் சொன்னார்கள்?" என்ற கேள்வி எழுப்பப்படுவதற்கு முன் திறந்த மதுபான சாலைகளை நோக்கி ஏன் வடகிழக்குத் தமிழர்கள் படையெடுத்தார்கள் என்பதே கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

அரசு மதுபானசாலைகளைத் திறப்பது தொடர்பில் அநாமதேயச் செயற்பாடுகளில் இறங்கவேண்டிய அவசியம் இருக்கவில்லை. மதுபான சாலைகளைப் பூட்டி வைத்திருப்பதால் வருமானத்தில் வீழ்ச்சி, உள்ளூர் கசிப்பு போன்றவற்றின் உற்பத்திகள் அதிகரித்திருப்பதால் அவற்றை மக்கள் பருகி பெரும் பின்விளைவுகள் ஏற்படும் என்று சொல்லி மதுபான சாலைகளைத் திறப்பதைத் தமது




நவநீதன் - பருத்தித்துறை

# பசியுடன் அலையும் ஆவிகள்

இங்கு போர் முடிந்த கையோடு வெளிநாடு செல்வதற்காக இந்தியாவின் சென்னைக்குச் சென்றேன். சில வருடங்கள் அங்கு வாழ வேண்டிய நிலை ஏற்பட்டதால் அங்கு ஒரு "கேட்டரிங்" (உணவு கொண்டுபோய்ச் சேர்க்கும் வேலை) சேர்வீசிஸில் சிலகாலம் வேலை செய்ய வேண்டியிருந்தது.

நிறுவனத்துக்குக் கிடைக்கின்ற ஓடர்களுக்கு ஏற்ப பொதி செய்யப்பட்ட உணவுகளை மோட்டார் சைக்கிளில் கொண்டுபோய்க் கொடுப்பது எனது பணியாக இருந்தது. நான் அங்குள்ள ஊர்களுக்குப் புதிது என்பதால் உணவுப் பொதிகளை எடுத்துக்கொண்டு நிறுவனத்தில் இருந்து புறம்படும்போதே ஜி.பி.எஸ். மூலம் நான்போக வேண்டிய இடத்தைப் பார்த்துவிட்டுச் செல்வது வழக்கம்.

வழமைபோல அன்றும் ஓர் இரவுப் பயணம் எனக்குக் கிடைத்தது. இரவு 11 மணியிருக்கும். மட்டன் புரியாணிப் பொதிகள் 10ஐ எடுத்துக்கொண்டு எனது பயணத்தை தொடங்கினேன். பொதியைக் கொண்டு சென்று கொடுப்பதற்குரிய இடத்துக்குச் செல்வதற்கு இருவேறு வழிகள் இருந்தன. அவற்றில் ஒன்றான 2 கிலோ மீற்றர்கள் வரை குறுகிய வழியால் செல்வதென்று முடிவெடுத்தேன்.

ஆள் நடமாட்டம் குறைந்த அந்தப் பாதையால் சென்றபோது ஒரு கறுத்த நாய் என்னைக் கலைத்தது. நான் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டுக் கல்லெடுத்து அந்த நாய்க்கு எறிந்தேன். அது அப்பால் சென்றுவிட மீண்டும் பயணத்தைத் தொடங்கினேன். சிறிது தூரத்தில் முன்னால் ஒரு தொடருந்துக் கடவை இருந்தது. அதை நெருங்கியபோது நான் ஏற்கனவே கல்லெறிந்து கலைத்த நாய் பின்னால் நின்றதைக் கண்டேன். பயந்து விட்டேன்.

மீண்டும் கல்லெடுத்து எறிய முனைந்தபோது அந்த நாய் மறைந்து ஒரு புகைபோன்ற கறுத்த உருவம் நிற்பதைக் கண்டேன். பொதியைக் கொண்டுபோய்க் கொடுக்கவேண்டிய நபரிடமிருந்து அப்போது எனக்குத் கைபேசி அழைப்பும் வந்தது. நான் நிற்கின்ற இடத்தின் குறிப்பைச் சொன்னதும் அங்கிருந்து இடதுபுறமாகத் திரும்பி வா நான் அருகிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நிற்கிறேன் என்றார் கைபேசியில் பேசிய அந்த நபர். எனக்குப் பயம் அதிகமாக இருந்தது.

அந்தக் கறுத்த உருவம் நின்ற இடத்திலேயே அசையாமல் நின்றதால் நான் மோட்டார் சைக்கிளை அந்த இடத்திலேயே விட்டுவிட்டு, எரிபொருள் நிரப்பு நிலையம் இருந்த பக்கத்தை நோக்கி ஓடினேன். அங்கு அந்த நபர் காரில் காத்திருந்தார். அவரிடம் நடந்த விடயத்தைக் கூறியதும் என்னையும் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பணியாற்றுகின்ற ஒருவரையும் காரில் ஏற்றிக்கொண்டு அந்த இடத்துக்குச் சென்றபோது, நான் மோட்டார் சைக்கிள் நிறுத்தியிருந்த இடத்திலிருந்து சுமார் பத்தடி தூரத்தில் மோட்டார் சைக்கிள் தூக்கி வீசப்பட்டுக் கிடந்தது. புரியாணிப் பொதிகள் அனைத்தும் பிரித்துச் சிறதி எறியப்பட்டுக் கிடந்தன. என்னுடன் வந்தவர்களின் உதவியுடன் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றேன்.

எனக்கு 3 நாள்கள் வரை கடுமையான காய்ச்சலடித்தது. பின்னர் வேலைக்குச் சென்றபோது அங்கு என்னுடன் கடமையாற்றிய கணேஷ் என்ற நண்பன் எனது கதையைக் கேட்டு நக்கலடித்தான். "பேய் எங்கயடா இருக்கு?" என்று சொல்லிச் சிரித்தான்.

இந்தச் சம்பவம் நடந்து 20 நாள்கள் கழிந்த பின் மீண்டும் அந்தப் பகுதிக்குச் செல்வதற்கு இரவு நேர ஓடர் ஒன்று வந்தது. அன்று கணேஷும் என்னுடன் வந்தான். அவனே மோட்டார் சைக்கிளையும் ஓட்டினான். "எந்த இடத்தில் நாய் நின்றது?" என்று அவன் கேட்டபோது அந்த இடத்தைக் காட்டினேன். அங்கு நாய் இருக்கவில்லை. கணேஷ் சிரித்தான். "கறுத்த உருவம் எங்கே நின்றது?" என்று அவன் கேட்க, அந்த இடத்தையும் காட்டினேன். அங்கும் எதுவும் இருக்கவில்லை.

மோட்டார் சைக்கிளைப் தொடருந்துப் பாதைமேல் ஏற்றியபோது மோட்டார் சைக்கிளைப் பின்னால் நின்று யாரோ இழுப்பதுபோல தெரிந்தது. மோட்டார் சைக்கிளின் இயந்திரம் இயங்காது போனது. நான் பயந்ததுபோல கனேஷும் பயந்துவிட எவ்வளவோ முயற்சித்தும் மோட்டார் சைக்கிளை இயக்கமுடியவில்லை. எனக்கு ஒரு யோசனை வந்தது. கொண்டுசென்ற சாப்பாட்டுப் பொதியை அங்கேயே எறிந்துவிடுவது நல்லது என்று கணேஷிடம்கூற அவனும் ஓம் என்றான். நான் பொதியை எறிந்ததும் மோட்டார் சைக்கிள் மிகச் சாதாரணமாக இயங்கத் தொடங்கியது. உடனேயே அங்கிருந்து ஓடித் தப்பினோம்.



பின்னர்தான் தெரிந்துகொண்டோம் அந்தத் தொடருந்துப் பாதைப் பகுதியில் பலர் தொடருந்துடன் மோதுண்டு உயிரிழந்திருக்கிறார்கள் என்றும், அந்த இடத்தால் இரவில் உணவைக் கொண்டு சென்றால், இப்படி நடக்கிறது என்றும். இதனால்தான் இறந்தவர்களுக்கு உணவு படைக்கப்படுகிறதோ...! என்று எனக்கு இப்போதும் சந்தேகமுண்டு. ஆவிகள் பசியுடன் இருக்கின்றன என்ற விடயத்தை என்னால் இவ்வாறு இருவேறு சந்தர்ப்பங்களில் உணர முடிந்திருக்கிறது.

## தமிழேண்டா...

தகுந்த செயல் என்று வெளிப்படையாக அறிவித்து தொடர்ந்தும் திறக்கப்பட்டிருக்கிறது. சமூக இடைவெளி பேணப்பட வேண்டும் என அறிவித்திருந்தால் மக்கள் முண்டியடித்துக் கொரோனாப் பரவலை ஏற்படுத்தும் நிலை ஏற்பட்டிருக்காது. வெளிநாடுகள் பலவற்றில் இந்த நடைமுறை பேணப்படுகிறது. இதில் சுகாதாரத் துறையினரின் ஆலோசனைகளும் பெறப்பட்டிருக்கும்.

**கொரோனா மக்களிடம்**

அரசு கடந்த ஒன்றரை வருட காலமாகக் கொரோனா பற்றிய விழிப்புணர்வுகளைச் செய்திருக்கிறது. தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகளையும் பெருமளவுக்கு முடிந்திருக்கிறது. இரண்டு டோஸ் தடுப்பூசிகளைப் போட்டவர்கள் இனி எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. அதை மீறினால் தொற்று ஏற்படும் என்றும் சாவுகள் நிகழும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. இவ்வாறாகக் கொரோனாப் பெருந்தொற்று விவகாரம் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டுவிட்டது.

இந்தச் சூழலில் மதுபா சாலைகளுக்கு முன்னால் நீண்ட வரிசையில் நின்றவர்களில் பெரும்பாலானவர்கள் ஏழ்மை நிலையில் உள்ளவர்கள். அவர்கள் தமது உழைப்பில் பத்து முட்டைகளையோ, ஒரு லீற்றர் பாலையோ தமது மனைவி பிள்ளைகளுக்கு வாங்கிச் செல்பவர்கள் அல்லர். நிலமை இவ்வாறிருக்கும்போது சமூக இடைவெளியின்றி மதுபானம் வாங்குவதற்குப் பல மணி நேரம் காத்திருப்பதால் அதிகம் தொற்றுகள் ஏற்பட வாய்ப்புண்டு. இவ்வாறு தொற்றுகளைக் காவிச் செல்பவர்கள் தமது குடும்பங்களில் சிலரைக் கொரோனாவுக்குப் காவுகொடுக்கும்போது அவர்களின் குடும்ப நிலை மேலும் மோசமடையும்.

இதில் தமிழேண்டா பாணியில் குழுவாகக் களமிறங்கிய சிலர் கள்ளச் சந்தையில் ஊர்களுக்குள் வைத்து விற்பதற்காக அதிகம் போத்தல்களை வாங்கிச் சென்றார்கள். இந்தக் குடியின் பின்பான விளைவுகள் பலரை விபத்துகளாலும் கொலை தற்கொலை என அழித்துவிடவும் வழிவகுத்திருக்கிறது. உண்மையான தமிழேண்டா என்பது எதிர்கால சந்ததியை அழிவிலிருந்து பாதுகாப்பதாக இருக்க வேண்டுமே தவிர சமூகக் குற்றங்களைத் தூண்டுவதாக இருக்கக் கூடாது.




# கடவுளர்கள் நிச்சயம் பைத்தியமாகத்தான் இருக்கவேண்டும் II



அது ஆபிரிக்காவின் காட்டுப் பகுதி. கலகாரிப் பாலைவனத்துடன் ஒட்டியுள்ள நிலம். நீரற்ற அங்கே இயற்கையோடு ஒட்டிய வாழ்வை வாழ்கிற பழங்குடியினக் கூட்டம் ஒன்றிருக்கிறது. காட்டில் கிடைக்கின்ற பழங்கள், காய்கள், கிழங்குகள், விலங்கிறைச்சிகளை உணவாக்குவதுடன் கழிகிறது அவர்களின் வாழ்க்கை. மறுபுறத்தில் வெகு தொலைவில் சுறு சுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் மனிதர்களின் நகரம் இருக்கிறது.

காட்டுப் பகுதியில் இருக்கின்ற மனிதர்களுக்கு ஆடை கிடையாது. இலை குழைகளால் தமது உடலை மறைத்துச் சிறு குடில் அமைத்து வாழ்கிறார்கள். உணவுண்பதும் மகிழ்வாக வாழ்வைக் கழிப்பதும் உறங்கி எழுவதுமாக இருக்கிறது அவர்களின் வாழ்வு. அந்தக் காட்டுப் பகுதிக்குள் நகரத்து மனிதர்களின் செல்வாக்கும் இருக்கிறது. யானைகளைக் கொன்று அவற்றின் தந்தங்களை எடுத்துச் செல்வோர், காட்டையும், காட்டு விலங்குகளையும் பாதுகாக்கும் அரச இலாகாவினர், எல்லைச் சண்டையில் ஈடுபடும் படையினர் என அந்தக் காட்டுக்குள் பலர் நடமாடினாலும், அவர்கள் நிரந்தரமற்றவர்களாகவே இருக்கிறார்கள். காரணம் தண்ணீரில்லாத அந்தப் பாலைவனப் பகுதியில் அவர்களால் நீண்ட காலம் தாக்குப் பிடிக்க முடியாது. ஆனால், அங்குள்ள பூர்வக் குடிகளின் நிலை அப்படிப் பட்டதல்ல.



நீரற்ற அந்த நிலம் தான் அவர்களின் தாய்வீடு. விலங்குகளைப் பற்றியும் காட்டுச் சூழல் பற்றியும் நன்கு அறிந்து வைத்திருக்கின்ற அறிவாளிகான அவர்கள் காட்டுக்கோ, காட்டில் வசிக்கின்ற ஏனைய உயிரினங்களுக்கோ அச்சுறுத்தல் கொடுக்காமல் வாழ்கிறார்கள். ஆனால், காட்டுக்கு வந்துபோகின்ற நகரத்து மனிதர்கள் அப்படிப் பட்டவர்களல்லர். யானைத் தந்தங்களை வேட்டையாடுவதற்கு வந்தவர்களின் வாகனம் ஓரிடத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த போது அதையும் அதிலிருந்த தண்ணீரையும் அதிசயப் பொருளாகக் கண்ட காட்டில் வாழும் இரண்டு சிறு வர்கள் அதில் ஏறிக்கொள்ள அந்த வாகனம் புறப்பட்டுவிடுகிறது. அந்த வாகனத்திலிருந்து இறங்கமுடியாமல் இரண்டு சிறுவர்களும் அதில் தவிக்கிறார்கள். அவர்களின் தந்தையான சிக்ஸோ அவர்கள் வாகனத்தில் ஏறிப் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பதை

**விலங்குகளைப் பற்றியும் காட்டுச் சூழல் பற்றியும் நன்கு அறிந்து வைத்திருக்கின்ற அறிவாளிகான அவர்கள் காட்டுக்கோ, காட்டில் வசிக்கின்ற ஏனைய உயிரினங்களுக்கோ அச்சுறுத்தல் கொடுக்காமல் வாழ்கிறார்கள்**

உணர்ந்து அவர்களை மீட்பதற்காக அந்த வாகனம் சென்ற தடயத்தைப் பின்தொடர்து ஓடுகிறார்.

இதேநேரத்தில் விலங்கியல் வல்லுநர் (ஆண்) ஒருவரும், வழக்கறிஞர் (பெண்) ஒருவரும் பயணித்த சிறிய ரக வானூர்தி விபத்துக்குள்ளாகிவிட அவர்களும் அந்தப் பாலைவனத்தில் அலைந்து திரிகிறார்கள். மறுபுறத்தில் இரண்டு சிப்பாய்கள் ஒருவரோடு ஒருவர் ஆயுதத்தை வைத்துக்கொண்டு மாறி மாறிச் சண்டையிடுகின்றனர். தனது குழந்தைகளை மீட்டுவிடவேண்டும் என்ற நோக்கில் இரவு பகலாக

லொறியின் தடத்தைத் தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கின்ற சிக்ஸோ தனது குழந்தைகளை மீட்டாரா இல்லையா? அவரது ஓட்டத்தின் இடையில் அவர் சந்தித்தவை யாவை? வழக்கறிஞரும், விலங்கியல் வல்லுநரும் என்ன ஆனார்கள்? சிப்பாய்களின் நிலை என்னவானது? என்கிற பல கேள்விகளுக்குப் பதில் சொல்கின்ற சுவாரசியமும் அதே நேரம் நல்ல தொரு படிப்பினையும் நிறைந்த நகைச் சுவைகளுடன்கூடிய மீதிப் படம்.

குறிப்பிட்ட சில பாத்திரங்களைக் கொண்டமைந்த பழங்காலப் படம் இது. 1980ஆம் ஆண்டில் உருவாகிய முதற் பாகத்தைத் தொடர்ந்து அதிலிருந்து வேறுபட்ட திரைக்கதையுடன் 1989 ஆம் ஆண்டில் உருவாகிய படம். பாராட்டுகள் பலவற்றைப்பெற்ற இந்தப் படத்தைத் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த ஜேமி உய்ஸ் என்பவர் இயக்கியுள்ளார். எக்ஸ் ஓயர என்பவர் சிக்ஸோ என்கிற முதன்மைப் பாத்திரத்தில் நடிக்கிறார்.

நமீபியாவைச் சேர்ந்த கிராமவாசியான அவருக்குத் தான் பிறந்த வருடம்கூடச் சரியாகத் தெரியாது என்பது உண்மையாக இருக்க அவரது அந்தப் பாத்திரம் தூண்டும் சிந்தனைகள் பல. மனிதர்களை வெட்கித் தலைகுனிய வைக்கிறது அவரின் பாத்திரம். மனிதர்களைக் கடவுள்கள் என்று நினைக்கிற அவரது பாத்திரம் இந்த மனிதர்கள் (அரசியல் இழுபறிகள், ஆட்சி, அதிகார, நிலப் புடுங்குப்பாடுகள், ஆயுத அடிபாடுகள், விலங்குகளைக் கொன்று அவற்றின் இறைச்சியை உதாசீனம் செய்து ஆடம்பர வாழ்வு நோக்கி அவஸ்தைப்படுவது) பைத்தியங்களாகவும் இருக்கிறார்களே என்று வியக்கிறது.

தந்தத்துக்காக யானை கொல்லப்பட்டுக் கிடப்பதைக் கண்ட அவர், ஒன்றுக்கும் உதவாத தந்தத்தை எடுத்துக்கொண்டு பசி தீர்க்கும் உணவை (இறைச்சியை) விட்டுச் சென்றுள்ளார்களே என்று




சிரிக்கிறார். கையில் துப்பாக்கியை வைத்துக் கொண்டு ஒருவரையொருவர் மாறி மாறிச் சிறைப் பிடிக்க முயற்சி செய்கிற இரு வேறு நாட்டுச் சிப்பாய்களைக் கண்டு (நாட்டு எல்லைப் பகுதிகளில் போர் புரியும் அரசுகள் மீதான காட்டுவாசியின் பார்வை) சிரிக்கின்ற அவர், அந்தச் சிப்பாய்களைப் பற்றி வழக்கறிஞரான பெண்ணைச் சந்தித்துச் சொல்லும்போது, அங்கே இரண்டு பேர் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதாகச் சொல்லி அவளை அழைத்துவந்து இவர்களுடன் இணைத்துச் செல்கிறார்.

தனது மொழி இவ்விரு தரப்பினருக்கும் புரியாமலிருப்பதாலும், இவர்கள் மூவரும் ஒரே மொழியைப் பேசுவதாலும் அவர்கள் ஒன்றாக இருப்பதாலேயே அவர்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று அவர் நினைப்பதும், ஆனால், இவர்களின் நிலையோ தலைகீழாக இருப்பதும் பார்க்கும் நமக்குச் சிரிப்பை வரவைக்கிறது. ஒரு சந்தர்ப்பத்தில் தன்னை நோக்கி நீளும் கைத்துப்பாக்கியை அவர் சாதாரணமாகக் கையில் வாங்குமிடம் அவரது ஏதும் அறியாத வெள்ளை உள்ளத்தையும் துப்பாக்கிளால் ஒரு பயனுமில்லை என்பதையும் காட்டுகிறது.

தனது குழந்தைகளை மீட்பதற்காக இரவு பகலாக ஓடிக்கொண்டிருக்கின்ற அவர் தான் வழியில் சந்திக்கிற மனிதர்களுக்கெல்லாம் அன்பைப் பொழிவதும் அவர்களின் மார்பில் கையை வைத்து நட்புப் பாராட்டுவதும் சிறந்த காட்சிகள். அது வரை தமக்குள் முரண்பட்டு நின்ற ஏனைய பாத்திரங்கள் அவரது தூய நடத்தைகளால் கவரப்பட்டு ஒரு கட்டத்தில் தமக்குள் அன்பைப் பொழிவதும் அவரது மனிதநேயம், படத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிற நமக்குள் கூடத் தாவிவிடுவதும் தவிர்க்கமுடியாதவை.

காசு, பணம் பற்றித் தெரியாத, சாதி, மத பேதங்களில்லாத, அதைவிட அரசியல் அறியாத, அதனால் பாகுபாடில்லாமல் அனைவரையும் நேசிக்கும், மற்றவர்களுக்குத் தீங்கிழைக்க யோசிக்கக்கூட முற்படாத அந்தக் காட்டுவாசி மனிதரின் பாத்திரம் படம் முடிந்தும் மனதில் சிரித்துக் கொண்டிருப்பது படத்தின் பலமே.

## நம்மவூர்ச் சுத்துமாத்து

பாலசுப்ரமணியம்
சாவகச்சேரி

# நாய்களை நம்பவைத்துக் களவுகள்



பெருந்தொகையில் புறொயிலர் கோழிகள், கோழிகளை வளர்ப்பவர்கள் தமது பண்ணையில் கோழிகள் களவு போகாது இருப்பதற்காக நாய்களை வளர்ப்பது வழமை. ஆனாலும் எமது ஊரிலுள்ள ஒருவரின் பண்ணையில் 2 அல்லது 3 கோழி என்ற அடிப்படையில் வாரத்தில் 2,3 நாள்கள் களவு போவது வழக்கமாக இருந்திருக்கிறது. கோழிக் களவு எப்படிப் போகிறது என்று தலையைப் பிய்க்க முடிந்ததே தவிர பண்ணையாளரால் கள்வர்களைப் பிடிக்க முடியவில்லை.

கோழிக் கள்வர்களைப் பிடிப்பதற்காக அங்கு பணிபுரியும் தனது ஊழியர்களுடன் இரவு முழுதும் அவர் பண்ணையில் காத்திருந்தபோது அன்று களவு போகவில்லை. காலப்போக்கில் அவ்வாறான சந்தர்ப்பங்களிலும் களவு போகத் தொடங்கியது. கள்வர்கள் வந்து கோழிகளைக் களவெடுத்துச் செல்கிறார்கள், ஆனால், அங்குள்ள நாய்கள் குரைக்கவில்லை. நாய்களின் கண்களில் மண்ணைத் தூவி விட்டுக் களவெடுக்கும் கள்வர்களைக் கண்டு பிடிக்க முடியாமல் பண்ணையாளர் தலையைப் பிய்த்துக் கொண்டேயிருந்தார்.

எப்படியாவது கள்வர்களைக் கண்டுபிடித்தாகவேண்டும் என்ற தனது முயற்சியை நீண்ட காலமாகக் கைவிடாமல் அவர் தொடர்ந்து செய்த பல முயற்சிகளின் பயனாக தனது கோழிகளுக்கு என்ன நடந்தது என்பதை அவரால் கண்டறிய முடிந்தது.

அந்தப் பண்ணையில் வேலை செய்பவர்களுக்கு அங்குள்ள நாய்களுடன் நல்ல உறவுண்டு. நாய்களின் சாப்பாடு, குளிப்பு என எல்லாவற்றையும் அங்கு பணிபுரிபவர்களே மேற்கொள்வதால் நாய்கள் அவர்களைத் தமது எஜமானர்களாக நினைக்கின்றன. உரிமையாளருடன்கூட நாய்கள் அந்தளவுக்கு உறவு வைப்பதில்லை. இந்த நபர்கள் எந்த நேரத்தில் கோழிப் பண்ணைக்குள் புகுந்தாலும் நாய்கள் அவர்களை எதிரிகளாகப் பார்ப்பதில்லை.

கள்வரைப் பிடிப்பதற்காக இரவில் காவலில் ஈடுபடும்போது உரிமையாளர் இருக்கத்தக்கதாக அவரின் கண்களில் மாத்திரம் மண்ணைத் தூவிவிட்டுப் பணியாளர்கள் கோழிகளை மடக்கிவிடுகின்றனர். பண்ணையைச் சுற்றிப் பார்த்து வருவதுபோல சென்று இந்தக் களவை மேற்கொண்டுள்ளனர். கோழிப் பண்ணை வைத்து நடத்துபவர்கள் இந்தத் தொழிலில் யாரையும் நம்ப முடியாத நிலையிலுள்ளனர். இவ்வாறாகப் பல தொழில்களில் சுத்துமாத்துகள் நிறைந்திருப்பதால் முதலீடுகளைச் செய்வோர் விழிப்பாக இருப்பது அவசியம். இதனால்தான் தமிழில் "உள்ளாளும் கள்ளாளும்" என்றொரு சொல்லாடலும் உள்ளதுபோல...!



# சிறைக்குள்...

▪ சு.தர்மராசா ▪

## "தும்பளங்களை" அள்ளி வீசும் சிறைச்சாலை ஊழியர்கள்

**15.10.2001**அன்று மாலையில் சாப்பாடு எடுப்பதற்காக வரிசையாக நின்றோம். சாப்பாடு கொடுக்குமிடத்தில் வழமையாகச் சேவையில் இருப்பவர் அன்று "ஸ்கொட்" (வாகனங்களில் கைதிகளைக் கொண்டுபோவது) போய்விட்டார். அன்று அவரது இடத்தில் பொறுப்பாக இருந்த வேறொருவர் சாப்பாடு வாங்கச் சென்ற கைதிகளைத் தகாத வார்த்தைகளால் பேசினார். மிகச் சிறிய சிறையான மட்டக்களப்புச் சிறையில் பணியாற்றும் பல ஊழியர்களின் முதலீடே அதுதான். அவர்களின் சம்பளத்தை விடத் "தும்பளங்கள்" அதிகமாகக் கிடைக்குமிடம் அது. அவர்கள் தங்களைப் பற்றியோ கைதிகளைப் பற்றியோ கருத்தில் கொள்வதில்லை. கைதிகளின் பராமரிப்பு, அவர்களின் மனநிலை பற்றி ஏற்கனவே பயிற்சிகள் வழங்கப்பட்டபோதிலும் அவர்கள் அதைப் பின்பற்றுவதில்லை.

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் இருந்த முக்கிய குறைபாடு பல ஊழியர்கள் வேலை நேரத்தில் வெறியில் இருப்பது (பகலில்கூட). இதனால் கைதிகள் மத்தியில் தங்களைப் பெரியவர்களாகக் காட்டிக்கொள்ள முடியும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். இதற்காகக் கைதிகளின் உறவினர்களிடமும் பணம் வாங்குவார்கள். சில பொருள்களை வாங்கித் தருவதாக - கொடுப்பதாகக் ( கைதிகளிடமும், கைதிகளைப் பார்க்கவருபவர்களிடமும்) கூறி அந்தப் பணத்தில் குடிப்பதும் வெகு சாதாரணமான விடயம்.

ஒரு நாள் எமது பிரிவிலிருந்த நண்பர் ஒருவர் ஒரு பத்திரிகை வாங்கிவருமாறு ஓர் ஊழியரிடம் நூறு ரூபா கொடுத்திருக்கிறார். அவர் பத்திரிகையை எதிர்பார்த்துக் காத்திருந்தபோது மாலையில் நல்ல வெறியில் வந்த அந்த ஊழியர் "பேப்பர் வாங்கி வரவில்லையெண்டு குறைநினைக்கிறாயா? உனக்குத் தேவையான உதவிகள் எல்லாம் நான் செய்வன்" என்றாராம். அவன் என்னிடம் கூறினான், "பத்திரிகையை வாங்கித் தந்துவிட்டு மிகுதிப் பணத்தை எடுத்திருந்தால்கூடப் பரவாயில்லை" என்று.

**16.10.2001** மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் நீதிபதி விஸ்வநாதன் முன்னிலையில் எனக்குக் குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டு **12.12.2001** (இரண்டு மாத இடைவெளி) வழக்குக்குத் தவணை போடப்பட்டது. கண்டி உயர் நீதிமன்றில் இருந்த பயம் மட்டக்களப்பு உயர் நீதிமன்றில் இருக்கவில்லை. எல்லாம் தமிழ்ச் சூழலாக இருப்பதே அதற்குக் காரணம்.

எனது வழக்குக்காக மறுதவணை மார்கழி மாதம் போடப்பட்டிருந்த நிலையில், **17.10.2001**இல் வெலிக்கந்தையில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் பெரும் சண்டை ஒன்று நடந்ததால் "இப்போதைக்குப் பூசாவுக்கு ஏற்ற மாட்டார்கள்" என்றார் ஒரு சிறைச்சாலை ஊழியர். அப்போதைய **2001**காலச் சூழலில் புதிதாகக் கைதிகள் வந்துகொண்டிருந்தார்கள் ஆனால், யாரும் விடுதலையாகவில்லை.

**19.10.2001** இரவு வானொலிச் செய்தியில் புலிகளின் கிழக்கு மாகாண அரசியல் பொறுப்பாளர் கடுக்காய் முனைப் பகுதியில் வைத்துக் கிளைமோர் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டுவிட்டார் என்று சொல்லப்பட்டது. இந்தச் செய்தி உண்மையா? பொய்யா? என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. அவ்வாறு நடந்தால் மட்டக்களப்பு நகரில் கடுமையான தாக்குதல் நடந்திருக்கும் என்ற எதிர்பார்ப்பு எல்லோரிடமும் இருந்தது.

**23**

**புலிகள் நகருக்கு வந்து சிறைச் சாலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு முன்னர் படையினர் அல்லது பொலிஸ் சிறைச்சாலைக்குள் புகுந்து அரசியல் கைதிகளைக் கொன்றுவிடக்கூடும் என்ற அச்சம் பொதுவாகக் கைதிகள் மட்டத்தில் இருந்தது.**

புலிகள் நகருக்கு வந்து சிறைச்சாலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு முன்னர் படையினர் அல்லது பொலிஸ் சிறைச்சாலைக்குள் புகுந்து அரசியல் கைதிகளைக் கொன்றுவிடக்கூடும் என்ற அச்சம் பொதுவாகக் கைதிகள் மட்டத்தில் இருந்தது. **25.10.2001**இல் இரண்டு கைதிகள் புதிதாகக் கொண்டுவரப்பட்டனர். பளுகாமம் பகுதிக்குள் படையினர் முன்னேறிச் சென்றபோது புலிகளின் அலுவலகம் ஒன்றுக்குள் நின்றதற்காக அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். ஒருவன் கடை வைத்திருப்பவன். காலையில் அந்தக் காணிக்குள் குளிக்கப்போனபோது கைது செய்யப்பட்டான். மற்றவர் அந்த அலுவலகத்தின் காவல்காரர். அவருக்கு வயது **57.**

எல்லாவற்றையும் பார்க்கத் துன்பமாக இருந்தது. புதிதாக இரண்டு குடும்பங்கள் கஷ்டத்தில் விழுந்துவிட்டன என்பதையே அவர்களின் வருகை உணர்த்தியது. **26.10.2001**இல் **3** கைதிகள் புதிதாக அரசியல் கைதிகள் என்ற மதிப்புடன் வந்து சேர்ந்தார்கள் அதில் இருவர் ஆசிரியர்கள். ஒருவர் முச்சக்கரவண்டி உரிமையாளர்.

புலிகளின் பளுகாமம் அலுவலகத்துக்குள் படையினர் சென்றபோது அங்கு கண்டெடுத்த ஒளிநாடா ஒன்றில் இந்த மூவரின் படங்களும் இருந்துள்ளன. பொது நிகழ்வொன்றில் (விளையாட்டுப்போட்டி) அந்தப் படம் பிடிக்கப்பட்டிருந்தது என்று அவர்கள் கூறினர். இதெல்லாம் மிகச் சிறிய குற்றச்சாட்டு என்று நன்கு தெரிந்திருந்தபோதும் கைதானவர்களின் மனநிலை சிறை என்ற பயம் என்பவற்றால் அவர்கள் அசாதராண நிலையில் இருப்பதைக் காணமுடிந்தது. (தொடரும்)

▮ தமிழில் கோ.கமலகண்ணன் ▮

**மதுவுக்கு ஓராண்டுக்கு முன் திருமணம் நடந்தது. தான் வந்தது முதலே இந்தக் குடும்பத்தின் ஒழுங்கையும் தன்மானத்தையும் காத்து மேம்படுத்த தன் ஒவ்வொரு மூச்சையும் செலவிட்டாள் இப்பெண்**

▮ முன்ஷி பிரேம்சந்த் ▮

# சவச் சீலை



குடிசைக்கு வெளியே அணைந்து போன தீக்குழிக்கு முன்பாக தந்தையும் மகனும் அமர்ந்திருந்தனர். உள்ளே பேறுவலி கண்ட மகனின் இளம் மனைவி, புத்யா அவ்வப்போது இதயத்தைக் கிழிக்கும் கூரிய ஓலங்களை அவர்களுக்கு அனுப்பித் துணுக்குற வைத்தாள். அவள் வலியால் துடித்துக்கொண்டிருக்கிறாள் என்பதை அவ்வோலமே அறிவித்தது. கடுமையான குளிர் இரவு. எங்கும் உறைவு நீக்கமற நிறைந்திருந்தது. அந்தக் கிராமத்தை இருள் மெல்ல மெல்ல மொத்தமாக விழுங்கியிருந்தது.

'இவள் உயிர் பிழைப்பாள் என்று தோன்றவில்லை' என்றார் கிஷு. 'இந்த நீண்ட நாள் முழுவதும் அவள் வலியால் விதிர்த்தபடியே இருக்கிறாள். நீ உள்ளே சென்று அவளைப் பார்த்தால் பரவாயில்லை.'

'அவள் சாகப் போகிறவள் எனில் நான் எட்டிப் பார்ப்பதால் என்ன நலம் விளையப் போகிறது?' துயர்மிகு குரலில் பதிலளித்தான் மது.

'நீ நன்றி கெட்டவன். அந்தப் பெண் உனக்கு ஓராண்டாக மனைவி தரவேண்டிய அத்தனை சுகங்களிலும் தவறாமல் இருந்திருக்கிறாள்!'

'இந்த நரக வேதனையில் அவள் துடிதுடிப்பதை என்னால் பார்க்க முடியாது.'

அவர்கள் சாமர்கள். அவர்களது பழக்கங்கள் அந்த ஊரில் அத்தனை விரும்பப்படுவன அல்ல. கிஷு ஒரு நாள் வேலைக்குப் போனால் மூன்று நாட்கள் ஓய்வெடுப்பான். தன்னால் உதவ இயன்ற வேலைகளைக்கூட மது தவிர்ப்பான். ஒருவேளை ஒருமணி நேரம் வேலை செய்தால் அதே அளவு நேரத்திற்குத் தன் சைலக் குழலைப் புகைத்துக்கொண்டிருப்பான். இதனாலேயே இந்தச் சோம்பேறிகளுக்கு யாரும் வேலை தருவதில்லை. பல காரணங்களைத் தேடி வேலை செய்யாமலிருப்பது அவர்கள் வழக்கம். வீட்டில் ஒரு பிடி அரிசி இருந்துவிட்டாலே அதுவும் வேலையை ஒதுக்கப் போதுமானது. ஒரு முறை உண்ண அரிசியும் இல்லாமல் சில வேளைகள் பட்டினி கிடக்க நேர்ந்தபோது கிஷு ஒரு மரத்தில் ஏறி கிளைகளை உடைத்துப் போட அதை எடுத்துச் சென்று சந்தையில் விற்று வந்தான் மது. அந்தக் காசு செலவாகும் வரை அவர்கள் வேலையைப் பற்றி சற்றும் பொருட் படுத்தவில்லை. அடுத்தப் பட்டினித் தொடர் உண்டான பிறகே அவர்களுக்கு மீண்டும் உடைக்கப்பட வேண்டிய மரக்கிளைகள் நினைவில் எழும். வேலை தேடலாம் என்று கிளம்பி வெறுங்கையோடு திரும்பும் சம்பவங்களும் நிகழும். இந்த உழவர்களின் கிராமத்தில் வேலைக்கொன்றும் அவ்வளவு பஞ்சமில்லை. கடினமாக உழைப்பவர்களுக்கு உரிய ஊதியத்துடன் நூறு வேலைகள் உண்டு.

எப்போதாவது ஒரு ஆள் செய்யும் வேலைக்கு இருவர் தேவைப்படும் அவசியம் ஏற்பட்டால் மட்டுமே இவர்களுக்கு வேலை கிடைக்கும். பணியில் தேவையற்ற ஊதியம் கோருவது அல்லது தனக்குச் சொந்தமற்ற ஒன்றை எடுக்க நினைப்பது போன்ற பிரச்சினைகள் ஏற்கனவே துறவு வாழ்க்கை வாழ்ந்த இவர்களுக்கு இருந்ததில்லை. கூடவே இறை நம்பிக்கையின் அடிப்படையில் முன்வைக்கப்பட வேண்டிய உறுதிமொழியும் சுயக்கட்டுப்பாடும் இங்கு தேவைப்படவில்லை. ஏற்கனவே விலகலில் துய்த்திருக்கும் ஆட்களுக்கு எதற்குத் தன்விளக்க ஒப்பந்தம்? அவர்களது வாழ்க்கை விசித்திரமானது. சில களிமன் பானைகளைத் தவிர அவர்களுக்கு உடைமை ஏதுமில்லை. திகம்பரத்தை மறைக்க கந்தல் துணியைச் சுற்றியிருந்தனர். கடன்சுமை மிகுந்திருந்தது. மக்கள் வசைபேசி அவமதிப்பது இயல்பாகி இருந்தது. என்ற போதும் உலகியல் மாயைகளின் பிடியில் சிக்காத ஞானிகளைப் போல் சொல்வதற்கு எந்தக் கவலையும் அற்றவர்களாய் இருந்தனர். அவர்களது பரிதாபகரமான ஏழ்மை நிலையை அறிந்திருந்த போதும் எப்போதாவது அவர்களுக்கு அவ்வூரார் கடன் தந்தனர். அது ஒருபோதும் திரும்பி வரப்போவதில்லை என்று தெரிந்த பின்னும். அறுவடையின் போது சில தானியங்களைத் திருடுவதும் பிறருடைய நிலத்தில் இருந்து உருளைகளைத் தோண்டி அவற்றை வேகவைத்து வயிற்றை நிரப்பிக்கொள்வதும் உண்டு. சில இரவுகளில் கரும்புக் கொல்லையில் நுழைந்து ஒரு சில கரும்பைத் திருடிச் சுவைப்பதும் உண்டு.

அறுபதாண்டுகளாக இந்த துறவுச் சுகத்தை அனுபவித்து வாழ்ந்திருக்கிறான் கிஷு. தன் தந்தையின் ஒவ்வொரு இம்மி பிசகாத வாரிசான மதுவும் அவர் காலடியைப் பின்பற்றுகிறான். அவன் செய்த சாதனை என ஏதேனும் உண்டெனில் தன் தந்தையின் துறவு மகுடத்தில் தன் சோம்பேறித்தனத்தின் மூலமாக இன்னொரு மணிக் கல்லைச் சேர்த்தது மட்டும்தான். கீஷுவின் மனைவி சில காலத்திற்கு முன் இறந்தாள். மதுவுக்கு ஓராண்டுக்கு முன் திருமணம் நடந்தது. தான் வந்தது முதலே இந்தக் குடும்பத்தின் ஒழுங்கையும் தன்மானத்தையும் காத்து மேம்படுத்த தன் ஒவ்வொரு மூச்சையும் செலவிட்டாள் இப்பெண். பிற வீடுகளில் தானியங்களை அரைத்து, புல்வெட்டி கொஞ்சம் சம்பாதித்தாள். அதைக்கொண்டு இந்த வெட்கம் கெட்ட ஆண்பிள்ளைகளின் தொந்தியை நிரப்புவதற்காக மாவு வாங்குவாள். அவள் இருப்பு அவர்களை இன்னும் படு சோம்பேறியாகவும் வலியறியாத மாக்களாகவும் மாற்றியது. யாராவது வேலை தந்தால் இருமடங்கு கூலி கேட்டு அதற்கு ஒரு பைசா குறைந்தாலும் 'வேறு ஆளைப்பார்' என்று மிதப்புடன் பதிலளித்தனர். இப்போது அதே பெண் நாள் முழுக்க இடுப்பு வலியால் துடித்தபடி இருக்க இந்த இரண்டு ஆண்களும் அநேகமாக அவள் தன் கடைசி மூச்சை எப்போது விட்டொழிவாள், நாம் சென்று நிம்மதியாகத் தூங்கலாம் என்ற நினைப்புடன் அமர்ந்திருக்கின்றனர்.

சாம்பலிலிருந்து உருளைக்கிழங்குகளை வெடுக்கென எடுத்து உரித்தவாறு, 'எழுந்திரு. உள்ளே போய்ப் பார். அவளுக்குள் ஏதோ ஆவி புகுந்தது போல் இருக்கிறது. சூனியக்காரி! இந்தக் கொள்ளைக்கார ஊரில் பேயோட்டுபவன்கூட ஒரு ரூபாய் கேட்பான். அதை யார் நமக்குத் தரத்தயாராக இருக்கிறார்கள்?' என்று மதுவிடம் கிஷு சொன்னான்.

தான் உள்ளே போனால் எல்லா உருளையையும் கிஷுவே உரித்திடுவார் என்ற தயக்கத்தில் 'எனக்குப் பயமாக இருக்கிறது' என்றான் மது.

'என்ன பயம்? நான் இங்குதானே இருக்கிறேன்?'
'அப்படியெனில் நீங்களே சென்று பார்க்கலாமே?'

'என் பொண்டாட்டி சாகக்கிடந்த போது மூன்று நாட்கள் அவள்

பக்கத்திலேயே நானும் இருந்தேன். புத்யா எனைக் கண்டால் சங்கடப்படுவாள். அவள் முகத்தை முக்காடு போடாமல் இருந்து நான் ஒருபோதும் பார்த்ததே இல்லை. இத்தகைய உணர்ச்சி மீறிய நிலையில் அவள் என்னைப் பார்த்தால் நாணம் கொண்டு தன்னிச்சையாக அசையவோ வலியைச் சமாளிக்கவோ தடை உண்டாகும்.'

'ஒருவேளை அவள் ஒரு பிள்ளையைப் பெற்றெடுத்தால் என்னாகும்? அரிசி, எண்ணெய், சர்க்கரை என்று எதுவுமே வீட்டில் இல்லையே.'


'ஓ! சரிதான். நாம் எல்லாவற்றையும் சேகரிப்போம். முதலில் பகவான் நமக்குக் குழந்தையைத் தரட்டும். இதுவரை நமக்கு ஒற்றைப் பைசா தர யோசித்தவர்கள் எல்லாம் பிள்ளை பிறந்ததும் தானாக வந்து தானம் தருவார்கள். எங்களுக்கு ஒன்பது குழந்தைகள் பிறந்து நொடித்துப் போனோம். ஆனால் ஒவ்வொரு முறையும் தானாக எல்லாம் சரியாகிவிட்டது.'

இத்தகைய மனவோட்டம் உருவானது அத்தனை வியப்பிற்குரியதல்ல. அல்லும் பகலும் பாடுபடும் மக்களின் வாழ்க்கைத் தரம் கிஷூ மதுவின் வாழ்க்கையைவிட அத்தனை மேம்பட்டதாக இருக்காத இந்தக் குமுகச் சூழலில் இந்த மனநிலை உருவாகி வளர்வது தவிர்க்கவியலாததே. குடியானவர்களின் சூழலைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்பவர்கள் இருக்கும் நிலையில் பற்றற்ற மனநிலை என்பது பலனளிப்பதே. ஒருவகையில் கிஷூ சொல்வது உண்மையின் பிரதிபலிப்பு. நிலத்தில் உழைக்கும் வர்க்கத்தினரிடம் நட்பு பேணுவதைவிட நெருக்கமாகச் சண்டைக்கும் கட்டப்பஞ்சாயத்திற்கும் தயாராக இருக்கும் போக்கிரித்தனமான ஆட்களுடன் கைகோர்த்து நல்லுறவு பேணும் குடியானவர்கள் நிறைந்திருக்கும் சூழலில் அவர் பேச்சு விவேகமானது என்றும் சொல்லலாம். அவனிடம் இல்லாமல் இருந்தது கட்டப்பஞ்சாயத்துக்காரர்களிடம் இருந்த விதிமுறைகளைப் பின்பற்றும் பழக்கமே. எனவே இவரைப் போன்றவர்கள் எல்லாம் முன்னேறி அதிகாரம் கொண்டவர்களாக ஆகிவிட்ட நிலையில் இவர் மட்டும் அவர்களால் அவமானத்திற்கு உள்ளாக்கப்படும் நிலையிலேயே தொடர்ந்து இருக்கிறார். குறைந்தது இன்னும் அடிநிலையில் கடினமாக உழைத்து முன்னேறாமல் இருப்பவர்களைப் போல முதுகொடிய தான் வேலை செய்ய வேண்டியதில்லை என்ற எண்ணத்தில் தன்னிறைவு கொள்கிறார். இவரது எளிய சிந்தனையும் பொறுப்பேற்காத மனமும் தன்னைச் சுரண்ட நினைப்பவர்களுக்கு எதிரான வலுவான ஆயுதங்கள்.

இருவரும் சூடான உருளைத் தோலை உரித்து கோரப் பசியில் இருப்பவர்களைப் போல வாயிலிட்டனர். நேற்றிலிருந்து ஒரு உருண்டைச் சோற்றைக்கூட உட்கொள்ளாத நிலையில் அவர்களால் அதன் சூடு குறையும் வரை காத்திருக்க முடியவில்லை. அடிக்கடி நாச்சூடு பட்டது. கிழங்கின் வெளிப்புறம் அவ்வளவு சூடாக இல்லாததால் வாயில் போட்டனர். அவர்களது பற்கள் கிழங்கைக் கடித்ததும் உள்ளிருந்த மாவுப்பகுதியின் அதீத சூடு அவர்களது நா, அன்னம், தொண்டை அனைத்தையும் பதம் பார்த்தது. அந்தக் கனல் துண்டங்களைக் கடித்துச் சுவைத்துத் தின்பதைவிட நேரடியாக விழுங்குவது நல்லது என்று தோன்றியது. எப்படியோ வயிற்றுக்குள் அனுப்பிவிட்டால் அது தன் சூட்டை இழந்து குளிர்ந்து தானே ஆகவேண்டும்? துண்டுகளைத் துரிதமாய் விழுங்கினார்கள் இருந்தும் இந்த முயற்சி விழிகளை நீரால் ததும்ப வைத்தது.

மடமடவென விழுங்கிய போது இருபதாண்டுகளுக்கு முன்பு தாக்கூரின் திருமண விழாவில் தான் பங்கேற்றதன் நினைவுகள் கிஷூவின் மனத்தில் எழுந்தன. விருந்தில் அளவுக்கு அதிகமாக அவன் உண்டதால் அந்தத் தினம் தன் வாழ்வின் பிடித்தமான தினங்களுள் ஒன்றாக நிலைத்துவிட்டது. இப்போதும் அந்த நினைவுகள் உயிரோட்டமாக இருக்கின்றன. 'அந்த அற்புதமான சாப்பாட்டை நான் உயிருள்ளவரை மறப்பேனா! அதற்குப் பிறகு அது போல ஒரு சாப்பாட்டை நான் உண்டதே இல்லை. பிரமாதம்! நான் எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிட்டுக்கொள்ளலாம். பெண் வீட்டார் பூரிகளை அடுக்கினர். அது மட்டுமா - நெய்யூற்றிய இனிப்புகள், ரைத்தா, மூன்று வகை உலரிலை உணவுகள், இன்னும் நிறைய காய்கறிகள், கெட்டித்தயிர், சட்னி! அந்த உணவின் சுவை எத்தகையது என்று விவரிக்க முடியாது. எதையும் கோரலாம். இனி முடியாது எனும் நிலை வரும் வரை எவ்வளவு வேண்டுமானாலும் உண்ணலாம். மக்கள் தண்ணீருக்கு வயிற்றில் இடமில்லை என்ற அளவிற்கு உண்டனர். ஆனால் பரிமாறுபவர்களோ நாங்கள் வேண்டாம் என்றாலும் கை வைத்து தட்டை மறைத்தாலும் அதையும் மீறி வட்டவட்ட நறுமண கச்சோரிகளைச் சுடச்சுட தட்டில் வைத்தபடி இருந்தனர். அவர்களுக்குப் போதும் என்ற சொல்லுக்குப் பொருளே தெரியவில்லை. கைகழுவி வாய் கொப்பளித்த உடன் தயாராக நின்றிருந்தவர் பான் தந்தார். எனக்கோ அதை வாயில் வைத்து அசைபோட விருப்பமில்லை. என்னால் எழுந்து நிற்கவே முடியவில்லை. எப்படியோ தத்தித் தடுமாறி வந்து போர்வையை விரித்து நீட்டிப் படுத்துக்கொண்டேன். தாக்கூரின் பெருந்தன்மை அத்தகையது. அதற்கு எல்லையே இல்லை!'

மது தன் கற்பனையில் இந்த உணவுகளின் சுவையை உணர்ந்தவனாய், 'நமக்கு மட்டும் இப்போது அத்தகைய உணவை யாரேனும் பரிமாறினால் எப்படி இருக்கும்?' என்று வாய் பிளந்து வியந்தான்.



பொழுது விடிந்தது. மது குடிசைக்குள் சென்று பார்த்தான். மனைவியின் உடல் விறைத்து குளிர்ந்திருந்ததை உணர்ந்தான். அவள் வாயைச் சுற்றி ஈக்கள் மொய்த்தன.

'யார் தருவார்? வாய்ப்பே இல்லை. அது ஒரு காலம். இப்போது மக்கள் கஞ்சக் கைகள் வைத்திருக்கிறார்கள். அவர்கள் "திருமணத்திற்கு நிறைய செலவழிக்காதீர்கள்! காரியங்களுக்கு நிறைய செலவழிக்காதீர்கள்" என்று அறிவுரை தருகிறார்கள். அவர்களிடம் "சரி ஏழைகளைப் பிழிந்து கட்டுக்கட்டாகச் சம்பாதித்து வைத்திருக்கிறீர்களே? அதை என்னதான் செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்க வேண்டும். பிழிந்து சம்பாதிப்பது நிற்பதே இல்லை. ஆனால் செலவு என்று வரும்போது மட்டும் கஞ்சத்தனம் ஒட்டிக் கொள்கிறது பாரேன்.'

'நீங்கள் குறைந்தது இருபது பூரியாவது உண்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன்.'

'அதற்கும் மேல்.'

'நான் மடமடவென ஐம்பது விழுங்கி இருப்பேன்.'

'நானும் ஐம்பதுக்குக் குறையாமல் உண்டிருப்பேன். அப்போது இளமையின் மிடுக்கு வேறு. உனக்கு அதில் பாதி வலிமைகூட இல்லை.'

உருளைக்கிழங்குகளைத் தின்று தீர்த்ததும் தண்ணீர் அருந்திவிட்டு கந்தல் வேட்டியைச் சுற்றிக்கொண்டு, தீக்குழியின் அருகிலேயே கருவிலிருக்கும் தோரணையில் சுருங்கிப் படுத்தனர். இராட்சத அரவங்கள் அசையாமல் கிடப்பது போலிருந்தது. அதே சமயம் புத்யா இடுப்பு வலியால் இன்னும் அவதியுற்று முனகியபடி இருந்தாள்.

பொழுது விடிந்தது. மது குடிசைக்குள் சென்று பார்த்தான். மனைவியின் உடல் விறைத்து குளிர்ந்திருந்ததை உணர்ந்தான். அவள் வாயைச் சுற்றி ஈக்கள் மொய்த்தன. அவளது நிலைகுத்திய கல்விழிகள் மேல் நோக்கி எதையோ முறைத்துப் பார்ப்பது போல் இருந்தது. அவளுடலில் தூசியும் கறையும் படிந்திருந்தது. அவள் கருவிலேயே குழந்தை இறந்திருந்தது.

அவன் கிஷூவை நோக்கி விரைந்தான். இரு ஆண்களும் உரக்க ஒலியெழுப்பி நெஞ்சில் அடித்துக்கொண்டு ஒப்பாரி வைத்தனர். வருத்தம் தோய்ந்த அவர்களது குரலைக் கேட்ட சுற்றத்தார் ஓடி வந்தனர். காலம் காலமாக நடப்பதைப் போல தம் இரக்கத்தைத் தெரிவித்து அவர்களை ஆறுதல்படுத்த சில வார்த்தைகளைக் கூறினர்.

இருப்பினும் இப்படியே மாரடித்து ஒப்பாரி வைக்க போதிய நேரமில்லை. அவர்களுக்கு உடனே சவச்சீலையும் பிணத்தை எரிக்க விறகுகளும் தேவைப்பட்டன. வீட்டிலிருந்த பணம் எல்லாம் பருந்துக் கூட்டத்தில் சிக்கிய மாமிசத்தைப் போலத் தீர்ந்துவிட்டது.

அப்பனும் மகனும் அழுது ஓலமிட்டபடி அந்த ஊரின் நிழக்கிழார்களைப் பார்க்கச் சென்றனர். வேலைக்கு அழைத்தால் வராமல் சின்னச் சின்னத் திருட்டு செய்யும் இந்த இருவரிடம் அந்தப் பெரிய மனிதர்கள் கடுமையான சினத்தில் இருந்தனர். சிக்கினால் அடித்து உதைக்கவும் தயாராக இருந்தனர். இருப்பினும், 'என்னாயிற்று கிஷூ? ஏன் அழுகிறாய்? இப்போதெல்லாம் உன்னைக் காண்பதே அரிதாகிவிட்டதே. கிராமத்தை விட்டு வெளியேறும் கணக்கேதும் வைத்திருக்கிறாயா என்ன?' என்று கேட்டனர்.

கிஷூ தன் நெற்றி நிலம்பட அவர்கள் காலில் வீழ்ந்தான். 'ஐயா ஒரு கொடிய சம்பவம் எங்களுக்கு நிகழ்ந்துவிட்டது. நேற்றிரவு மதுவின் மனைவி செத்துவிட்டாள். நாள் முழுவதும் வலியால் துடித்திருந்தாள். நாங்கள் இருவரும் அவளருகிலேயே நேற்றிரவு முழுவதும் இருந்தோம். மருந்து, பானம், மூலிகை என எல்லாவற்றையும் - பாருங்களேன் முயன்றுவிட்டோம். இருந்தாலும் எங்களை அம்போ என்று விட்டுவிட்டுச் சென்றுவிட்டாள். எங்களுக்கு இப்போது யார் சோறிடுவார்கள்? தலைவரே, நாங்கள் நாசமாகிப் போனோம். இந்த வீடு களையிழந்துவிட்டது. நான் உங்கள் அடிமை. நீங்கள் மட்டுமே அவளை எரியூட்ட உதவ முடியும். எங்களிடம் இருந்த மிச்ச சொச்சத்தையும் மருந்து வாங்க செலவழித்து விட்டோம். உங்கள் மேலான கருணையினால் மட்டுமே அவளது இறுதிச் சடங்கு நிகழ முடியும். உங்கள் வீட்டுக் கதவை விட்டால் இந்த ஏழை பிச்சை எடுக்க எந்தக் கதவு இருக்கிறது?'

நிலக்கிழார் நிதானமான கருணைமிக்க மனிதன். ஆனால் கிஷூக்குக் கருணை காட்டுவது மழையில் நனையும் காக்கைக்கு வெள்ளை வர்ணம் பூசுவது போல. அவனிடம், 'இங்கிருந்து ஓடிச் செல்! அழுகும்வரை வீட்டிலேயே சவத்தை வைத்துக்கொள்! வேலைக்குக் கூப்பிட்டால் காற்றோடு காற்றாக பறந்துவிடுவது. ஆள் கண்ணில் அகப்படுவதே இல்லை. இன்று உனக்குக் காரியம் என்றதும் என்னைப் புகழ்ந்து பேசி காசு

பிடுங்க வந்திருக்கிறாய். பிச்சைக்கார நாயே!' என்று சொல்ல மனத்தில் நினைத்துக்கொண்டார்.

ஆனால் இது பழிவாங்கவோ வெகுண்டெழவோ சரியான தருணமன்று. சரியோ தவறோ தன் சட்டைப்பையில் இருந்து இரண்டு ரூபாயை எடுத்து ஒரு வருத்தச் சொல்கூட சொல்லாமல் அவனிடம் எறிந்தார். இந்தச் சங்கடத்திலிருந்து விரைந்து வெளியேறும் விதமாக அவன் முகத்தைக்கூட பார்க்கவில்லை.

நிலக்கிழாரே இரண்டு ரூபாய் தந்துவிட்ட பிறகு அந்தக் கிராமத்தின் வணிகர்களும் வட்டிக்காரர்களும் அவனை எப்படி புறக்கணிப்பார்கள்? அவன் நிலக்கிழார் இரண்டு ரூபாய் அளித்த செய்தியை ஊரெங்கும் கேட்கும்படி தண்டோரா போட்டான். மக்களுள் சிலர் இரண்டு அனா, நான்கு அனா என அவனுக்குத் தந்தனர். சிலர் அரிசி பருப்பு தந்தனர். சிலர் விறகுகளை. இரண்டு ஆண்களும் சவச்சீலை வாங்குவதற்காக நண்பகலில் சந்தைக்குச் செல்ல வேறு சில ஆட்கள் பிணத்தைத் தூக்கிச் செல்வதற்கான பாடை செய்ய மூங்கில் கழிகளைப் பொருத்தினர்.



**என்ன கொடுமையான பழக்கம் இது! உயிரோடிருக்கையில் உடம்பை மூட போதிய கந்தல் துணிகூட கிடைக்காதவளுக்கு இறந்த பிறகு புதிய துணியில் சவச்சீலை போர்த்தியாக வேண்டுமாம்.**

இளகிய மனம் படைத்த சில பெண்கள் வந்து துர்பாக்கியசாலியான புத்யாவின் உடலைப் பார்த்து சில துளிக் கண்ணீர் சிந்திவிட்டு அங்கிருந்து நீங்கினர்.

சந்தைக்குச் சென்றதும் 'நம்மிடம் ஏற்கனவே சிதையேற்றுவதற்குப் போதுமான விறகுகள் இருக்கின்றன மது. என்ன சொல்கிறாய்?' என்றான் கிஷு.

'ஆம். நிறையவே உள்ளன' என்று பதிலளித்தான் மது. 'இப்போது நமக்குச் சவச்சீலை மட்டுமே தேவை.'

'அப்படியானால் விலை மலிவான ஒன்றை வாங்கலாம்.'

'ஆமாம். மலிவானதே போதும். பிணத்தைச் சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்லும் போது இருட்டிவிடும். இருளில் சவச்சீலையின் தரத்தையெல்லாம் யார் பார்க்கப் போகிறார்கள்?'

'என்ன கொடுமையான பழக்கம் இது! உயிரோடிருக்கையில் உடம்பை மூட போதிய கந்தல் துணிகூட கிடைக்காதவளுக்கு இறந்த பிறகு புதிய துணியில் சவச்சீலை போர்த்தியாக வேண்டுமாம்.'

'சவச்சீலை பிணத்தோடு சேர்ந்து எரியத்தானே போகிறது.'

'வேறென்ன நடக்கும்! இந்த ஐந்து ரூபாய் நம் கையில் முன்னரே கிட்டியிருந்தால் அவளது மருத்துவச் செலவுக்காவது பயன்பட்டிருக்கும்.'

ஒருவர் மற்றவரது பூடகமான அர்த்தத்தை ஏற்பதை நோக்கியே பேசினர். மாலை நிழல்கள் நீளும் வரை அந்தச் சந்தையிலேயே அலைந்து திரிந்தனர். தற்செயலாகவோ திட்டமிட்ட நிகழ்வாகவோ ஒரு சத்திரத்தின் முன்பு வந்து சேர்ந்தனர். சொல்லாமலேயே புரிந்துணர்வு கொள்ளும் ஒப்பந்தம் செய்தவர்களைப் போல உள்ளே நுழைந்து சில நொடிகள் தயங்கி நின்றனர். கிஷு ஒரு நாட்டுச் சாராய போத்தலையும் அதனோடு தொட்டுக்கொள்ள சில கஜக் துண்டுகளையும் வாங்கினான். வாசற்படியில் அமர்ந்து அருந்தத் தொடங்கினர்.

தொண்டையில் ஓரிரு குடுவைகள் வேகமாக உள்ளிறங்கியதுமே இரு ஆண்களின் தலையும் சுற்றலெடுத்தன.

'சவச்சீலையின் பயன்தான் என்ன? எப்படியோ எரிந்து சாம்பலாகத்தான் போகிறது. மருமகள் அதைத் தன்னுடன் சேர்த்து எரிக்க நிச்சயம் ஒப்பமாட்டாள்.'

தெய்வங்களிடம் தன் களங்கமின்மையை முன்வைப்பது போல வானத்தை நிமிர்ந்து பார்த்தான் மது. 'உலக வாழ்க்கையே இத்தகையதுதான். ஏன் இந்தப் பணப்பைகள் பிராமணர்களுக்கு மட்டும் ஆயிரமாயிரமாக அள்ளி இறைக்கின்றனர்? அவர்கள் இறந்த பிறகு மறு உலகில் நன்கு கவனிக்கப்படுவார்கள் என்பதற்கு என்ன உறுதி இருக்கிறது?'

'சரி, பெரும்புள்ளிகளிடம் நிறைய பணமிருக்கிறது. அவர்கள் கொட்டட்டும். ஆற்றில் போடுவதற்கு நம்மிடம் என்ன இருக்கிறது?'

'சரி மக்களிடம் போய் நாம் என்ன சொல்வது? அவர்கள் எங்கே சவச்சீலை எனக் கேட்க மாட்டார்களா?'

கிஷு கொக்கரித்தான். 'நம் மடியில் இருந்த பணம் நழுவி விழுந்துவிட்டது. அதைத் தேடிப் பார்த்தும் கிட்டவில்லை என்று சொல்வோம்.'

மதுவும் சிரித்தான். எதிர்பாராத இந்தப் பாக்கியத்தையும் ஊழை விஞ்சிய தம் சாதுரியத்தையும் எண்ணினான். 'பாவம் புண்ணியவதி. நமக்கு நல்லவிதமாக இருந்தாள். செத்த பிறகும் நமக்கு வயிறு நிறைய உணவு கிடைக்க வழி செய்திருக்கிறாள்.'

இப்போது பாதிக்கும் மேலாகப் போத்தலைக் காலி செய்திருந்தனர். கிஷு மதுவை அனுப்பி இரண்டு இணை பூரிகள், குழம்புக்கறி, ஈரல் வறுவல் ஆகியவற்றோடு வறுத்த மீன்களையும் வாங்கி வரச்சொன்னான். சத்திரத்திற்கு நேர் எதிரில் அந்தக் கடை இருந்தது. இரண்டு இலைத்தட்டுகளில் இவை அனைத்தையும் வாங்கி உடனடியாகத் திரும்பினான் மது. அதற்கு ஒன்றரை ரூபாய் ஆனது. இப்போது கொஞ்சம் சில்லறை மட்டும் மீதி இருந்தது.

வரவிருக்கும் இழிசொல்லைப் பற்றிப் பொருட்படுத்தாமல், தம் செயல்களுக்கான விளைவுகளை எண்ணாமலும் சிம்மம் சிறு விலங்கை உண்ணத் தயாராக இருப்பது போல் மிடுக்காக அமர்ந்து, உண்ணலாயினர். அது போன்ற சிற்சிறு மன உறுத்தல்களை எல்லாம் நெடுங்காலம் முன்பே கடந்துவிட்டிருந்தனர். கிஷு, 'நாம் மனநிறைவு கொண்டாலே அது வானத்தில் இருக்கும் அவளது ஆன்மாவைச் சாந்தியடையச் செய்யும்' என்று தத்துவார்த்தமாகப் பேசினான்.

அளவுக்கு மீறிய மரியாதையுடன் அதை ஏற்பவனாய் தலை குனிந்தான். 'கண்டிப்பாக அவள் ஆன்மா சாந்தியடையும். சந்தேகமே இல்லை. கடவுளே, உலகெல்லாம் அறிந்தவனே. அவளுக்குச் சொர்க்கத்தில் இடம் கொடு. எங்கள் இதயப்பூர்வமாக அவளுக்காக வேண்டுகிறோம். இன்று நாங்கள் சுவைப்பதைப் போன்ற ஒரு இன் உணவை இதுவரை எங்கள் வாழ்வில் சுவைத்ததே இல்லை.'

ஒரு கணத்தில் ஏதோ ஒரு ஐயத்தால் தாக்கப்பட்டவனைப் போல, 'அப்பா! நாமும் என்றோ ஒரு நாள் அந்தச் சொர்க்கத்திற்குப் போக வேண்டும்தானே?' என வினவினான் மது.

கிஷு இந்தச் சிறுபிள்ளைத்தனமான வினாவை விழியால் புறக்கணித்துவிட்டு மதுவைப் பார்வையாலேயே கடிந்துகொண்டான்.

'அவள் நம்மைப் பார்த்து "ஏன் நீங்கள் என் சடலத்திற்குரிய சவச்சீலையைத் தரவில்லை?" என்று கேட்டால் நீங்கள் என்ன பதில் சொல்வீர்கள்?'

'உளறலைக் குறை.'

'ஆனால் அவள் நிச்சயம் நம்மைக் கேட்பாள்.'

'அவளுக்கான சவச்சீலை நிச்சயம் அவளுக்குக் கிடைக்கும். நான் என்ன மடையன் என்று நினைத்தாயா? இல்லை ஈனப்பிறவி என்றா? என் அறுபது வயது முழுதும் சோம்பித் திரிந்தேன் என்று நினைத்துவிட்டாயா? அவளுக்குச் சவச்சீலை கிடைக்கும். அதுவும் எதிர்பார்க்காத அளவிற்கு நல்ல துணியில்.'

அவர் சொல்லில் நம்பிக்கையற்றவனாய், 'யார் அதைக் கொடுப்பார்களாம்? நீங்கள்தான் எல்லாப் பணத்தையும் ஊதித்தள்ளிவிட்டீரே?' என்று மது கேட்டான்.

'அவளுக்கான சவச்சீலை அவளுக்குக் கிடைக்கும்.' சடுதியில் கோபமடைந்தவனாய், 'ஏன் என்னை நம்ப மறுக்கிறாய்?' என்றான் கிஷு.

'சரி அதை யார் கொடுக்கப் போகிறார் என்று ஏன் சொல்ல மாட்டேன் என்கிறாய்?'

'இப்போது பணம் கொடுத்த அதே ஆட்கள்தான். ஆனால் பணமாகத் தர மாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஒரு வேளை பணமாகத் தந்தால் இன்னொரு முறை இதே போல நன்கு சாப்பிட்டுக் குடிப்போம். மூன்றாவது முறை சவச்சீலை கிடைக்கும்.'

இருள் பெருகியபடி இருக்க தாரகைகள் ஒளிர்ந்து சத்திரத்தை இன்னும் மிளிரச் செய்தது. அங்கிருந்தவர்கள் ஆடிப்பாடி மகிழ்ந்து, ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்து, தன் நண்பர்கள் வாயில் தன் கோப்பையைத் திணித்து ஆர்ப்பரித்தனர். சூழ்நிலை மகிழ்ச்சியை ஊக்குவித்தது. காற்றில் கட்டுப்பாடின்மை பரவியது. இன்னும் சில மிடறுகள் எடுத்துக்கொண்டால் போதை தலைக்கேறிவிடும் என்கிற நிலையில் பலர் இருந்தனர். மக்கள் இங்கு வருவதே தினசரி பாடுகளில் இருந்து மறதி கொள்ளத்தான். அவர்களது பெருகும் உவகைக்குச் சாராயத்தைவிட சத்திரத்தின் மிளிர்வுதான் காரணமாக இருந்தது. சில சொற்கள் ஆறுதலாக அவர்களை இங்கு அழைத்து வந்திருக்கலாம். இங்கு வாழ்வா சாவா அல்லது வாழ்வின் சாவா என்ற வேறுபாடு தெரியாமல் இருக்கும் அளவிற்கு மறதி கொள்ளலாம்.

சொல்ல முடியாதபடிக்கு எடையின்றி பறக்கும் இதயத்துடன் இங்கு தம் பானங்களை உறிஞ்சியபடி தந்தையும் மகனும் மகிழ்ந்திருந்தனர். எல்லோருடைய பார்வையும் அவர்கள் மீது பதிந்திருந்தன. எத்தனை நற்பேறுடையவர்கள். இருவரும் பகிர்ந்துகொள்ள ஒரு முழு போத்தல்!

அவர்கள் உண்ட பிறகு எஞ்சிய பூரியை இலைத்தட்டில் வைத்து, அருகே நின்று பேராசையுடன் பார்த்த பிச்சைக்காரனிடம் தந்தான் மது. வாழ்வில் முதல் முறை கொடுப்பதன் ஆணவத்தை, உவகையை, துள்ளலை உணர்ந்தான்.

'இதோ எடுத்துக்கொள். வயிறு நிறைய சாப்பிடு' என்றான் கிஷு. 'உன் ஆசிகளைச் சொல். இந்த உணவைத் தந்த மகராசி இப்போது உயிரோடு இல்லை. உன் ஆசியோ நிச்சயம் அவளைச் சென்று சேரும். உன் உடலில் உள்ள அனைத்து துவாரங்களின் வழியாகவும் அவளை ஆசிர்வதித்துச் சொல். இது கடும் உழைப்பில் ஈட்டிய பணம்.'

இப்போது மது மறுபடியும் வானத்தைப் பார்த்துச் சொன்னான். 'அப்பா அவள் நிச்சயம் சொர்க்கத்திற்குப் போவாள். இல்லையா? அவள் சொர்க்கத்தின் அரசியாக இருப்பாள்.'

மகிழ்ச்சியால் அலையடிக்கப்பட்டவனைப் போல கிஷு இருந்தான். 'ஆமாம் மகனே. நிச்சயமாக. அவள் சொர்க்கம் செல்வாள்.

# இப்பிடியெல்லாமிருக்கோ சங்கதியள்?

■ கதிரேசன் காத்தவராயன் ■

பிக்கான் தேவையாயிருந்துது. அதைச் சாட்டாய் வைச்சு முருகேசர் வீட்டை போனன். அங்க தம் பரும் இருந்தார். நானும் அதிலை இருந்துகொண்டன். முருகேசர் வீட்டாலையே வெளிக்கிடுறதில்லை. அதாலை கனநாளைக்குப் பிறகு கண்டதல்லே... கதை கனக்கக் கிடந்துது, பலதும்பத்துமாய் போச் சுது. கொரோனாதான் எந்தக் கதைக்குள்ளையும்.

"எடடட.. ஊரங்கு தனிமைப்படுத்தல் எண்டு எதுக்கும் மதிப்புக்குடுக்கிறியள் இல்லை..." எண்டு சொல்லிக்கொண்டு நல்ல உசார் நிலையிலை வல்லியம்மான் வந்தார். நாங்கள் ஆளையாள் பாத் தம். தம்புதான் "என்ன வல்லியம்மான் எது எப் பிடியெண்டாலும் உங்கடைபாடு பறவாயில்லாமல் போகுதுபோலை கிடக்குது?" எண்டுது. "வல்லியம் மான் அதுக்கேன்ரா வயிறெரியிறாய்.. என்ன இருந்தாலும் இல்லையெண்டாலும் காலமை பின்னேரம் உற்வாகமில்லாமலிருக்கிற பழக்கம் இந்த வல்லியனிட்டை இருக்கோ?" எண்டபடி இருந்துகொண்டார்.

"இஞ்சார் முருகேசு நீயொரு விளக்கமான ஆள்.. அதுதான் கேப்பமெண்டு வந்தன்.. கதிரே சுவும் இருக்கிறது நல்லதாப்போச்சுது..." எண்டு வல்லியம்மான் ஒருக்கா எங்களைப் பாத்தார். அவற்றை பழக்கம், கேள்வி கேட்டாத்தான் மிச்சம் வரும். "என்ன அம்மான் அப்பிடியென்ன கேக் கப்போறியள் எங்களிட்டை?" எண்டன். "முடக்க மெண்டிறாங்கள் ஊரடங்கு எண்டிறாங்கள். கொஞ்ச இடங்களை மூடிவைச்சிருக்கிறாங்கள். கொஞ்சத் தைத் திறந்து சனத்தை கூட்டியும் வைச்சிருக்கி றாங்கள்... என்னதான் நடக்குது ஊரிலை? யோசிக்க யோசிக்க உள்ளுக்கை போனது காயுறது தான் மிச்சம். ஒண்டுமாய் விளங்குதில்லை. உங்க ளுக்கேதும் விளங்குதோ?" எண்டார் வல்லியம் மான்.

"அம்மான் ஊரடியுண்ட உங்களுக்கே சந்தேக மெண்டால் எங்களுக்கென்னம்மான் தெரியும்? நாங்களும் குழம்பித்தான் போயிருக்கிறம். சனங்கு மியுது எண்டு சந்தயளை மூடினாங்கள். மரக்கறி மீன் எல்லாம் கண்ட கண்டஇடங்களிலையெல்லாம் போட்டு விக்கிறாங்கள்... அங்க சந்தையிலை கூடுற சனத்தைவிடக் கூடவாயல்லே கிடக்குது... அண்டைக்கதிலை தம்பி ராசற்றை ஒழுங்கையைப் பாத்தன் நீளத்துக்கும் மீன்காறர்.. நல்லூர்த் திருவிழாவிலை மணிக்கடையடி தோத்துப்போயிடும்... இவ்வளவு சனம் ஊருக்கை இருந்ததோ எண்டிற சந்தேகம் வந்துட்டுது" எண்டார் முருகேசர். ஆச்சரியமும் எரிச்சலும் சரிசம அளவிலை வைச்சிருந்தார்.

"இனி மாப்பெட்டி சீனி எண்டு அலையிற சனம்... சனத்திட்டைக் கையிலை காசில்லை... கிடக்கிற காசுக்கு வாங்கச் சாமானுகள் இல்லை" எண்டு தம்பர் தன்பங்குக்குச் சொன் னார். "மரக்கறிச் சந்தையளும் றோட்டு களிலையும் வளவுகளிலையுந்தான்... அங்கையும் சனந்தான்.. உப்பிடித்தா னெண்டால் சந்தையளை திறக்கலாமோ இல்லையோ? மருந்தடிக்கிறது.. கஞ்சல் குப்பை பொறுக்கிறது எண்டு சுகாதாரமாவது சீராயிருக்குமல்லோ?" எண்டு நான் சொல்ல "அதுதானே" எண்டு ஆமோதிச்சினம்.

"அதைத்தானே நானும் கேக்கி றன்... அங்கையிஞ்சையெண்டு சிதற விட்டு கண்காணிப்பும் இல்லை.. சுகாதாரமும் இல்லை.. விலைதலை கட்டுப்பாடும் இல்லை.." எண்டு முருகேசர் ஆதங்கத்தோடை சொன்னார். "இஞ்சார் முருகேசு விசயத்துக்கு வந்திட்டாய்.. நாங்கள் அலையிற அலைச்சல்.. சாமானுகள் தாராளமாய்க் கிடக்குது. கண்ணிலை காட்டறாங்களில்லை. அளவுகளும் பிரச்சனை. விலையளும் கண்டபடி. கேப்பார் மேய்ப்பாரில்லை... அவங்கள் நினைச் சபடி நாங்கள் அலையவேண்டிக்கிடக்குது?" எண்டு தன்ரை பிரச்சனையை சரியான கவலை யோடை வல்லியம்மான் கொட்டினார்.

"வருத்தம் குறையுது இல்லை.. வாகனத்திலை அடிபட்டுச் செத்தவனுக்கும் கொரோனா... கடலுக்கை விழுந்து செத்து உப்புத் தண்ணியிலை ஊறினவனுக்கும் கொரோனா... தூக்கிலை தொங்கினவன் பிள்ளைப்பெத்த பெடிச்சியள்.. வாள்வெட்டிலை செத்தவன்.. எண்டு சாகிறவங் களுக்கெல்லாம் கொரோனா... ஆருக்கு என்ன எண்டு தெரியாமல் அவங்களுந்தான் என்ன செய்யிறது?" எண்டார் முருகேசர். அண்ணை அண்டைக்கு "இடிவிழுந்து செத்த ஆளுக்குக் கொரோனா இல்லையெண்டது ஒரு ஆறுதலல்லே?" எண்டுது தம்பர்.

"இடிமின்னல் எண்டிறது கறனற்தானாமே? அப்ப சனத்துக்கு தடுப்பூசிக்குப் பதிலாய் கறன்ற றைக் குடுக்கலாமில்லே? ஏன் அதைப்பற்றி மட் டும் யோசிக்கயில்லை? கறன்றைக் குடுத்திட்டு எல்லாத்தையும் திறந்து விடலாமில்லே?" எண்டார் வல்லியம்மான் அப்பாவியாய். நான் நாளைக்கு சந்திப்பன் அப்ப உங்கடை மருந்தைச் சொல்லுறன் எண்டபடி வந்திட்டன்.



**முடக்க மெண்டிறாங்கள் ஊரடங்கு எண்டிறாங்கள். கொஞ்ச இடங்களை மூடிவைச்சி ருக்கிறாங்கள். கொஞ்சத்தைத் திறந்து சனத்தை கூட்டியும் வைச்சிருக்கி றாங்கள்... என்னதான் நடக்குது ஊரிலை**

---

அவள் யாருக்கும் தொந்தரவு செய்யவில்லை. அவள் இறந்து தரையில் கிடக்கும் போதும் நமது அதிகப்படியான ஆசையை நிறைவேற்றி விட்டாளே? அவள் போகாமல், பிறகென்ன இரு கைகளாலும் ஏழையைச் சுரண்டி கோயில்களில் தீர்த்தம் போஜன தானம் செய்துவிட்டு கங்கையில் பாவத்தைக் கழிப்பதற்காக முங்கி எழும் இந்தப் பணப்பைகளா சொர்க்கத்திற்குச் செல்வார்கள்?'

அவர்களது ஊக்கமான நிலை திடீரென்று பரலோக ராஜ்ஜியத்தின் மீது ஒளியேற்றி உருவாக்கிய உவகையான நம்பிக்கை விரைவிலேயே வடிந்து ஏமாற்றமும் துயரமும் கொண்ட கொள்கலனாகிப் போயினர்.

'ஆனால் அப்பா' என்றழைத்த மது 'அவள் தன் வாழ்வில் மிகவும் துன்பத்தை அனுபவித்தாள். இப்போது செத்துக் கிடக்கையிலும் அதற்குக் குறையாமல் துன்பம் அனுபவிக்கிறாள்.' தன் முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு உடைந்து விசும்பினான்.

கிஷூ அவனை ஆறுதல்படுத்த முயன்றான். 'மகனே, ஏனடா அழுகிறாய்? மகிழ்ச்சியுடன் இரு. அவளாவது இந்த உலக மாயவலையில் இருந்து விடுபட்டு இங்கிருக்கும் அச்சங்கள் பதற்றங்களின் துரத்தல்கள் இல்லாமல் இருக்கட்டும். மோகம், மாயை என்ற சுழலில் இருந்து தப்பிய அவள் பாக்கியவதி.'

அங்கேயே எழுந்து நின்று இருவரும் பாடத் தொடங்கினர்.

மாயா தேவியே
உன் காந்தக் கண்களால்
ஏன் எங்களைக் கவர்கிறாய்?
மாயாதேவியே!

ஒட்டுமொத்தச் சத்திரமும் உலகைப் பற்றி எந்தவித சஞ்சலமும் பொருட்டுமின்றி பாடிக்கொண்டிருந்த இந்த இருவரையும் வியப்பில் பார்த்தது. அதன் பின் அவர்கள் ஆடத் தொடங்கினர். குதித்தும் தாவியும் ஆடினர். தடுமாறி வீழ்ந்தனர். வசீகரிப்பவரைப் போல இடுப்பசைத்தனர். இறுதியில் போதையால் விளைந்த மடமை விலகவே உடைந்து நொறுங்கியது போல் வீழ்ந்தனர்.

# மிதிலா



நா.சத்தியபாலன்

## 10

வீடே ஒருவித குதூகலத்தில் மிதந்துகொண்டிருக்கிறது. என்னுள் பொங்குகின்ற ஏதோ ஒன்று என்னைப் பறக்கச் செய்ய முனைவதுபோலொரு உணர்வு. செய்திகேட்ட மகேஷ் ஒரு குழந்தைபோல் என்னை மடியிலேந்தி நனைந்த விழிகளோடு என்னைப் பார்த்தபடியே நேரம் போவதறியாமல் அமர்ந்திருந்த அந்த நாள் ஓர் உயிரோவியம்போல் என் மனத்திரையில் ஆடியபடியிருக்கிறது.

அம்மா ஓர் இளம் பெண்போல சுறுசுறுப்பாய் இயங்கிக்கொண்டிருக்கிறாள். விஷயமறிந்த அதே நாளிலேயே என்னையும் அழைத்துக்கொண்டு அருகிலிருக்கும் அம்மன் கோவிலுக்குப்போய் வழிபட்டபோது ஆறாய்ப் பெருகிய கண்ணீரோடு அம்மனுக்கு நன்றி சொல்லி வழிபட்டாள். ஏனோ அம்மாவின் பெருகிய கண்ணீரைப் பார்த்து எனக்கும் கண்ணீர் பெருகலாயிற்று.

வழமைபோல் அதிகம் பேசாத பி.எம். அங்கிள் எங்கள் அறைக்குள் வந்து மகேஷைக் கட்டியணைத்து "நாங்கள் உணர்ந்திருக்கிறதை விடவும் ஆழமாய்க் கடவுள் எங்களிலை கருணையாயிருக்கிறார் தம்பி" என்று சொன்னார். சொன்னவரின் காலைப் பணிந்து வணங்கினேன்.

குளித்து வேம்படி வைரவருக்குப் பூ வைத்து வணங்கிவிட்டு வந்த கோமதியக்கா பொங்கும் மனசோடு "இது பெரும் பாக்கியம் மிதிலா! உங்களுக்கென்று ஒரு குழந்தை வந்தால்தான் உங்கள் இருவரது வாழ்க்கைக்கும் ஒரு அர்த்தம் ஏற்படும். பிள்ளையில்லாத மனைவியை எந்த ஒரு ஆணும் தனது உயிரான காதல் குறையாமல் நேசிக்க மாட்டான். நீ குடுத்து வைச்சவள் மிதிலா" என்று மனது பொங்கக் கூறினார்.

**இது பெரும் பாக்கியம் மிதிலா! உங்களுக்கென்று ஒரு குழந்தை வந்தால்தான் உங்கள் இருவரது வாழ்க்கைக் கும் ஒரு அர்த்தம் ஏற்படும். பிள்ளையில்லாத மனைவியை எந்த ஒரு ஆணும் தனது உயிரான காதல் குறையாமல் நேசிக்க மாட்டான்**

நாள்கள் வாரங்களாய் மாதங்களாய் நகர்ந்துகொண்டிருந்தன. மகேஷின் உறவுக்காரியான ஒரு மகப்பேற்று வைத்தியரை இதுவரை மூன்று தடவைகள் ஆலோசனைக்காகச் சந்தித்தாயிற்று. வைத்தியரின் ஆலோசனைகளின்படி மிகக் கவனமாக என்னைப் பார்த்துக்கொள்வதில் மகேஷ் ஒருபுறமும் அம்மா மறுபுறமுமாய்ப் பாடுபட்டார்கள்.

பாடசாலை நேரம் தவிர்ந்த மீதிப் பொழுதெல்லாம் மகேஷ் வீட்டிலேயே தங்கியிருந்தார். முன்னைப்போல நூலகம் என்றும் நண்பர்கள் வீடென்றும் செல்வதற்கு அவர் முனைவதில்லை. அது ஏன் என்று நான் ஒரு நாள் கேட்டதற்கு, "எங்கட குழந்தையை நீ வயித்தில சுமக்கிறாய் மிதிலா! அப்பிடியிருக்கேக்குள்ள நான் எப்பிடி முன்னைப்போல நினைச்சபடி வெளியே எல்லாம் போகமுடியும்" என்றார்.

உணவு விஷயத்தில் அம்மா மிகவும் கவனமாயிருந்தார். "நான் பரியாரியார் தம்புவின்ர பேத்தி. எனக்கு ஒரு புள்ளத்தாச்சிப் பொம்பிளையை எப்பிடிப் பார்த்துக் கொள்ளவேணும் எண்டு சொல்லித்தரவேணுமோ..." என்று மகிழ்வும் பெருமிதமுமாய் அம்மா சொல்லிக்கொள்வாள்... நான் சாப்பிடவேண்டிய உணவு வகைகள் தவிர்க்க வேண்டிய உணவு வகைகள் பற்றி மகேஷ் ஒரு பக்கம் அம்மா ஒரு பக்கமாய் விழிப்போடு கவனித்துக்கொண்டிருந்தார்கள்.

ஆலோசனையின்போது என்னுடன் கூட வந்த அம்மா வைத்தியருடன்வேறு கலந்து பேசி எனது நலன் குறித்துக் கவனமாயிருந்தார். என்னுடன் பாடுபட்டதோடு கோமதி அக்காவை அழைத்துக்கொண்டு தனக்குத் தெரிந்த சுதுமலை வைத்தியரிடம் தமிழ் வைத்தியத்துக்காக அழைத்துப்போகத் தொடங்கியிருந்தாள் அம்மா.

கோமதி அக்காவின் வாதத்துக்கு வைத்தியம் பார்த்ததோடு அவளது மனத்தின் அடியில் தீராத துயராய் உறைந்திருந்த கவலைகளுக்கும் அம்மாவின் அன்பும் ஆலோசனைகளும் மருந்தாய் அமைந்தன.

"எனக்கு ரெண்டு பெண்கள். அந்த ரெண்டு பேரையும் கவனிக்கவேணுமெண்டுதான் கடவுள் என்னைச் சுகமாய் வைச்சிருக்கிறார்" என்று அம்மா சொல்லிக்கொள்வாள். அம்மாவின் மனப்பாங்கும் அன்பும் கண்டு பி.எம் அங்கிள் மனசுக்குள் நெகிழ்ந்து போவார். காலம் எல்லோரது மனத் துயரங்களுக்கும் மருந்திட்டது.

என்னைத் தூக்கிச் சுமக்காத குறையாய் கண்ணுக்குள் வைத்துப் பார்த்துக்கொள்ளும் எனது கணவரைப் பற்றிய பெருமிதமும் அவர் மீதான காதலும் என்னுள் என்றும் ஒளிமங்காத உணர்வுகளாய்த் தோன்றியிருந்தன.

(தொடரும்)

# எமையறிதல்

ஐயங்கொண்டான் சுவாமிகள்



எமையறிதல் என்பதன் நிலை மையம் எனையறிதல் அல்லவா? என்னை நான் அறிந்துகொள்வதை விடுத்து எனக்கு வெளியேயுள்ளவற்றை எப்படி அறிந்து கொள்வது? நான் என்பதை விட்டொழியுங்கள் என்று போதித்தவன் நான் என்கிற தன்னை விட்டொழிந்துதான் அப்படிச் சொன்னானா? எந்தவிதமான நட்டங்களும் செல வுகளுமற்ற சிந்தனை என்கிற ஒன்றை பயன்படுத்துகிறோமா?

சிந்னை என்பதை எங்கோ தொலைத்துவிட்டு அல்லது ஏதாவதொன்றின் சுவடு பிடித்து பின்தொடரவிட்டு அங்க லாய்ப்பதை கைவடல்வேண்டும். நான் யார்? எனக்குள் இருப்பது என்ன? எவை? தேடுதல் செய்வது அவசியமாகிறது. தேடல் என்பதை எப்படி விளங்கி வைத்திருக்கிறோம்? இலக்கென்றொன்றைக் குறித்துக்கொண்டு ஓடுகிறோம். அது யதார்த்தப் புள்ளியா? கற்பித மாயைப் புள்ளியா? கவனிப் பற்று ஓடுகிறோம்.

ஒருவன் ஒன்றை அடைந்து விட்டான் என்றால் அவன் போன வழியையே தொடருகிறோம். அவனுக்குக் கிடத்தது. எனக்கும் அதுவே கிடைக்கவேண்டும் என்றேதாவது இருக் கிறதா? முன்பகுதியொன்றில் குறிப்பிட்டதுபோல எனக்கு எனது இயலுமையைத் தெரிந்திருக்க வேண்டியது அவசி யமாகிறது. எனது இயலுமை ஏதோவொன்றாக இருக்க எனக்கான ஆசையை வேறொன்றாகக் கொண்டு முயல்வ தென்பது எப்படி வாழ்க்கையை நிம்மதியாக்கும்?

இயலுமை என்பது தன்னம்பிக்கை இழப்பதாக இருக்கக் கூடாது. அதீத கற்பனைக்கு இட்டுச்செல்லவும்கூடாது. யதார்த்தம் என்கிற மையம் பற்றி அசைவுறத்தக்கதான முயற்சியில் இணைந்து பயணிக்கக்கூடியதாக விரிவடையக்கூடியதான உறுதியும் நெகிழ்வும் கொண்டதாக இருத்தல் அவசியமானது. எனக்குள் ளாக நானாக அளவிடப்படவேண்டியது. இரகசிய மானது.

நான் என்பதுள்ளான எனது என்பது முழுவதும் எனக்கானது. எனது என்பது ஒருபோதுமே இன்னொ ருவனாகிய அவனதுவோடு ஒப்பீட்டுக்கு உட்படுத்தப் பட முடியாதது. நான் ஒருபோதுமே இன்னொருவன் ஆகமுடியாது. ஒப்பீடு என்றொன்று இருப்பதுதான் அபத் தம். அது தனியது. தனித்துவம் என்பதை மறுதலிக்கிறது. இது தனியது எண்ணங்களை தன் மீது குவிக்கவும் துருவி உள்நுழைந்து உணர வும் பெருந்தடையாக குறுக்கே நிற்கிறது.

நான் ஒப்பிடவேண் டியது என்னுடன் மட் டுமே. இன்றுள்ள என்னை நேற்றிருந்த என்னோடு ஒப்பிடு வதுகூட திருத்தமான என்னை அறிய உத வுமா என்பதுகூட சிந்திக்க வேண்டி தொன்றே.

எனது நேற்றுகள் படிப்பினைகளை எனக்காக தரலாம். தரவேண்டும். படிப்பினைகள் இன் றைய என்னைச் செதுக்கிக்கொள்ள எனக்கு துணையாக இருக்கவேண்டும். மாறாக நேற்றைய இயலாமைகள் இன்றைய இயலுமைகளைத் தகர்ப்பதாக தன்னம்பிக்கையை சிதைப்பதாக இருக்கக்கூடாது. நேற்று இயலுமாக இருந்தது இன்று இயலாததாக இருக்கலாம் என்பது யதார்த்தம். அது ஒரு விதியல்ல. நேற்று இயலாதிருந்தது இன்று இயலுமானதாக இருக்கலாம். இதுவும் யதார்த்தம். இதுவும் விதியல்ல.

இவையிவை நிபந்தனைகளற்ற சுயவிசாரணையைக் கோரி நிற்கின்றன. இயலுமை எதிர் இயலாமை என்ற எதிரெதிர்த் துருவங்களிடை சிறைப்பட்ட வொரு பெருவெளி என் சார்பில் ஆய்விற்குட்படுத்தப்படல் அவசியமாகிறது. அது எனதான எண்ணங்களின் பலம் பலவீனம் முயற்சி முயலாமை கவனம் கவனயீனம் போன்ற சுய ஊக்கிகளில் அல்லது எதிரூக்கிகளில் தங்கி யிருப்பதை அவதானிக்க முடியுமாக இருக்கும். அந்தப் பெறுதிதான் நான் என்பதன் திரட்சி.

நான் என்பது முன்குறிப்பிட்டதுபோல எனக்கானது. அவசியமானது. எப்போதும் சுயஉணர்வோடு கூடஇருக்கவேண்டியது. என்னை இயக்குகின்ற முழுவிசையான நான் எனும் குவிமையமே பெருவிசை. என் மீதான பற்று எனக்கும் என்செயலுக்குமிடையிலான இழுவிசை. இவ்விசைகளைச் சிதறவிட்டுவிட்டு எங்கே ஓடுகிறோம்? எதை அடையப்போகிறோம்? நான் என்கிற என்னைத் தொலைத்துவிட்டு எனக்காக என்று எனது விருப்பிற்காகவென்று எதை எவற்றை அடையப்பார்க்கிறோம்?

சிந்தனை என்பது விரியவேண்டியிருக்கிறதல்லவா? சிந்தனையை அகல ஆழ விரிப்போம்.

24

---

# ரெஜினாவுக்கு மவுசு...!



சிம்ரன், சிநேகா, த்ரிஷா, அசின், நயன்தாரா என்று நடிகைகள் காலத்துக் குக் காலம் தடம் பதித்து வந்த காலம் போய் இப்போது நடிகைகளின் குள மாகிவிட்டது தென்னிந்தியத் திரைக் களம். இப்போது பல நடிகைகள் திரைக் களத்தில் இருக்கிறார்கள். அதில் ஒருவர்தான் ரெஜினா கசாண்ட்ரா.

கடைசியாக இயக்குநர் சிம்புதேவ னின் கசட தபறவில் இவரைப் பாத் திருப்பீர்கள். தமிழ், தெலுங்கு, கன்ன டம் எனப் பல மொழித் திரைப்படங் களில் நடித்து வந்தாலும் 2005இல் கண்ட நாள் முதல் திரைப்படத்தில் நடித்த ரெஜினா சிறந்த அறிமுக நடி கைக்கான சைமா விருதைப் பெற்றவர். 2013இல் கேடி பில்லா கில்லாடி ரங்கா திரைப்படத்தில் சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாகவும் 2017இல் மாநகரம், சரவணன் இருக்க பயமேன், ஜெமினி கணேசனும் சுருளிராஜனும், சிலுக்கு வார்ப்பட்டி சிங்கம் எனப் பல திரைப் படங்களில் தோன்றித் தனக்கெனப் பெரும் இரசிகர் பட்டாளத்தையே உரு வாக்கிவிட்டார்.

கதாநாயகியின் தோழியாகத் தோன் றிக் கதாநாயகியுமாகிவிட்ட ரெஜி னாவின் வில்லத்தனத்தை விஷாலுடன் அவர் நடித்த சக்ராவில் பார்த்திருப் பீர்கள். இவ்வாறு பல படங்களில் பற் பல பாத்திரங்களில் கலக்கி வருகின்ற ரெஜினாவுக்கு இப்போது மசுவு எகிறியிருக்கிறது. அவர் இணையத் தொடர்கள் பலவற்றில் நடிப்பதற்கு வாய்ப்புகள் குவிந்த வண்ணமுள்ளன அவருக்கு.

ராஜ், டி.கே இயக்கி வரும் தொடர் ஒன்றில் முக்கிய கதாபாத்திரத்தில் நடி த்து வருகிறார் ரெஜினா. இவர்கள் இரு வரும் தி பேமிலி மேன் தொடர்களை இயக்கியவர்கள். இவர்களின் தொடர்க ளின் வெற்றியால், இவர்கள் ரெஜி னாவை வைத்து இயக்கும் இந்தப் புதிய தொடருக்குப் பெரும் எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது. ஷாகித் கபூர், விஜய் சேதுபதி, ராஷி கண்ணா, கே.கே.மேனன் உள்ளிட்ட பலர் நடிக்கும் குறித்த தொடரில்தான் முக்கிய கதாபாத்திரம் ரெஜினாவுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. பெயரிடப்படாத இந்தத் தொடர் தமிழ், தெலுங்கு, ஹிந்தி உள்ளிட்ட பல மொழிகளிலும் வெளியாகவுள்ளது.



# என்னாச்சு விஜய்சேதுபதிக்கு?

■ தேபிந்த் ■

ரசிகர்களைக் கொண்டாடு வதுதான் கலைஞர்களுக்கு அழகு'' என்ற அவரது கொள்கை அவரை இன்னும் ரசிகர் களுக்கு நெருக்கமாக்கியது. நாயக பந்தா எதுவுமின்றி ரசிகனை நெருங்கியதன் மூலம் 'மக்கள் செல்வனாக' மாற்றினார்

விஜய்சேதுபதியின் வருகை என்பது வெறுமனே ஒரு நடிகரின் திரையுலக நுழைவு மட்டுமல்ல, காலங்காலமாகப் பார்த்து சலித்த கதைப்போக்கு, காட்சிகளிலிருந்து தமிழ் சினிமா தன்னைத்தானே விடுவித்துக் கொண்ட காலகட்டம் அது. நாயக பிம்பம் தகர்ப்பு, புதுப்புதுக் கதைகள், பிளாக் ஹியூமர் என்று தமிழ் சினிமாவில் பரிசோதனை முயற்சிகள் அறிமுகமானபோதுதான் விஜய் சேதுபதி என்னும் நடிகரும் அறிமுகமானார்.

'எம்.குமரன் சன் ஆப் மகாலெட்சுமி', 'புதுப்பேட்டை' 'நான் மகான் அல்ல' என்று பல படங்களில் சின்னச்சின்ன வேடங்களில் நடித்தாலும் விஜய்சேதுபதி என்னும் கலை ஞனைத் தமிழ்த் திரையுலகம் கண்டுகொண்டது 2010க்குப் பிறகான வித்தியாச திரைப் படங்களில்தான். 'பீட்சா' வழக்கமான பேய்ப் படமில்லை. ஒரு முழு நீளப்படத்தில் பெரும் பாலான காட்சிகளில் விஜய் சேதுபதி மட்டுமே. ஒட்டுமொத்தப் பார்வையாளர்களையும் தன் னோடு சேர்ந்துப் பயப்பட வைத்தார். அந்தப் படத்தின் ஒற்றை டார்ச்லைட்தான் விஜய் சேதுபதியை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தது.



'நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம்' விஜய்சேதுபதியை இன்னும் உச்சிக்கு நகர்த்தி யது. 'என்னாச்சு... கிரிக்கெட் விளையாண் டோம்... நீதானே அடிச்சே?' என்று அவர் படம் முழுவதும் மீண்டும் மீண்டும் பேசிய அந்த ஒருவரி வசனத்துக்கு பார்வையாளர்கள் வெடித்துச் சிரித்தனர். 'சூது கவ்வும்' - குருட்டுத்தனமான முட்டாள்தனமும் முரட் டுத்தனமான புத்திசாலித்தனமும் கொண்ட நடுத்தரவயது அப்பாவி கடத்தல்காரனாக வேறு பரிமாணம் காட்டினார். 'இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா' படத்தில் பாத்தி ரத்தின் பெயர் என்னவோ 'சுமார் மூஞ்சி குமார்.' ஆனால் நடிப்பால் விஜய்சேதுபதி தமிழகத்துக்கே சூப்பர் மூஞ்சி குமார் ஆனீர்கள்.

**மக்கள் எதற்கு ஆசைப்பட்டார்கள்?**

வரிசையாக வெற்றிகள்... குவிந்த பாராட்டு கள்... சடசடவென்று முன்னணி நடிகர்கள் வரிசைக்கு நகர்ந்தார் விஜய்சேதுபதி. ஆண் கள், பெண்கள் என்று வெறித்தனமான ரசிகர் கள் குவிந்தார்கள். "விஜய்சேதுபதி படம் என் றாலே வித்தியாசமான அனுபவம்'' என்ற முடி வுக்கு வந்தார்கள். "ரசிகர்களைக் கொண்டாடு வதுதான் கலைஞர்களுக்கு அழகு'' என்ற அவரது கொள்கை அவரை இன்னும் ரசிகர் களுக்கு நெருக்கமாக்கியது. நாயக பந்தா எதுவுமின்றி ரசிகனை நெருங்கியதன் மூலம் 'மக்கள் செல்வனாக' மாற்றினார். ஆனால் இப் போதும் நிலமை அப்படியேதான் இருக்கிறதா?

தமிழ்த் திரையுலகில் முன்வரிசையில் உள்ள கதாநாயகர்கள் எல்லோரும் ஆண்டுக்கு ஒன்று அல்லது இரண்டு படங்கள் மட்டுமே நடிக்கும் நிலையில் சிவாஜி கணேசன், எம். ஜி.ஆர். காலம் போன்று மளமளவெனப் படங்கள் நடித்தார் விஜய்சேதுபதி. அவரைப் போன்று மற்றைய நடிகர்களும் வருடத்தில் பல படங்கள் நடிக்கவேண்டும் என்று திரை அரங்கு உரிமயாளர்கள் குரல் எழுப்புமளவிற்கு இருந்தது அவரது செயல்.

கொரோனா பெருந்தொற்றால் திரையரங் குகள் மூடப்பட்ட நிலையில் விஜய்சேதுபதியின் பல படங்கள் வெளியீட்டுக்குத் தயாராகி நின்றன. அவற்றில் சில இணையத் தளங்களில் வெளியாகின. எஞ்சியவை திரையரங்குகள் திறந்ததும் அடுத்தடுத்து வெளியாகி உள்ளன. ஆனால் சகிக்க முடியாத வகையில் அந்தப் படங்களில் எல்லாம் விஜய்சேதுபதி எங்கே என்று தேடவேண்டியிருக்கின்றது. "விஜய்சேது பதி படங்கள் என்றால் வித்தியாசமான அனு பவம்'' என்ற ரசிகர்களின் நம்பிக்கை நாளுக் குநாள் குறைந்து வருகிறது இந்தப் படங்களைப் பார்த்த பின்னர்.

'றெக்க' படத்தில் ஆரம்பித்தது விஜய் சேதுபதியின் சறுக்கல் சரித்திரம். 'கவண்', 'ஜுங்கா', 'ஒரு நல்லநாள் பார்த்துச் சொல் றேன்', 'சிந்துபாத்' என்று அது தொடர்ந்து கொண்டிருப்பது பெரும் கவலை. விஜய்சேது பதியின் சொந்தத் தயாரிப்பில் வெளியான 'ஜுங்கா'வில் பாடல்கள், சண்டைக் காட்சிகள், வெளிநாட்டுத் தளங்கள் எல்லாம் இருந்தன. ஆனால் ரசிகர்கள் விரும்பிய விஜய்சேதுபதி என்ற வித்தியாச நடிகரைத்தான் காணவில்லை.

இடையில் '96', 'சூப்பர் டீலக்ஸ்' வெளி யானபோது நடுவில் காணாமல்போன பக்கம் கிடைத்துவிட்டது என்று மகிழ்ச்சி ஏற்பட்டது. ஆனால் மீண்டும் 'சிந்துபாத்', 'சங்கத் தமிழன்' என்று தொடர்ச்சியாக ஏமாற்றங்களே பரிசாகக் கிடைத்தது. தமிழகம் தாண்டியும் அவர் நடித்த 'சைர நரசிம்மா ரெட்டி', 'உப்பண்ணா' போன்ற பிறமொழிப்படங்களும் பெருமை சேர்க்கவில்லை.

அவ்வப்போது 'மாஸ்டர்', 'க/பெ ரண சிங்கம்', 'ஓ மை கடவுளே' என்று சில படங் கள் மகிழ்வித்தாலும் அவர் நடித்துக்குவிக்கும் படங்களின் எண்ணிக்கைக்கு இது மிகமிகக் குறைவு. திரையரங்குகள், ஓ.டி.டி, தொலைக் காட்சி, யூடியூப் என்று எங்கு பார்த்தாலும் விஜய்சேதுபதிதான். ஆனால் அவற்றிலெல்லாம் விஜய்சேதுபதியின் முகம் இருக்கிறதே தவிர, அவரது தனித்துவ அடையாளமில்லை.

கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் விஜய் சேதுபதியின் மூன்று படங்கள் வெளியாகியி ருக்கின்றன. ஆனால் தொடக்கக்காலத்தில் நாங்கள் மூன்று படங்களில் பார்த்து ரசித்த விஜய்சேதுபதி இந்தப் படங்களில் இல்லை.

அண்மையில் வெளிவந்தவற்றில் ஒரு படத்துக்கும் இன்னொரு படத்துக்கும் இடை யில் விஜய்சேதுபதியின் நடிப்பில் எந்த வித்தி யாசங்களையும் உணரமுடியவில்லை. தலை முடி மாற்றம், தாடி, மீசை மாற்றம் மட்டுமே மாற்றமாகி விடுமா? அதே உடல்மொழி, அதே வசன உச்சரிப்பு, அதே விஜய்சேதுபதி. சலிப்புத்தட்டுகின்றது. பல படங்களில் நடிப் பில் எந்த கரிசனையையும் அவர் செலுத்த வில்லை.

இதற்குத்தான் ஆசைப்படுகிறார்கள் விஜய் சேதுபதி?

இன்னும் வெளிவரக் காத்திருக்கும் அவரது படங்களின் பட்டியல் நீளம். வெறுமனே படங் களின் எண்ணிக்கை மட்டுமே ஒரு கலைஞனின் வெற்றியைத் தீர்மானித்துவிடுவதில்லை. தனித்துவமான கதைகள், பக்குவமான பாத்திரங்கள், தேர்ந்த நடிப்பு, வித்தியாசமான களங்கள் - இவைதானே வெற்றியின் அடையா ளங்கள்? இவைதானே விஜய்சேதுபதியின் தொடக்க அடையாளங்களும்கூட?


இதற்குத்தான் ரசிகர்கள் ஆசைப்படுகிறார்கள் விஜய்சேதுபதி... நிறைவேற்றுவீர்களா? ■

# கவிதை எனும் தேனாறு

● வேலணையூர் _ தாஸ்

{இணையவெளியில் இன்று எழுதுகின்ற அதேவேளை ஈழத்து விமர்சகர்களால் அதிகம் கண்டுகொள்ளப்படாத கவிஞர்களின் சில நல்ல கவிதைகளை அடையாளம் காட்டும் தொடர்)

10



இது அஞ்சலிகளை எழுதும் கால மாக இருக்கிறது. பிரபல கவிஞரும் படலாசிரியருமான ஜெ. பிரான்சிஸ் கிருபா.

இவர் செப்டம்பர் 16, 2021 வியா ழக்கிழமை நள்ளிரவு காலமானார். தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி அருகே பத்தி னிப்பாறை என்ற கிராமத்தைச் சேர்ந் தவர் பிரான்சிஸ் கிருபா.

மல்லிகைக் கிழமைகள், சம்மனசுக் காடு, ஏழுவால் நட்சத்திரம், நிழலன்றி ஏதுமற்றவன், மெசியாவின் காயங்கள், வலியோடு முறியும் மின்னல் உள்ளிட்ட பல கவிதைத் தொகுதிகளை தந்திருக்கிறார்

வெண்ணிலா கபடிகுழு, அழகர்சாமியின் குதிரை, ராட்டினம், குரங்கு பொம்மை உள்ளிட்ட திரைப்படங்களுக்கும் பாடல்களை எழுதியுள்ளார்.

கன்னி எனும் புதினத்திற்கு 2007 ஆம் ஆண்டில் விகடனின் சிறந்த புதினம் என்ற விருதையும், 2008ஆம் ஆண்டுக்கான நெய்தல் இலக்கிய அமைப்பின் சுந்தர ராமசாமி விருதையும் இவர் பெற்றுள்ளார்.

பெரும்பாலும் கவிதை நடையில் எழுதப்பட்ட இவரது கன்னி நாவலிலிருந்து சில பகுதிகள்

*சொற்களிலிருந்து அர்த்தங்கள் மௌனத்திற்குத் திரும்பும் வழி இது.*

*இரண்டே இரண்டு விழிகளால் அழுது எப்படி இந்தக் கடலை கண்ணீராக நான் வெளியேற்ற முடியும்?*

*என் கனவும் கற்பனைகளும் என் இதயமும் குருதியும் கிழிந்த மிதியடிகளாக*

*மாற்றப்படும்போது எப்படி நான் அழாமலிருக்க முடியும்? கண்ணீரின் ஒரு துளியை அவித்த*

*முட்டையைப்போல் இரண்டு துண்டாக அறுத்துவிட முடியவில்லை. அன்பும் இங்குதான்*

*தொலைகிறதோ என்னவோ. நண்பர்களே தோழிகளே துரோகிகளே, ஆறுதலுக்கு பதில் ஓர் ஆயுதம் தாருங்கள்.*

*கடலைக் கப்பலின் சாலையென்று கற்பித்தவனைக் கொன்று விட்டுப் போகிறேன்.*

**ஜீவேஸ்வரன் கவின் பிரசாத் (கவின்)**



தற்போது முகநூலில் கவிதைகள் எழுதி வருகின்ற இளம் கவிஞர்களில் ஒருவர் ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் மருத்துவபீட மாணவனாக இருக்கிறார். மருத்துவக் கல்விச் செயற்பாடுகளோடு முகநூலில் நல்ல கவிதைகளையும் எழுதி வருகிறார்.

இவரது இலக்கியம் தொடர்பான தேடலும் தமிழ் மீது உள்ள ஆர்வமும்இவரை ஒரு நல்ல கவிஞராக வளர்த்தெடுக்கும் என நம்பலாம். எரிந்த யாழ். நூலகம் தொடர்பாக இவர் அண் மையில் எழுதிய கவிதை ஒன்று.

### நூலகத்தின் நினைவில்

*தொல்காப்பியங்களை*
*தொலைத்திருந்தாலும்*
*தென் நிலவு தரை தட்டாது*
*தொன்றுதொட்ட தமிழ் இலக்கியங்கள்*
*தொன்மைகளும் மறையாது*
*பாதுகாத்த பொக்கிஷங்கள்*
*செந்தணலில் மூழ்கினாலும் பாவலர்கள் பொறித்த*
*செந்தமிழ் மீண்டெழும்*
*வரலாற்றை அழிக்க*
*வாசகம் தீக்கிரையானாலும்*
*வடக்கின் புலமை*
*அது வானுயர வளரும்*
*நீங்காத நினைவாய்*
*நிலைத்து நிற்கும்*
*நீடூழி வாழி நிறை மதி*
*என் தாய் நூலகமே......*



எளிமையான சொற்களின் சொந்தக்காரர் கொழும்புத்துறை, யாழ்ப்பாணத்தை சேர்ந்த அம்பலவாணர் சிறீஸ்கந்தராசா.

சிறீ சிறீஸ்கந்தராஜா என்ற பெயரில் இணைய வெளியில் நீண்ட காலமாக எழுதி வருகிறார். பழந் தமிழிலக்கியங்கள் மற்றும் தமி ழிசை தொடர்பான ஆய்வுக் கட்டுரைக்களையும் நூல் விமர்சனங் களையும் எழுதி வருகிற சிறீஸ்கந்தராசா அவ்வப்போது கவிதைக ளையும் எழுதி வருகிறார். மிகவும் எளிமையான சொற்களைக் கொண்டு படிமங்கள் அற்ற எல்லோர்க்கும் புரிகிற கவிதைகளை எழுதிவருகிற இவரது செவ்வரத்தம் பூ பற்றிய கவிதையொன்று

### கிராமத்துப் பூக்காரி !!



*கிராமத்துப் பூக்காரி*
*நீதான்!*

*மண்வாசனை வீசுவதால்*
*நீதான்*
*எங்கள் மண்ணின் மகாராணி!*

*சினிமாப் பாணியில்*
*சொல்வதானால்*
*நல்லதொரு 'நாட்டுக்கட்டை!'*

*உனக்குக் கவர்ச்சி அதிகம்!*
*எத்தனை கூட்டத்துள்ளும்*
*கண்கள் உன்னையே தேடும்!*

*மூக்கும் முழியுமாக*
*முந்தானையால்*
*பாதிமுகம் மறைத்துச் சிரிப்பாய்*
*அற்புதம்!*

*ஒற்றைக் கல்லு*
*மூக்குத்தியில் தான்*
*உன் அழகின் உச்சம்*
*இருக்கிறது!*

*வீட்டில் நிறைகுடம் வைத்தால்*
*சுமங்கலி நீதானே*
*முன் நிற்பாய்!*

*உச்சி முதல் பாதம்வரை*
*உன்னை ஒருமுறை*
*பார்த்தாலே போதும்*
*கண்களுக்கு அப்படி ஒரு குளிர்ச்சி!*

*அது என்ன*
*உனக்கு மட்டும் விதி விலக்கு?*

*பெண்கள் வாடையே பிடிக்காத*
*பிள்ளையார்*
*உன்ன மட்டும் தன் தலையில்*
*தூக்கி வைத்திருக்கிறார்?*

(இன்னும் வரும்)

■ வேலணையூர்-தாஸ் ■

# தோழி விடு தூது

கேட்டி என் தோழி
அலை மூசி விழாத பெண் கடல் சூழ் கரையில்
பிளாஸ்டிக் போத்திலும்
பொலித்தீன் பைகளும்
பியர் டின் என நிறையும் ஊரின் புறத்தே
வாழ் சிறுபெண்.

வாசலிலே வலைகள் தொங்கும்
குறும் சிறு ஒழுங்கைகள் வரிசையில்
செம்பருத்தி பூத்திருக்கும் வீடு எனதறிவாய்

இன்னுயிர் தோழி
பவுர்ணமி நிலவில் அலை எழுந்தாடும் கடற்கரை ஓரம்
சவுக்கின் மறைவில் கூடலாம் என்றான்

என்னுயிர் தோழி வேண்டாம்
லொக் டவுன் நேரம் இரவில் வந்தால் கடும் ஊர்க்காவல்
பிடிபடும் பின் வதைப்படும்

தோழி அவனை காலையில் வரச்சொல்
அம்மம்மாவின் கிளினிக் கொப்பி அல்லது வங்கிப்புத்தகம்
கொண்டு வரச் சொல்

மாஸ்க்கை கழுத்தில் ஸ்டைலாய் போடும் கைதாவானவன்
அதை சரியாய் போட்டு வரச்சொல்

கரையை தேடும் அலைகளை போல எழுந்து எழுந்து பார்ப்பேன்
வாசலில் விழி எறிந்து
அவன் வரவுக்காய் நான் இருப்பேன் என்று சொல் ...
அவனைக்காணாது துங்காதென் கண்



# பனாட்டு ருசிப்போம்...



பனாட்டுப் பருவகாலம் இது. பழுத்தாலும் - நன்கு கனிந்தாலும் பனம்பழத்தைப் பனங்காய் என்று அழைக்கும் வழக்கமே நம்மவர்கள் மத்தியில் இருக்கிறது. பழங்காலத்தில் பனாட்டும் பனம்பழச் சாறான பனங் களியிலிருந்தும் செய்யப்படுகின்ற பல உண்டிகளுமே நமது மூதாதையர்களின் உணவுகளாக இருந்தன. பனையிலிருந்து கிழங்கு, ஒடியல், புளுக்கொடியல் எனப் பலதரப்பட்ட உணவுகளைப் பெற்றாலும் பனங்களி உணவுகளே அதிகமானவையாகவும் முக்கியமானவையாகவும் இருந்தன.

பனங்களியில் பல உணவுகளை ஆக்கினார்கள். உணவு மட்டுமன்றி ஆடைகளைத் தோய்ப்பதற்குக்கூடப் பனங்களி பயன்பட்டது. முன்னாள் அரச தலைவர் சந்திரிகா காலப் பகுதியில் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டிருந்த போது யாழ்ப்பாணத்தில் பனங்காயை சோப்புக்குப் பதிலாகப் பயன்படுத்தினார்கள். பனங்களியில் இருந்து பனாட்டு, பனங்காய்ப் பிட்டு, பனங்காய்ப் பணியாரம் எனப் பலதரப்பட்ட உணவுகளை ஆக்கியுண்டார்கள். அதிலும் பல காலங்கள்வரைப் பாதுகாப்பாக வைத்து உண்ணக்கூடிய பனாட்டுக்கு அதிக மவுசு இருந்தது. தற்போது பல கிராமங்களிலும் பனாட்டு உலர்த்தப்பட்டு வருகிறது. இது பனாட்டுப் பருவம் என்பதால் இந்த வாரச் சமையல் பகுதியில் பனாட்டுப் பற்றிப் பார்ப்போம்.

**பனாட்டை எவ்வாறு தயாரிக்கிறார்கள்...?**

பனம்பழங்களைத் தெரிவு செய்து எடுத்துக்கொள்ளவேண்டும். பனம் பழத்தை முகர்ந்து பார்த்து அது காறல் (கயரும் தன்மை இருக்கிறதா இல்லையா என்று கண்டறிகிறார்கள்) அற்றதாக இருப்பதையும் நன்கு கனிந்திருப்பதையும் உறுதி செய்து கழுவித் துப்புரவாக்கிக் கொள்கிறார்கள்.



பனங்காய்களை சீமெந்து நிலத்தில் உருட்டி உருட்டி அடிக்கிறார்கள். காரணம், அப்போதுதான் அவற்றின் தோல்களை நீக்குவதற்குச் சுலபமாக இருக்கும். அடித்த பனம்பழங்களின் தோல்களை உரித்து விதைகளைத் தனித்தனியாக்கிவிட்டு அந்த விதைகளை ஒவ்வொன்றாகப் பெரிய தாச்சி ஒன்றுக்குள் இட்டு அதன் களியைப் பிசைந்து எடுத்துக்கொள்கிறார்கள்.

இவ்வாறாக விதைகளில் இருந்து களிகளைப் பெற்ற பின்னர் அந்தக் களியை அடுப்பில் நன்றாகக் காய்ச்சுகிறார்கள். காய்ச்சிய களியைப் பனை ஓலையில் இழைத்த புதிய பாயில் ஊற்றி தொடர்ந்து சில நாள்கள்வரை வெயிலில் உலர வைக்கிறார்கள். சிலர் பனங்களியைப் பிசைந்து காய்ச்சாமல் நேரடியாகப் பாயில் ஊற்றி உலர வைக்கும் நடைமுறையும் இருக்கிறது. காய்ச்சிய களியிலிருந்து செய்யப்படும் பனாட்டுப் பல காலங்கள் வரை பழுதாகாதிருக்கும் என்கிறார்கள்.

**பனாட்டு உணவு**

பனாட்டு நல்லதொரு சத்துணவு. சமிபாட்டை இலகுபடுத்தும் திறனுள்ளது. பனாட்டைத் தனியாக உட்கொள்வதைவிடப் பழங்கஞ்சியோடும், தேங்காய்ச் சொட்டுடனும் உள்ளெடுப்பதே வழக்கம். தேங்காய்த் துருவலையும் சீனியையும் கலந்து பனாட்டுடன் ருசித்தால் இவற்றைவிட அது தனி ருசியைத் தரும். இது சிறுவர்களாக இருந்த காலத்திலான நமது அனுபவம். ■

# தக்காளியை மட்டும் பயன்படுத்தி முக அழகை அதிகரிப்பது எப்படி



வீட்டில் இருக்கக்கூடிய தக்காளியை வைத்து முக அழகை எப்படி மேம்படுத்தலாம் என்பதை பற்றித்தான் இந்த வாரம் பார்க்கப்போகிறோம். தக்காளியில் விட்டமின் சி அதிகமாக இருப்பதால் சருமத்திற்கு எந்த வித பாதிப்பும் ஏற்படாது. அந்த வகையில் தக்காளியை மட்டும் பயன்படுத்தி முக அழகை எப்படி அதிகரிக்கலாம் என்பதை அறிந்து கொள்ளலாம்.

முதலில் காய்ச்சாத பாலில் பாதி தக்காளியை வெட்டிப் போடவேண்டும். 10 நிமிடங்கள் பாலில் ஊறி நனைந்த தக்காளியை எடுத்து முகத்தில் மெதுவாக அழுத்தித் தேய்க்கவேண்டும். மசாஜ் போல் செய்ய வேண்டும். அடுத்து கையால் மெதுவாக தேய்த்து விடவேண்டும். மசாஜ் போல் செய்த பிறகு 5 நிமிடங்கள் அப்படியே வைத்திருக்கவேண்டும். இதை நீரால் உடனே கழுவக்கூடாது. நன்கு உலர்ந்த துண்டு ஒன்றை எடுத்து மெல்லிய சூடான நீரில் நனைத்த பிறகு துடைக்கவேண்டும். இப்படிச் செய்து வந்தால் சில வாரங்களிலேயே முகம் பளிச்சென்றாவதை நீங்கள் அவதானிக்கலாம். அத்துடன் முகம் நன்கு பொலிவும் பெறும்.



தக்காளியுடன் தேன் மற்றும் சீனி சேர்த்து முகத்தில் பூசுவதன் மூலமும் முகப் பொலிவைப் பெறமுடியும்.

முதலில் ஒரு சிறிய பாத்திரத்தில் 1 டேபிள் ஸ்பூன் அளவிற்கு சீனியை எடுத்துக்கொள்ளவேண்டும். இதனுடன் 1 ஸ்பூன் அளவிற்கு தேனை சேர்த்து நன்றாக கலந்து கொள்ளவும். தேன் பயன்படுத்துவதால் புருவ முடிகள் வெள்ளையாகிவிடும் என்று நினைக்காதீர்கள். தேன் அனைத்து வித



சரும பிரச்சினைகளுக்கும் தீர்வு வகிக்கும்.

தேன் மற்றும் சீனிக் கலவையை பாதியாக நறுக்கிய தக்காளியின் மேல் பூசி அதனை முகத்தில் தடவி நன்றாக மசாஜ் செய்ய வேண்டும். 5 நிமிடம் கழித்து உலர்ந்த துணியை மெல்லிய சூடான நீரில் நனைத்து முகத்தை துடைத்துவர ஒரிரு வாரங்களிலேயே முகம் நன்கு பொலிவுபெறும்.

---

## எம் குழந்தைகளுக்கு...



அவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் உதாரணமாக வறட்சியால் ஏற்படும் ஊட்டச்சத்துக் குறைபாடு போன்ற பாதிப்புகள் வாழ்நாள் முழுதும் அவர்களுக்குத் தொடர்ந்து பாதிப்புகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கும்.

மேலே குறிப்பிடப்பட்ட எட்டு ஆபத்துகளில் ஒரே குழந்தை ஒன்றுக்கும் மேற்பட்ட பாதிப்புகளுக்கு ஆளாகும் வாய்ப்பு அதிகம் இருக்கிறது. இதையும் இந்த ஆய்வறிக்கை கணிதவியல் ரீதியில் கணித்திருப்பது முக்கியத்துவம் பெறுகிறது. அந்த விபரங்கள் பின்வருமாறு.

உலகின் 99 விழுக்காட்டுக்கும் மேற்பட்டக் குழந்தைகள் குறைந்தபட்சம் ஏதேனும் ஒரு தீவிரக் காலநிலை மாற்ற விளைவை எதிர்கொள்ளவிருக்கிறார்கள்.

220 கோடி குழந்தைகள் குறைந்தபட்சம் ஏதேனும் இரண்டு தீவிரக் காலநிலை விளைவுகளுக்கு உட்படுவார்கள்.

170 கோடி குழந்தைகள் குறைந்தபட்சம் ஏதேனும் மூன்று தீவிரக் காலநிலை மாற்ற விளைவுகளை எதிர்கொள்ளவிருக்கிறார்கள்.

85 கோடி குழந்தைகள் குறைந்தபட்சம் ஏதேனும் மூன்று தீவிரக் காலநிலை மாற்ற விளைவுகளை எதிர்கொள்ளவிருக்கிறார்கள்.

33 கோடி குழந்தைகள் குறைந்தபட்சம் ஏதேனும் நான்கு தீவிரக் காலநிலை மாற்ற விளைவுகளை எதிர்கொள்ளவிருக்கிறார்கள்.

8 கோடி குழந்தைகள் குறைந்தபட்சம் ஏதேனும் ஐந்துத் தீவிரக் காலநிலை மாற்ற விளைவுகளை எதிர்கொள்ளவிருக்கிறார்கள்.

மேற்கண்டப் புள்ளிவிவரங்களின்படி ஒரு குழந்தை முன்பு குறிப்பிட்ட எட்டு தீவிரக் காலநிலை விளைவுகளில் ஏதேனும் ஒன்றுக்குக்கூட உட்படாதிருக்கும் வாய்ப்பு வெறும் ஒரு விழுக்காட்டுக்கும் குறைவே. இத்தகைய ஆய்வறிக்கை வெளிவருவது இதுவே முதல்முறை எனும் விதத்தில் இது மிகவும் முக்கியமானதாக இருக்கிறது.

இவை வெறும் புள்ளிவிவரங்களோ இல்லை ஜோதிடக் கணிப்புகளோ அல்ல. நம் பிள்ளைகளின் சூனியமான எதிர்காலத்தின் முடிவுரைக்கான குறிப்புகள். நாம் நம் குழந்தைகளுக்கு எண் கணிதம் எழுத்துக் கணிதமெல்லாம் பார்த்து வைத்தப் பெயர்களோ, பள்ளிகளில் தவமிருந்து பெற்றுக் கொடுத்த கல்வியோ இல்லை உயிரை உருக்கிச் சேர்த்து செய்த முதலீடுகளோ நாம் தீட்டியிருக்கும் எந்த எதிர்காலத் திட்டங்களுமோ இந்த முடிவுரைகளை மாற்றும் சக்தியற்றவை.

கிரேட்டா தன்பர்க்கால் தொடங்கப்பட்ட எதிர்காலத்திற்கான வெள்ளிக்கிழமைகள் (FRIDAYS FOR FUTURE) எனப்படும் காலநிலை மாற்றத்துக்கு எதிரான பள்ளிக் குழந் தைகளின் கவன ஈர்ப்புப் போராட்டங்களில் அவர்கள் ஏந்தியிருந்த பதாகைகளில் எல்லாருடைய கவனத்தை ஈர்த்த - இதயத்தை ஊடுருவிய வாசகம் ஒன்று உண்டு. அதில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது "நீங்கள் வயதாகி இறப்பீர்கள், ஆனால் நாங் களோ காலநிலை மாற்றத்தால் சாகப் போகிறோம்"

இந்த வார்த்தைகளை எந்தப் பெற்றோரால் தாங்கிக்கொள்ள முடியும்? எனினும் இது குற்ற உணர்வுகொள்வதற்காகவும் உடைந்துபோவதற்குமான நேரமில்லை. நம் முழு ஆற்றலையும் ஒன்றிணைத்து நம்மாலான அனைத்து முயற்சிகளையும் மிகத்தீவிரமாய் செயவதற்கான தருணம். கருவாகவிருக்கும் - கருவிலிருக்கும் - பள்ளியிலிருக்கும் -விளையாடிக்கொண்டிருக்கும் நம் பிள்ளைகள் வாழ்வதற்காய் கூக்குரலிடுகிறார்கள். இது பொருளாதாரத்துக்கும் சுற்றுச்சூழலுக்குமான போர் அல்ல. வாழ்வுக்கும் சாவுக்குமான போர். போரின் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் இறுதி நொடிகள் இதோ கடந்துகொண்டிருக்கின்றன. ஐ.பி.சி.சியின் இறுதி எச்சரிக்கைகளும் கெடுவும் காலாவதியாகிக் கொண்டிருக்கின்றன. ஒட்டு மொத்த மானுட சமூகமும் ஒன்றிணைந்து பேரழிவை எதிர்கொள்ள கைகோர்க்க வேண்டிய தருணமிது.



நம் பிள்ளைகள் மரணத்தின் விளிம்பில் நின்று ஓலமெழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். தம் பெற்றோரின் அவர்களின் பெற்றோரின் தவறுகளுக்காகவோ இயலாமைக்காகவோ அல்லது மவுனத்துக்காகவோ விலைகொடுக்கப் போகிறார்கள். உங்கள் காதுகளுக்கு அவர்களின் கூக்குரலைக் கேட்க முடிந்தால் வாருங்கள் நம்மால் இயன்ற தையும் அதற்கு மேலானதையும்கூடச் செய்வோம்.

# கொரோனாவுக்குப் பின்னரான ஆரோக்கிய மேம்பாடு



மருத்துவர்
தி.சுதர்மன்

நோய்கள் ஏற்பட்டு அவை குணமாகிய பின்பான ஆரோக்கிய பராமரிப்பில் சித்த மருத்துவமும் சரி தமிழர் பாரம்பரியமும் சரி மிகவும் ஆழமாகக் கரிசனை காட்டுகின்றன. முக்கியமாக உணவு முறைகள், வாழ்வியல் நடைமுறைகளில் மாற்றம், சிறப்பு சமய வழிபாட்டு முறைகள், உறவினர்கள், நண்பர்கள், குடும்ப மருத்துவர்களது சமூக ரீதியிலான அன்பான உள ஆதரவுகள், சித்த மருத்துவர்களது பத்திய அபத்திய நடைமுறைகள், நடைமருந்துகள் என நோயால் பாதிக்கப்பட்டவர்களின் ஆரோக்கிய மேம்பாட்டில் சமூகத்தின் பல மட்டங்களில் இருந்தும் பலவிதமான கரிசனைகள் காணப்படுகின்றன.



தற்போதைய கொரோனா தொற்று நோய் நிலையின் பின்னரான உள, உடல் உபத்திரவங்கள் அதிகரித்துக் காணப்படுவதுடன், தடுப்பூசியின் பின்னராகச் சிறு சிறு உபத்திரவங்கள் உணரப்பட்டுள்ளது என்றும் மக்களால் கூறப்படுகிறது. இவற்றுள் மெய்ப்பாட்டு முறைப்பாடுகளும் ( SOMATIC COMPLAINTS ) அடங்குகின்றன. அதாவது உள ரீதியாக ஒருவருக்கு உடல் ரீதியிலான உபத்திரவங்களை உணர்தல். இங்கு உண்மையாக உடலியல் நோய் நிலைகள் இராது.

கொவிட்-19 நோய்நிலைக்குப் பின்னரான பொதுவான குறிகுணங்கள்.

1. மூச்சுக் கஸ்ரம் அல்லது மூச்சு வாங்கல் (DIFFICULTY BREATHING OR SHORTNESS OF BREATH)
2. களைப்பு அல்லது இழைப்பு (TIREDNESS OR FATIGUE)
3. உடலோ, மூளையோ விரைவாக செயற்படும்போது மேற்படி குணங் குறிகுணங்கள் தீவிரமடைதல். ஒருமுகப்படுத்தி சிந்திக்க முடியாதிருத்தல் (SYMPTOMS THAT GET WORSE AFTER PHYSICAL OR MENTAL ACTIVITIES, DIFFICULTY THINKING AND CONCENTRATION )
4. இருமல் ( COUGH)
5. தலையிடி, நாரி நோ உழைவு, நெஞ்சு, வயிற்று நோ (HEADACHE, BACKPAIN, CHEST OR STOMACH PAIN)
6. நெஞ்சு படபடப்பு ( FAST-BEATING OR POUNDING HEART )
7. மூட்டுக்கள், தசைகளில் நோவு அல்லது குத்தி குத்தி வலித்தல் (JOINT OR MUSCLE PAIN- PINS-AND-NEEDLES FEELING)
8. வயிற்றுப்போக்கு ( DIARRHEA )
9. நித்திரைக் குழப்பம் ( SLEEP PROBLEMS )
10. காய்ச்சல் ( FEVER - CHANGES IN MENSTRUAL PERIOD CYCLES )
11. நிற்கும்போது தலை சுற்றல் ( DIZZINESS ON STANDING)
12. சர்மத் தடிப்புக்கள் ( RASHES)
13. மனநிலை மாற்றங்கள் ( MOOD CHANGES)
14. மணம் சுவைகளில் மாற்றம் ( CHANGE IN SMELL OR TASTE)
15. பெண்களில் மாத சுகயீனத்தில் மாறுதல்கள் (CHANGES IN MENSTRUAL PERIOD CYCLES)

மேற்படிக் குறிகுணங்கள் அல்லது உபத்திரவங்கள் குறுகிய காலத்துக்கோ, நீண்ட காலத்துக்கோ காணப்படலாம்.

**ஆரோக்கிய மேம்பாட்டுக்கான வழிமுறைகள்**

1. அறிவுசார் சிகிச்சை (COGNITIVE THERAPY)
2. உள ரீதியிலான ஆதரவு
3. உணவு முறையில் மாற்றம்
4. ஆன்மீக ஆதரவு
5. பிராணாயாமம்
6. உடற் பயிற்சியும் யோகாசனமும்
7. சித்தமருத்துவச் சிகிச்சைகளும் நடைமருந்துகளும்.

**1. அறிவுசார் சிகிச்சை** (COGNITIVE THERAPY )

அறிவுசார் சிகிச்சை என்பது நிகழ்காலப் பிரச்சினைகளை அறிவியல் ரீதியாகத் தற்கால நடைமுறைகளுக்கு ஏற்ப பார்ப்பதாகும். கடந்தகால அனுபவங்களைவிடத் தற்போதுள்ள நோய்நிலை, அது பரவும் விதம், அதனால் ஏற்படும் பாதிப்புக்கள், பாதிப்புக்களில் தனியே உடல் ரீதியிலான பாதிப்புக்கள், இறப்புக்கள் என்பதைவிட உள, சமூக, பொருளாதார நிலைகளை அடிப்படையாகக் கொண்ட பாதிப்புக்கள் என்பவற்றை ஆராய்ந்து அதற்கேற்றவாறு பெருந்தொற்று நிலைகளை அணுகுதல் வேண்டும்.

உதாரணமாகத் தடுப்பூசி போடுவதால் என்ன பயன்? தற்போதைய நிலையில் அது எவ்வாறு செயற்படுகின்றது? தடுப்பூசிகளின் பயன் முழுமையாகக் கிடைக்கவேண்டுமென்றால் சமூகத்தில் 75 வீதத்துக்கும் அதிகமானோருக்குத் தடுப்பூசிகள் செலுத்தப்படவேண்டும் (மந்தை நிர்ப்பீடணம் - HERD IMMUNITY) என்பது தொடர்பான விளக்கத்தைச் சமூகத்துக்கு ஊடகங்கள், ஊடாகச் சுகாதாரத் துறையினர் மற்றும் அறிவியல்சார் துறையினர் வழங்க வேண்டும்.

பெருந்தொற்றுத் தொடர்பான துறைசார் விளக்கங்களைச் சமூகத்தில் உள்ள அனைவரும் விளங்கக்கூடியவாறு விழிப்புணர்வை ஊடகங்கள் ஊடாகவோ வேறு தொடர் பாடல்கள் மூலமாகவோ வழங்கவேண்டும். இல்லையென்றால் மூடநம்பிக்கைகளும், அவநம்பிக்கைகளும், சந்தேகங்களும் நோய்களின் தாக்கங்களை தனிமனித, சமூக ரீதியாக அதிகரிக்கச் செய்வது தவிர்க்கமுடியாததாயிருக்கும்.

**2. உள ரீதியிலான ஆதரவு**

நோய் நிலையின்போதும், அது மாறிய பின்பும் உள்ள உபத்திரவங்களாலும், நோய் தொடர்பான செய்திகளாலும், தரவுகளாலும் பெரும்பாலானோர் அதிக பீதிக்குள்ளான நிலையில் உள்ளனர். இதனால் பல்வேறு உளவியல் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

தனிமை, ஆதரவற்ற தன்மை, இவ்வளவுதானா உறவுகள் என்ற விரக்தி, தனிமையில் ஏதேனும் நடந்துவிடுமோ என்ற பயம், தன்னால் வீட்டில் உள்ள ஏனையவர்களுக்கு நோய் வந்துவிடுமோ என்ற அச்சம், இறந்துவிட்டால் தனக்கான இறுதிக்கிரிகைகள் இல்லாமல் போய்விடுமோ என்ற அச்சம், தன்னால் தொடர்ந்து ஆரோக்கியமாக வாழமுடியுமா என்ற சந்தேகம் போன்றன மனதளவில் நெருக்கடிகளையும், ஆதரவற்ற தன்மையையும் உருவாக்கும்.

இவற்றை இல்லாது செய்ய இயன்றவரை நோய் வந்தவர்களுடன் கைபேசிகள் ஊடாக அல்லது முறையான சுகாதாரப் பாதுகாப்புக்களுடன் தொடர்பில் இருத்தல் வேண்டும். அவர்கள் மீது கரிசனை கொண்டிருப்பதை அவர்களுக்கு உணர்த்துதல் வேண்டும். உறவினர்கள், நண்பர்கள் அவ்வப்போது நலம் விசாரித்தலுடன், நேர் மறையான உரையாடல்களைப் பேணுதல் வேண்டும். நோய் மாறியபின் அவர்களை அரவணைத்துக் கொள்ளல்வேண்டும். அவர்களுக்கான ஆகாரங்களில் கூடுதல் கவனம் செலுத்துதல்வேண்டும். யாரேனும் இறப்பின் பெற்றோர், கணவன், மனைவி, பிள்ளைகள் என்போர் உடனிருத்தல் வேண்டும். இதன்போது அச்சுறுத்தல் குறைந்த நபர், தகுந்த சுகாதாரப் பாதுகாப்புக்களுடன் உடனிருத்தல் நன்று.

**3. உணவு முறையில் மாற்றம்**

நோய் உள்ள நிலையிலும் சரி, அது குணமடைந்த பிற்பாடும் சரி நாம் உள்ளெடுக்கும் உணவுமுறைகளில் மாற்றம் செய்தல் அவசியமாகின்றது. உடலானது நோய்க்கு எதிராகத் தொழிற்படும்போது மேலதிக சக்தி தேவையாகின்றது. அதேபோல் சேதமடைகின்ற கலங்கள் மீளமைக்கப்படவும், கிருமிகளுக்கு எதிரான பிறபொருளெதிரிகளை உருவாக்கவும், உடல் பலவீனம் அதிகரிக்கும்போது வேறு நோய்கள், தொற்றுக்கள் ஏற்படாதிருக்கவும் ஊட்டச்சத்துக்கள் அவசியமாகின்றன.

புரதச்சத்து அதிகமாகவும், உயிர்ச்சத்துக்கள் (உயிர்ச்சத்து B வகைகள், C,D), தாதுக்கள் ( ZINC, IRON) அதிகமாகவும் தேவைப்படுகின்றன. இவ்வூட்டச்சத்துக்கள் இலகுவாகச் சமிபாடு அடையக்கூடியனவாகவும், அகத்துறிஞ்சப்படக்கூடியனவாகவும் இருத்தல்வேண்டும்.

பழங்கள் அதிகளவில் உள்ளெடுத்தல் வேண்டும். புளிப்பான பழங்கள் நன்று. பழச்சாறுகளாக உள்ளெடுப்பது மேலதிக நீர்த்தேவையையும் நிறைவு செய்வதாக அமையும். போதியளவு நீர் அருந்துதல் வேண்டும். போதிய ஓய்வும், காற்றோட்டமான சூழலும் அவசியம்.

**உள்ளெடுக்கக் கூடிய உணவுகள்**

1. உழுந்தங்களி
2. கூழ் வகைகள்
3. கஞ்சி வகைகள்
4. கோழிப்புக்கை (வடமராட்சியில் சிறப்பானது)
5. சத்துமா உருண்டைகள், எள்ளுருண்டைகள்
6. கடல் உணவுகள், முட்டை
7. அவரையின மரக்கறிகள், பச்சை இலைவகைகள்.
8. பால் அல்லது பாலுடன் சிறிதளவு மஞ்சள், மிளகு, உள்ளி சேர்த்து குடித்தல்.
9. பனீர்
10. பழங்களில் உலர் திராட்சை, தோடம்பழம், பப்பாசிப்பழம்


**4. ஆன்மீக ஆதரவு**

எமது சமூகம் ஆன்மீக நாட்டமும், இறை நம்பிக்கையும் கொண்டதாகும். அதிலும் இவ்வாறான பெருந்தொற்றுக் காலத்தில் பாரம்பரியங்கள் மீதும் ஆன்மீகத்திலும் அதிக நம்பிக்கை ஏற்படுகின்றது. கோயில்கள், கூட்டுப்பிரார்த்தனைகள் சாத்தியம் இல்லாத நிலையில் மக்கள் கூடுதலான உளநெருக்கடிக்குள் உள்ளாவார்கள். ஆறுதல் இல்லாது போகின்றனர். தகவல் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி கூட்டுப்பிரார்த்தனைகள், தேவாரம் முதலிய திருமுறைகளைப் பாடுதல், பஜனைகளை ஒழுங்கமைத்தல், சமூக வலைத்தளங்கள் ஊடு சமய கருத்துக்களைக் கடத்துதல் என்பன உள ரீதியிலான அமைதியையும், உள ஆரோக்கியத்தையும் தரும் செயற்பாடுகளாக அமைகின்றன.

அகில இலங்கை சைவ மகாசபையினர் சூம் (ZOOM) ஊடாக பிரதி வெள்ளிதோறும் திருமுறைகள் பாடுவதற்கு ஒழுங்கு செய்து வருகின்றனர். சமய அமைப்புக்கள் இவ்வாறான கூட்டுப்பிரார்த்தனைகளை ஒழுங்கமைப்பது சிறந்தது. குறிப்பாக முதியவர்களுக்கு இவ்வாறான தொழி நுட்ப வசதிகளை அமைத்துக்கொடுப்பது பிள்ளைகளின் கடமையாகும்.

**5. பிராணாயாமம் (மூச்சுப்பயிற்சி)**

கொரனாத் தொற்றின்போது ஏற்படும் முக்கியமான பிரச்சினை ஒட்சிசன் பற்றாக்குறையாகும்.



இதன்போது ஆழமான சுவாசம் நடைபெறாமையாலும் சுவாச கலங்கள் பாதிப்படைவதினாலும் குருதியில் ஒட்சிசன் செறிவு குறைவடைகின்றது. இதனால் உடற்கலங்களுக்குத் தேவையான ஒட்சிசன் கிடைக்காது போகின்றது. இறப்புக்கள் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் இதுவாகும்.

குருதியில் ஒட்சிசன் செறிவை அளவிடுவதற்கு PULSE OXIMETER பயன்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் குருதியில் ஒட்சிசன் செறிவு மட்டம் ($SPO_2$) 95% மேல் இருத்தல்வேண்டும். இதற்குக் கீழ் குறையும்போது நோயின் தீவிரம் அதிகரிக்கும். பொதுவாக நோய் மாறிய நிலையில் ஒட்சிசன் மட்டம் குறைவடையலாம். எனவே உடலுக்குத் தேவையான ஒட்சிசன் அளவை அதிகரிப்பதற்குப் பிராணாயாமம் செய்வது அவசியமாகின்றது.

தொடக்கத்தில் மெதுவாக முடியுமான அளவுக்கு மூச்சை உள் இழுத்து வெளிவிடவேண்டும். பின்னர் படிப்படியாகப் பிராணாயாம முறைப்படி செய்தல்வேண்டும். படிப்படியாக நேரத்தையும் அதிகரித்துக்கொள்ளலாம். பிராணாயாமம் செய்யத் தொடங்கும்போது மருத்துவர்களின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளல்வேண்டும். மூச்சை உள்ளெடுத்தல், உள்வைத்திருத்தல், வெளிவிடுதல் என்பன பின்வரும் கால இடைவெளி விகிதத்தில் முறையே அமைதல் வேண்டும்.

அதாவது முறையே 1:4:2 என்ற விகிதத்தில் அமைதல்வேண்டும்.

நோய் மாறிய நிலையில் தொடர்ச்சியாகப் பிராணாயாமம் செய்து வருதல் ஆரோக்கியத்தைத் தருவதுடன் யோகாசன இருக்கைகளில் இருந்து செய்யும்போது சிறப்பான பயனைத்தரும்.

**6. உடற்பயிற்சியும் யோகாசனமும்**

பொதுவாகக் கொரேனாத் தொற்றுக்குப் பின்னர் உடல் மிகவும் களைப்பாகவும், பலவீனமாகவும் காணப்படும். கொரேனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டு அல்லது குறிகுணங்கள் தோன்றி குறைந்தது 14 நாள்களின் பின் குணங்குறிகள் இல்லாது போயிருந்தால், மெதுவாக நடைப் பயிற்சியைத் தொடங்கலாம். இதன்போது மூச்சு விடுவதில் சிரமம், களைப்பு தோன்றினால் நடைப்பயிற்சியை நிறுத்திக் கொள்ளவேண்டும்.

சுவாசத்தில் சிரமமோ, களைப்போ, நெஞ்சுப் படபடப்போ இல்லாவிடின் படிப்படியாக நடையினை ஒவ்வொரு நாளும் அதிகரித்துச் செல்ல வேண்டும். நடைப்பயிற்சி 15 நிமிடத்துக்கு மேற்படாது இருத்தல்வேண்டும். மேற்படி நாள்களில் எதுவித உபத்திரவங்களும் ஏற்படாதவிடத்துச் சூரிய நமஸ்காரம், புஜங்காசனம், வச்சிராசனம் போன்ற இலகு ஆசனங்களைச் செய்துகொள்ளலாம். பின்னர் படிப்படியாக வேறு ஆசனங்களையும் சேர்த்துக் கொள்ளலாம்.

கொரோனாத் தொற்றின் பின்னர் வச்சிராசனத்தில் இருந்து ஐந்து நிமிடங்கள் பிராணாயாமம் செய்துவருதல் உள, உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும்.


**7. சித்தமருத்துவ சிகிச்சைகளும் நடைமருந்துகளும்**

சித்தமருத்துவ சிகிச்சை முறைகளில் நோய்க்குப் பின்னான பராமரிப்புக்கள் காணப்படுகின்றன. இவை சித்த வைத்தியசாலைகளில் வைத்தியர்களால் நோயாளிகளின் நிலைக்கேற்ப செய்யப்படக்கூடிய மருத்துவ முறைகளாகும்.

1. நசியம் - பொதுவாகவே நோய்கள் அணுகாதிருக்க இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை நசியம் செய்ய வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. கொரேனாத் தொற்றின் போது சுவாசத்தொகுதியே கூடுதலாகப் பாதிக்கப்படுகின்றது. இதில் தொண்டைக்கு மேல் உள்ள சுவாச வழிகளைச் சுத்தப்படுத்திக் கொள்ள நசியம் செய்தல்வேண்டும்.

இதனைச் சித்தமருத்துவர்கள் நோயாளியின் உடல் நிலைக்கு ஏற்ப செய்வார்கள். நசியம் செய்வதால் கொரேனாத் தொற்றின் பின்னர் ஏற்படும் உபத்திரவங்களான தலைவலி, மணம் சுவைகளில் ஏற்படும் மாற்றம், நித்திரையின்மை, மனநிலையில் ஏற்படும் மாற்றங்கள் என்பன குறைவடைவதுடன், மனநிலை மாற்றங்களால் ஏற்படும் நெருக்கீடுகள், படபடப்பு, குருதி அமுத்தம் என்பனவும் குறைவடைகின்றன.

2. மர்த்தன சிகிச்சையும் ஒத்தடம் கொடுத்தலும் - மர்த்தன சிகிச்சை எனப்படுவது உடற்பகுதிகளில் எண்ணெய் பூசிப் பிடித்து விடுதலும் ஒத்தடம் கொடுத்தலும் ஆகும். இதனால் தசைப்பிடிப்பு, நாரிநோ என்பன குறைவடையும்.



3. உடற்தேற்றி மருந்துகள் - நோய் வாய்ப்பட்ட பின் பலவீனமடைந்திருக்கும் உடலையும் உடல் உறுப்புக்களையும் தேற்று வதற்காக வழங்கப்படும் மருந்துகளாகும். பெரும்பாலும் இலேகியங்கள், மணப்பாகுகள், சூரண வகைகள் ஆகும்.

4. நடை மருந்துகள் - நடைமருந்துகள் எனப்படுபவை உடற்தேற்றியாகவும் அதே வேளை குறிப்பாக நோயினால் பாதிக்கப்பட்ட உறுப்புக்களை சீரமைக்கக்கூடியனவாகவும், மீள நோய் வராமல் தடுக்கக்கூடியனவாகவும் அமைவதோடு நீண்டநாள்கள் (42 நாள்கள்- ஒரு மண்டலம்) இருக்கும்.

நடைமருந்துகள் நோய்த்தொற்றின் பின்னர் ஏற்பட்ட உபத்திரவங்களுக்கு ஏற்பவும் அமையும். அத்துடன் பசியைத் தூண்டக் கூடியனவாகவும் நன்றாகச் சமிபாடு அடையச்செய்யக்கூடியனவாகவும் அமைகின்றன. இலேகியங்கள், குடிநீர்கள், வடகங் கள், நெய், பிட்டு, மணப்பாகு, தேனூறல்.... எனப் பல காணப்படுகின்றன.

5. இவற்றைவிட நோயாளிகளின் நிலைக்கேற்ப வேறு சிகிச்சை முறைகளும் மருத்துவர்களின் நிதானிப்புக்களுக்கமைவாகமேற்கொள்ளப்படலாம்.

கொரோனா நோய்த்தொற்றுக்குப் பின்னரான பராமரிப்பில் ஒருங்கிணைந்த உள, சமூக, மருத்துவச் செயற்பாடுகள் தேவைப்படுகின்றன. இவற்றைவிட பாதிக்கப்பட்டவர்கள் தமது ஆரோக்கியத்தில் கூடுதல் கரிசனை கொள்வதும் முக்கியமானதாகும்.

## இந்த வார சுடோக்கு - 54

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 8 | | | 7 | | | |
| 5 | | | | | | 7 | | 1 |
| 9 | 2 | | 1 | | | | 3 | 6 |
| | | | 8 | 7 | 2 | | | 5 |
| | | 9 | | | | 3 | | |
| 1 | | | 9 | 5 | 3 | | | |
| 3 | 7 | | | | 9 | | 4 | 8 |
| 2 | | 6 | | | | | | 9 |
| | | | 7 | | | 2 | | |

இந்த சுடோக்கு விளையாட்டு தர்க்க ரீதியாக எண்களை ஒரொழுங்கில் அடுக்குவதற்கானது. நேராகவும் கிடையாகவும் 9 பெட்டிகளைக் கொண்டுள்ள இந்தச் சதுரத்தினுள் ஒவ்வொரு சிறிய பெட்டியினுள்ளும் 1 முதல் 9 வரையான ஒரு எண் இடப்பட வேண்டும். பெரிய பெட்டியின் கிடை மற்றும் நேர் வகிடுகளிலும் இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலைப் பெட்டிகளின் நேர் மற்றும் கிடை வகிடுகளிலும்கூட ஒரு எண் இரட்டிப்பாகக்கூடாது என்பதே விதி. முயற்சி செய்து பாருங்கள். சரியாக நிரப்பி விட்டீர்களானால் அதனை அப்படியே வெட்டி

**செம்மண்**
சுடோக்கு,
551 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

என்னும் முகவரிக்கு, உங்கள் முழுப் பெயர், வயது, தபால் முகவரி, தொடர்பு எண் என்பவற்றுடன் அனுப்பி வையுங்கள். சரியாக எழுதி வெற்றிபெறும் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250 பரிசாக வழங்கப்படும். விடையும் வெற்றிபெற்றவரின் விவரங்களும் அடுத்தவார பத்திரிகையில் வெளியாகும். வெற்றிபெற்றவர் பரிசுத் தொகையை செம்மண் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த வாரம் வெளியாகிய சுடோக்கிற்கான விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 3 | 1 | 5 | 7 | 4 | 8 | 9 | 6 |
| 4 | 7 | 5 | 6 | 9 | 8 | 3 | 1 | 2 |
| 6 | 8 | 9 | 1 | 3 | 2 | 4 | 7 | 5 |
| 5 | 2 | 6 | 4 | 1 | 3 | 9 | 8 | 7 |
| 3 | 4 | 7 | 8 | 5 | 9 | 6 | 2 | 1 |
| 1 | 9 | 8 | 2 | 6 | 7 | 5 | 4 | 3 |
| 8 | 5 | 4 | 7 | 2 | 6 | 1 | 3 | 9 |
| 9 | 6 | 2 | 3 | 4 | 1 | 7 | 5 | 8 |
| 7 | 1 | 3 | 9 | 8 | 5 | 2 | 6 | 4 |

குறிப்பு: கிரீன் மீடியா கவுஸ் நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் சக நிறுவன ஊழியர்கள் இப் போட்டியில் கலந்துகொள்ளமுடியாது.

# எம் குழந்தைகளுக்கு சிறந்த எதிர்காலத்தை விட்டுவைத்திருக்கிறோமா?

■ ஜீயோ டாமின் ■

'காலநிலை நெருக்கடி என்பது குழந்தைகளின் (வாழும்) உரிமைகள் மீதான நெருக்கடி' (THE CLIMATE CRISIS IS A CHILD RIGHTS CRISIS) என்ற தலைப்பில் ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியம் (UNICEF) அதிர்சியூட்டும் ஆய்வறிக்கை ஒன்றை சமீபத்தில் வெளியிட்டிருக்கிறது. நம் பிள்ளைகளுக்காக நாம் செய்யும் சேமிப்புகள் - முதலீட்டுப் பத்திரங்கள், அவர்களின் தடைதாண்டல் பரீட்சைப் பெறுபேறுகள், அறிக்கைகள் அல்லது அவர்களின் மருத்துவ அறிக்கையை விடவும் அதிமுக்கியமான மற்றும் கவனம்கொள்ள வேண்டியதான 'குழந்தைகளின் காலநிலை அபாயக் குறியீட்டை' (CHILDEREN'S CLIMATE RISK INDEX - CCRI) இந்த அறிக்கை வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது.

காலநிலை மாற்றம் குறித்து குழந்தைகளிடம் நாம் எப்படிப் பேசுவது? அவர்களை உளவியல் ரீதியாக காலநிலைப் பேரழிவுகளை எதிர்கொள்ள எப்படித் தயார்படுத்துவது? என்பது போன்ற விவாதங்களும் ஆய்வுகளும் வளர்ந்த நாடுகளில் நடந்துகொண்டிருக்கின்றன. வளர்ந்த நாடுகளின் பொருளாதாரப் பலத்தை அடைய முற்படுவதை மட்டுமே வளர்ச்சியென்று எண்ணிக்கொண்டிருக்கும் நம் தேசத்துக்கு "ஒரு பில்லியன் குழந்தைகள் காலநிலைப் பிறழ்வின் அதிதீவிர ஆபத்தில் சிக்கியிருக்கிறார்கள்" என்ற செய்தி பொருட்படுத்தத் தேவையில்லாததுதான். இந்த எண்ணிக்கை உலகம் முழுவதும் உள்ள சரிபாதிக் குழந்தைகளின் எண்ணிக்கைக்குச் சமம். அதோடு இது நாளைய ஆபத்து இல்லை இன்றைய ஆபத்து என்று இந்த அறிக்கை அழுத்தமாகச் சொல்கிறது.

எட்டு துல்லியமான புவியியல் வரைபடங்களுடன் உலகின் எந்தெந்தப் பகுதியில் வாழும் குழந்தைகள் எப்படியான பாதிப்புகளுக்கு ஆட்படுவார்கள் என்பதை முன்வைத்திருக்கிறது இந்த ஆய்வு. இதன் இரத்தினச் சுருக்கம் பின்வருமாறு.



### திடீரென உருவாகித் தீவிரமாகும் ஆபத்துகள்

உலகம் முழுவதும் மூன்றில் ஒரு குழந்தை அதாவது 82 கோடி குழந்தைகள் வெப்ப அலைகளால் கடுமையாகத் தாக்கப்படும் அபாயத்தில் உள்ளனர். காலநிலைப் பிறழ்வு இன்னும் தீவிரமாகி உலகம் இன்னும் வெப்பமடையும்போது இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும்.

உலகில் ஆறில் ஒரு குழந்தை அதாவது 40 கோடி குழந்தைகள் சூறாவளி தாக்குதலை எதிர்கொள்ளும் அபாயத்தில் இருக்கின்றனர். இவை 4வது 5வது கட்ட அதிதீவிர சூறாவளிகளாக மாறி எண்ணிக்கையில் அதிகரித்து தீவிர மழைப்பொழிவும் உடன் சேரும்போது நிலைமை இன்னும் மோசமடையும்.

உலகில் ஏழு குழந்தைகளில் ஒருவர் அதாவது 33 கோடி குழந்தைகள் ஆற்றுப்படுகைகளில் ஏற்படப்போகும் பெருவெள்ள அபாயத்தில் இருக்கிறார்கள். உலகின் வெப்பநிலைத் தொடர்ந்து அதிகரிப்பதால் ஏற்படும் அதிகபடியான நீராவியாதலால் மழைப்பொழிவு தொடர்ந்து அதிகரிப்பதும் இன்னொருபுறம் பனிமலைகள் உருகுவதும் நிலமையை இன்னும் தீவிரமாக்கும்.

உலகில் பத்தில் ஒரு குழந்தை அதாவது 24 கோடி குழந்தைகள் தீவிரமான கடலோர வெள்ள அபாயத்திலிருக்கிறார்கள். தீவிரமாகும் புயல்களும் தொடர்ந்து உயரும் கடல் மட்டமும் இந்த நிலைமையை மேலும் மோசமாக்கும்.

### மெதுவாகத் தொடங்கி தீவிரமாகும் ஆபத்துகள்

உலகில் மூன்றில் ஒரு குழந்தை அதாவது 92 கோடி குழந்தைகள் கடுமையான தண்ணீர் பஞ்சத்தை எதிர்கொண்டிருக்கிறார்கள். காலநிலைப் பிறழ்வு தீவிரமாகி வறட்சியின் தீவிரமும் எண்ணிக்கையும் அதிகரித்தல், மாசுபாடு, நீர்த்தேவையின் அதிகரிப்பு, நீருக்கான போட்டி ஆகியவை அதிகரித்து நீராதாரங்கள் அழியும்போது நிலைமை இன்னும் மோசமாகும்.

உலகில் நான்கில் ஒரு குழந்தை அதாவது 60 கோடி குழந்தைகள் மலேரியா, டெங்கு போன்ற நோய்களால் தாக்கப்படும் அபாயத்தில் இருக்கிறார்கள். உலக வெப்பமயமாதல் நுளம்புகள் மற்றும் நுண்ணுயிரிகளின் பெருக்கத்துக்குச் சாதகமாக இருப்பதால் இது தொடர்ந்து இன்னும் அதிகரிக்கும்.

> **உலகில் மூன்றில் ஒரு குழந்தை அதாவது 92 கோடி குழந்தைகள் கடுமையான தண்ணீர் பஞ்சத்தை எதிர்கொண்டிருக்கிறார்கள்**

### சுற்றுச்சூழல் சீரழிவும் சூழல் அழுத்தமும்

உலகின் தொண்ணூறு விழுக்காடு அதாவது 200 கோடி குழந்தைகள் 10-G/M3ஐ விட அதிகமான காற்று மாசுபாட்டுக்கு இலக்காகியுள்ளனர். மரபு எரிபொருள் பயன்பாடும் மற்ற காற்று மாசுபாட்டு மூலங்களும் கட்டுக்குள் கொண்டுவரப்படாத வரையில் இது மேலும் அதிகரிக்கும்.

உலகில் மூன்றில் ஒரு குழந்தை அதாவது 81.5 கோடி குழந்தைகள் மாசுபட்ட காற்று, நீர், நிலம், உணவின் மூலமாகக் கனவுலோகமான ஈயத்தின் (LEAD) பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள். பொறுப்பான உற்பத்தி நுகர்வு மற்றும் ஈயப்பொருட்களின் மறுசுழற்சி உறுதி செய்யப்படாததுவரை இது தொடர்ந்து அதிகரிக்கும்.

"இந்த பூமிப் பந்தின் தொடக்கூடாத எல்லைகளை எதிர்கொண்டு நின்று எதிர்த்து உடைத்து மீறிக் கடந்திருக்கிறோம். காலநிலை, பல்லுயிரினங்களின் அழிப்பு, நில - நீர் - காற்று - கடல் மாசுபாடு உள்ளிட்டவை புவியின் இயற்கைக் கட்டமைப்புகளைத் தொடர்ந்து சிதைத்துக்கொண்டிருக்கின்றன. இந்த எல்லைகள் மீறப்பட்டதால் மனிதர்கள் பிழைத்திருப்பதற்கான நுட்பமான இயற்கைச் சமநிலை குலைந்து போயிருக்கிறது. இவற்றின் விளைவுகள் மனித இனத்தைக் குறிப்பாக எளிய இலக்குகளான குழந்தைகளை வெகுவாகப் பாதிக்கின்றன. ஆகவே இப்போது காலநிலை நெருக்கடியானது குழந்தைகள் மீதான நெருக்கடியாகப் பரிணாமம் பெற்றிருக்கிறது" என்கிறது யுனிசெபின் இந்த அறிக்கை.

தொடர்ந்து "துரதிர்ஷ்டவசமாக இவை அனைத்தும் தொடக்கம்தான், ஐ.பி.சி.சியின் அறிக்கையின்படி 2030க்குள் உமிழ்வைப் பாதியாக்கவும் 2050க்குள் கரியமில வாயு (கார்பன்) சமநிலையை எட்டுவதற்குமான குறிக்கோளிலிருந்து பெரும்பாலான நாடுகள் வெகுதொலைவில் இருக்கின்றன. இந்தக் குறிக்கோளை எட்டுவதற்கான உறுதியான மாற்றங்களை முன்னெடுத்துத் தொடர்வதில்தான் நம் குழந்தைகளின் எதிர்காலம் இருக்கிறது" என்கிறது ஆய்வறிக்கை.

### குழந்தைகளுக்கே பாதிப்பு அதிகம்

பின்வரும் காரணங்களால் குழந்தைகள் பெரியவர்களைவிட அதிகப் பாதிப்புக்கு உள்ளாவர் என்கிறது அறிக்கை.

குழந்தைகள் உடலளவில் பலவீனமானவர்கள். அவர்களால் கடும் வறட்சி, வெள்ளம், வெப்ப அலைகள் போன்ற இயற்கைச் சீற்றங்களைத் தாங்கிப் பிழைத்திருக்க இயலாது.



குழந்தைகள் உடலியல் ரீதியில் மிகவும் பலவீனமானவர்கள். சூழல் மாசுபாடுகள் குறிப்பாக ஈயம் போன்ற கனவுலோகப் பாதிப்புகள் பெரியவர்களைவிட அதிகமாகக் குழந்தைகளை அதுவும் குறைந்த அளவிலேயே இருந்தாலும் கூடக் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும்.

டெங்கு, மலேரியா போன்ற காலநிலைப் பிறழ்வினால் உந்தப்படும் நோய்களைத் தாங்கும் திறன் குழந்தைகளுக்கு இயல்பிலேயே பெரியவர்களைவிடக் குறைவானது.

வாழ்வின் தொடக்க நிலையில் இருக்கும்

(21ம் பக்கம் பார்க்க)

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.09.2021 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781